# பழமொழிக் கதைகள்-2

கே.வி. குணசேகரம்.

# நூல் விபரம்

நூலின் பெயர் : பழமொழிக் கதைகள் 40

(கவிதை, உரை, பழமொழி, விளக்கம், கதைகள்)

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு :

மொத்தப்பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை

F.L. 1.14, டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர,

கொழும்பு – 12.

Tel : 011-2-341942

## அணிந்துரை

திரு.கே.வி குணசேகரம் அவர்களின் பழமொழி 400 என்னும் கதை நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவரது கதைகள் பலவற்றை நானும் எனது கனடாவில் வாழும் நண்பர்களும் படித்துள்ளோம். மிகவும் இலகுவானமொழியில் இனிமையாகவும், வாசிக்கும் அனைவருக்கும் விளங்கும்படியும் எழுதுவது இவரது சிறப்பான தன்மை. வேதங்கள், உபநிடதங்கள், இந்து தத்துவங்கள் பலவும் பல முறை வாசித்தாலும் புரிந்து கொள்ள முடியாது. அதனால் பலர் வாசிப்பதில்லை. இவரது நூல்கள் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது. இவரது நூல்களை கதைகள் மூலம் விளங்கிக் கொண்டமையால் மற்றவர்களுக்கு இந்து தத்துவங்களை விளக்கக் கூடிய அறிவைப் பெற்றுள்ளேன்.

இவர் எழுதிய இன்பத்தை அள்ளித் தரும் இந்துமதம் என்ற பத்து நூல்களும் கதைநூல்கள். வேத உபநிடத தத்துவக் கருத்துக்கள் சுவையான கதைகளாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சைவ சமயம் பெருமை பெறுகிறது.

நான் பாடசாலையில் 60 வருடங்களுக்கு முன் பழமொழிகளை ஆங்கிலத்தில் கற்றேன். அப்போது பாடங்கள் ஆங்கிலமொழி மூலம் போதிக்கப்பட்டமையால் பழமொழிகளையும், இந்து தத்துவங்களையும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பாடசாலை விட்ட பின்பு ஊரவர்கள் பல்வேறு விதமான பழமொழிகளைக் கூறுவார்கள். அறிஞர்கள் தமது சொற் பொழிவு - களில் பழமொழிகளைத் தாராளமாகச் சபைக்குக் கூறுவர். அவர்கள் பேசும் போது விளங்கும் பழமொழிகள் வீட்டுக்கு வந்த பின் மறந்து விடும். ஆனால் குணசேகரம் அவர்கள் பழமொழிகளை வாழும்

சமூகப் பிரச்சினைகளுடன் கூறுவதால் வாசித்த பின் மறக்கப்படவில்லை.

பழமொழிகள் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றன. அதனால் அவை பற்றி மிகவும் தெளிவாக விளக்குவதோடு அதைப் புரியவைக்கப் பொருத்தமான கதைகளும் கூறப்பட்டுள்ளது. கதைகள் யாவும் எழுத்தாளரால் உருவாக்கப்பட்டுள்ளது. எளிமை – யாகவும், தெளிவாகவும், எடுத்துக்கொண்ட பழமொழிகளை விளங்கிக் கொள்ளவும் கே.வி. குணசேகரம் அவதானமாகச் செயற்பட்டிருக்கிறார்.

அவர் எழுதிய பல கதைகளை நான் வாசித்திருக்கிறேன். தான் எடுத்துக் கொண்ட விடயத்தை மிகவும் எளிமைப்படுத்தி வாசகர்களை உற்சாகப்படுத்தி ஒரு வரியைக் கூடத் தவற விடாது வாசிக்க வைக்கும் திறமை அவரிடம் நிறைந்து காணப்படுகிறது. 3000 மேற்பட்ட ஆக்கங்களைத் தந்த திரு. குணசேகரம் அவர்கள் இன்னும் பல ஆக்கங்களைத் தந்து இந்து சமயத்தை வளம்படுத்தி வளர்த்தல் வேண்டும். பயன்மிக்க அரிய சேவையைச் செய்து இந்துசமயத்தை வளர்க்கும் அவருக்கு எமது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையார் என்றும் உதவி செய்கிறார். வாழ்க அவரது நாமம் ; வளர்க அவரது சேவை.

அன்புடன்,
து. தனபாலசிங்கம்,
J.P அகில இலங்கை,
கோப்பாய் மத்தி,கனடா.

## என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 -1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும்

உரை விளக்கம் கதை என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய்மத்தி,கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 “அன்பானவர்களே, அறிவுடையவர்களுடன் மட்டுமே நட்புக் –கொள்ளல் வேண்டும். அறிவுள்ளவர்கள் நட்பை உயிராகக் கருதுவார்கள். அவர்களது நட்பு வளர்பிறையைப் போலத் தினமும் வளர்ந்து கொண்டேயிருக்கும். ஒருவர் அறியாமை காரணமாக நிலை தடுமாறிச் செல்லும் போது அறிவுடையவர்கள் நட்புக்காக கண்டித்து நல்லுரை கூறித்திருத்துவார்கள். அழிவு தரும் தீமைகளை அணுகாது தடுத்து, நல்வழியில் நடக்கும்படி செய்து, அழிவு நேரும் என்றாலும் கூட, உடனிருந்து தாமும் துன்பத்தை ஏற்றுத் துன்பப்படுவதே அறிவுடையார்களது குணமாகும்”.

“அறிவுள்ளவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். அதனால் உங்களுக்கு நன்மைகள் பல ஏற்படுவதோடு எந்தத்தீமையும் அணுகாது. உங்கள் உயர்ந்த நண்பர் உங்கள் பகைவரிடத்து ஒட்டி நண்பர்களைப் போல நடந்து அவர்களை அழிக்கவும் வல்லவர்கள். இப்படியானவர்களை நண்பர்களாகப் பெற்றால் எத்தகைய பெரும் பகையையும் எளிதில் வென்று விடலாம்.”

“மாவடி மன்னனுக்கு, அருகே உள்ள இலகடி நாட்டின் மன்னன் ஓயாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான். போர் தொடுத்தால் அவனை வெல்ல முடியாதென்று மாவடி மன்னனுக்குத் தெரியும். மாவடி மன்னன் போர் தொடுக்கட்டும் என்று இலகடி மன்னன் தொந்தரவுகள் செய்து

கொண்டிருந்தான். இதை மாவடி மன்னன் சதானந்தனுக்குக் கூறி இதற்கு வழிவகை செய்யுமாறு இரந்தான்.”

“மன்னா, உனது மகளை விரும்பிக் கேட்ட செங்கலடி மன்னனுக்குத் திருமணம் செய்து கொடு, அவன் ஏற்கனவே திருமணமானவனென்றாலும் பட்டத்தரசியை இழந்தவன். வாரிசு இல்லாதவன். திருமணம் செய்தவனென்று பாராது செய்து கொடு ‘ என்றார்”

“ திருமணம் நடைபெற்றுது. திருமணம் நடைபெற்ற பின் இலகடி மன்னன் மாவடி நாட்டிற்கு எந்தத் தொந்தரவும் செய்யவில்லை. ஒரு நாள் சதானந்தன் மாவடி மன்னனுக்குச் சொன்னார்; “மன்னா , இலகடி மன்னன் போர் தொடுத்திருந்தால் உன்னை வென்றிருப்பான். ஆனால் அவனுக்குப் போர் தொடுக்கும் எண்ணம் இல்லை. செங்கலடி மன்னனின் தூண்டுதலினால் தான் இலகடி மன்னன் உனக்குத் தொந்தரவுகள் செய்து கொண்டிருந்தான். இனி எதுவும் நடைபெறாது” என்றார் சதானந்தன்”.

“அன்பானவர்களே, இலகடி மன்னனும் செங்கலடி மன்னனும் நண்பர்கள். சதானந்தன் செங்கலடி மன்னனின் உயிர் நண்பன். அதனால் மாவடி மன்னனுக்கு உதவுவது போல உதவித் தனது நண்பனது விருப்பத்தைப் பூர்த்தி செய்தான். இப்படியான

நண்பர்களைத் தான் நீங்கள் தேடிக் கண்டு பிடித்து நட்புக் கொள்ள வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மாற்றத்தை மாற்றம் உடைத்தலால் மற்றவர்க்கு***
***ஆற்றும் பகையால் அவர்க்களைய – வேண்டுமே***
***வேற்றுமை யார்க்குமுண் டாகலான் ஆற்றுவான்***
***நூற்றுவரைக் கொன்று விடும்.***

பகைவரிடத்தில் ஒட்டி உறவாடி நண்பனைப் போல நடந்து, அவரை வெல்ல வல்லவர்களை நண்பர்களாகப் பெற்றால், எத்தகைய பெரும் வல்லவர்களையும் வென்றுவிடலாம். **‘ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்று விடும்”** என்பது பழமொழி.

2 “அன்பானவர்களே, அறத்தைச் செய்யுங்கள். இடைவிடாது செய்யுங்கள். தானம் என்பது ஓரிரு முறைகள் கொடுத்தலல்ல. தொடர்ந்து கொடுத்தலே தானமாகும். வசதியுள்ள வேளை கொடுத்து விட்டு வசதியில்லாத வேளையிற் கொடுக்காமல் விடுவது தருமமல்ல. எனவே தொடர்ந்து கொடுங்கள். உங்கள் தகுதிக்கேற்றவாறு தருமம் செய்யலாம். பெருவணிகன் ஒருவன் பலநூறு தானிய மூடைகளை அவித்து அன்னதானஞ் செய்கிறான். அவனைப் போலக் குடியானவனால் செய்ய முடியாது. அதற்காகக் குடியானவன் தருமம் செய்யாது வாழலாமா? அவனவன் தனது தகுதிக்கேற்பத் தருமம் செய்தல் வேண்டும்”

‘வேலூரிலே ஒரு விவசாயி இருந்தான். அவன் விளைவிக்கும் பொருட்களில் ஒவ்வொன்றை எடுத்துச் சந்தையில் விற்று விட்டு அந்தப் பணத்தை அவ்வூரில் உள்ள முதியோர் இல்லமொன்றிற்குத் தினமும் கொடுப்பான். அந்த ஊரில் உள்ள வணிகன் ஒருவன் தினமும் ஒரு மூடை அரிசி அந்த முதியோர் இல்லத்திகுக் கொடுப்பான். ஊரவர்களும் மடத்திலுள்ளோரும் அந்த வணிகனின் கொடையைப் பற்றிப் பெரிதாகப் பேசுவார்கள். அவனை மதிப்பார்கள்”.

“ஒரு நாள் ஒரு துறவி அந்த மடத்திற்கு வந்து பல நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது அந்த ஊர் மக்களுக்கு அவர் உபதேசம் செய்வார். பேய், பிசாசு ஓட்டுவார். பில்லி, சூனியம் எடுப்பார். சோதிடம் சொல்வார். இதனால் அவரைப் பெரிய ஞானி என்று மக்கள் நினைத்தனர்”.

“ஒரு நாள் ஊர் மக்கள் வணிகனது கொடையைப் பற்றித் துறவிக்குச் சொன்னார்கள். அதற்குத் துறவி சொன்னார்; “அடியவர்களே, கொடை என்பது பற்றி அறியாதவராகவே நீங்கள் இருக்கின்றீர்கள். தினமும் தருமம் செய்தல் வேண்டும். செய்யும் தருமத்தை இடையில் விடக்கூடாது. அப்படி விட்டால் நெல்லை விதைத்து விட்டு இடையில் நீர் பாய்ச்சாததைப் போன்றதாகிவிடும். தருமம் செய்யும் பொருள் தருமம் செய்பவருடையதாக இருத்தல் வேண்டும். விவசாயி சிறுதொகையைக் கொடுத்தாலும் தினமும் கொடுக்கிறான். தனது உழைப்பைக் கொடுக்கிறான். வர்த்தகர்

கறுப்புச் சந்தை வியாபாரி. தானியங்களுக்குக்குள்க் கல்லைக் கலந்து விற்பவர். கல்லை வாங்கும் வாடிக்கையாளர்களே உண்மையாகத் தருமம் செய்பவர்கள். அவர்களை அறியாமல் தருமம் செய்கிறார்கள். வர்த்தகன் கொடுத்தாலும் அந்தப் பலன் வாடிக்கையாளரைத்தான் சென்றடையும். அதனால் உங்கள் உழைப்பிலிருந்து வரும் வருவாயைத் தினமும் தருமம் செய்யுங்கள். அது சிறுதொகையாக இருந்தாலும் பரவாயில்லை."

"ஆகவே அன்பானவர்களே, பகட்டுக்கும், புகழுக்கம் ஆசைப்பட்டுத் தருமம் செய்யாது ஆத்ம விடுதலைக் காகத் தருமஞ் செய்யுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*பட்ட வகையால் பலரும் வருந்தாமல்*
*கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்*
*முட்டுடைத் தாகி இடைதவிர்ந்து வீழ்தலின்*
*நட்டறான் ஆதலே நன்று*

தருமம் செய்வோர் இடர்பாடுகள் வந்த போதும் தருமஞ் செய்வதை நிறுத்தக் கூடாது. தொடங்கியதை முழுமையாகச் செய்து பயன் பெறல் வேண்டும். **'இடை தவிர்ந்து வீழ்தலின் நட்டறான் ஆதலே நன்று'** என்பது பழமொழி.

3 "அன்பானவர்களே, பகையென்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீய செயலை ஒருவன் விளையாட்டாகக் கூட விரும்பக்கூடாது. பகை ஒருவரைத் திடீரென அவருக்குத் தெரியாது தாக்கும். உயர் இரத்த அழுத்தம் போலத் தாக்கி வருத்திக் கொல்லக்

கூடியது. அதனால் பகை கொள்ளாதிருத்தல் வேண்டும். தற்செயலாகப் பகை உண்டானால் அதை எப்படியாவது எந்த வழியைப் பாவித்தாவது நீக்கிக் கொள்ள வேண்டும்”.

“அணைக்கப்படாதிருக்கும் சிறு நெருப்புப் பொறியானது காலப்போக்கில் காற்றின் உதவியால் பெரும் நெருப்பாவதைப் போலப் பகையும் சந்தர்ப சூழ்நிலை வரும் போது மனிதனைத் தாக்கி அழித்து விடும். தனக்குத் துணையாக வருவதற்கு யாரும் இல்லாத நிலையில் பகைவர் இருவர் இருந்தால், அந்தப் பகைவருள் ஒருவரை நண்பராக்கிக் கொள்ளல் வேண்டும். அதுதான் கொடும்பகையை விலக்கும் சிறந்த வழியாகும். இப்படி நடந்தால் பகைவருடைய செயல்கள் தடைப்பட்டு விடும். பகைவரில் ஒருவரை நண்பராக்கினால் அவர் தனது நண்பர்களுடன் கூடி அவருக்காக உழைப்பார். இதனால் பகைவனின் தைரியம் குறைந்து விடும்.”

“மாறனும் வேலவனும் பாடசாலையில் கற்கின்ற காலத்திலேயே பகைவர்கள். மாறனுடைய நண்பன் கணேசன். அதனால் கணேசன் காரணமின்றி வேலவனுடன் பகை பாராட்டினான். வேலவன் வர்த்தகன். மாறன் அவனது வர்த்தக நிலையத்தில் திருடர்களைக் கொண்டு திருடிவிப்பான். இதற்குக் கணேசனும் உடந்தையாக இருந்தான். கணேசன் வேலனின் இனத்தவன். வேலவனின் தங்கை மல்லிகாவின் மீது கணேசனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் மல்லிகா அவனை

விரும்பவில்லை. அதனால் துன்பப்பட்ட கணேசன் மாறனுடன் சேர்ந்து பல கொடுமைகளை வேலவனுக்குச் செய்து வந்தான். வேலவன் எப்படியாவது கணேசனை நண்பனாக்கி விட வேண்டுமென்று விரும்பினான். அதனால் கணேசனோடு தருணம் வரும்போதெல்லாம் கதைப்பான். அத்துடன் தனது தங்கையிடம் தன்னுடன் காரணமின்றிக் கணேசன் பகை பாராட்டுகிறான் என்று சொல்லி வைத்தான்".

"ஒரு நாள் மல்லிகாவைக் கண்ட கணேசன் தனது விருப்பத்தைச் சொன்னான். அதற்கு மல்லிகா சொன்னாள்; "ஊரில் உள்ள கெட்டவர்களுடன் சகவாசம் வைத்துள்ள உன்னை நானல்ல எந்தப் பெண்ணும் விரும்பாள்." என்று கூறி விட்டுச் சென்று விட்டாள்".

"அதன்பின் கணேசன் மாறனுடன் சேர்வதில்லை. வேலவனுக்குத் துன்பங்கள் செய்யாதே என்று சொன்னான். அதைக் கேளாத மாறன் மீண்டும் வேலவனின் வர்த்தக நிலையத்தைக் கொள்ளையிட்டான். அதனால் மனம் வருந்திய கணேசன் உண்மை நிலையைக் காவல்துறையினருக்குச் சொன்னான். காவல் துறையினர் மாறனைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர்".

"பகைவனை வெல்ல முடியாவிட்டால், பகைவனின் நண்பரோடு நட்புக்கொண்டு அவனைத் தனது பக்கம் சேர்க்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இப்படி

நண்பராக்கிக் கொள்வது இடையனின் ஆட்டுப்பட்டியைக் காவல் காக்கும் நாய்க்கு ஆடு திருட வந்த கள்வர்கள் எலும்பைப் போட்டு விட்டு ஆடுகளைத் திருடிச் செல்வது போன்றது. எலும்பைப் பெற்ற நாய் கள்வருக்கு உதவுவது போலப் பகைவருக்கு உதவி செய்தவர்கள் மாறி விடுவர்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்*
*வீரஞ் செயக்கிடந்த தில்லென்று - கூடப்*
*படைமாறு கொள்ளப் பகைதூண்டல் அஃதே*
*இடைநாயிற் கென்பிடு மாறு*

பகைவர் இருவரான இடத்து, அவர்களுள் ஒருவரை உறவாடிப் பிடித்துத் தனது நண்பராக்கிக் கொள்ளுதல் வேண்டும். **'இடை நாயிற்கு என்பு இடுமாறு'** என்பது பழமொழி.

4 "அன்பானவர்களே, ஒருபோதும் தன்னைத்தான் உயர்த்திக் கொள்ளக்கூடாது ; தன்னைத் தான் புகழக்கூடாது; தனது செயலை விட உயர்ந்த செயல் எதுவுமில்லை என்று எண்ணக்கூடாது. இப்படி நடந்து கொண்டால் பெரும் அவமானங்கள் பலவற்றைச் சந்திப்பதோடு புகழும் மறைந்து விடும். ஒருவர் புகழுடன் வாழ வேண்டும் . ஒருவர் பெறும் உயர்வு மிகுந்த புகழே இவ்வுலகில் அழியாது நிலைத்திருந்து அவரது நாமத்தை நிலை நிறுத்தும். ஆகையால் புகழைக் கெடுக்கும் விடயங்களில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்".

“ஒருவர் இன்னொருவரிடம் ஓர் உதவியைச் செய்ய முடியுமா? செய்ய முடியாதா? என்று கேட்பவருக்குத் தெரியாது. கேட்கப்படுபவருக்குத் தெரியும். கேட்கப்படுபவர் தன்னால் இயலாது என்றால் உடனே பெருந்தன்மையுடன் இயலாது என்று சொல்லி விடவேண்டும். அதை விடுத்து சொல்வதற்கு அஞ்சியோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர் கேட்ட உதவியைச் செய்வேன் என்று கூறிவிட்டு இயலாமையால் அவ்வுதவியினைச் செய்யாது விட்டால் உதவிகோரியவர் பாதிப்புக்குள்ளவார். சில சமயம் அவரின் உயிரே போய்விடும். அதனால் உங்களிடம் யாராவது உதவிகோரி வந்தால் உங்களது நிலை பற்றி ஆராயுங்கள். அதன் பின்பே பதிலைக் கூறுங்கள். இல்லை என்று சொல்வதால் அவமானமோ, பழியோ உண்டாகாது. ஒப்புக் கொண்டு விட்டுச் செய்யாமல் விட்டால் தான் பழியும் அவமானமும் உண்டாகும்.

“வேலூரிலே நாராயணசாமி என்றொரு பெரியவர் இருந்தார். அவர் தன்னைத்தான் பெரியவர் என்று நினைத்திரு ந்தாரே தவிர உண்மையில் அவர் பெரியவரல்ல. அவரின் வீட்டில் வேலை செய்பவன் ஆறுமுகம். அவனது மகளுக்குத் திருமணம் முற்றாகியிருந்தது. அவன் தனது மகளுக்கு ஐம்பது பவுணில் நகை செய்து போடுவதாக வாக்குறுதியளித்திருந்தான். அவனிடம் நாற்பத்தைந்து பவுண் நகை இருந்தது. அவன் மிகுதி ஐந்து பவுண் நகை வாங்க நாராயணசாமியிடம் உதவி கோரினான். நாராயண சாமி சொன்னார்; “ஆறுமுகம், நீ சிறு வயதிலிருந்தே எனது வீட்டில் வேலை செய்து வருகிறாய். அதனால் நான் உனக்கு

கடனாகக் காசுதர விரும்பவில்லை. அன்பளிப்பாகத் தருகிறேன்" என்றார். "நாரயணசாமியின் மனைவி சகுந்தலை மிகவும் நேர்மையானவள். அவள் ஆறுமுகத்தை அழைத்துச் சொன்னாள்; "ஆறுமுகம் நீ சிறு வயதிலிருந்தே இங்கே வேலை செய்கிறாய். உனக்கு இவரைப் பற்றித் தெரியும். இவர் சொன்ன எதையும் செய்வதில்லை. இவர் அன்பளிப்பாகத் தரும் பணத்தை வாங்கு. ஆனால் நம்பியிராதே" என்றாள்."

"ஆறுமுகத்திற்கு அவளது பேச்சு நியாயமாக இருந்தாலும் தான் சிறுவயதிலிருந்து வேலை செய்வதால் அவர்கட்டாயம் தருவார் என நம்பினான். நாராயணசாமி சொன்னதைப் பற்றியும், அவரது மனைவி சொன்னதைப் பற்றியும் ஆறுமுகம் தனது மனைவிக்கும் தனது நண்பனுக்கும் சொல்லியிருந்தான்."

"திருமண நாள் வந்தது. ஆறுமுகம் நாராயணசாமியிடம் சென்று பணத்தைக் கேட்டான். அதற்கு நாராயணசாமி சொன்னார்; "ஆறுமுகம், மணிவண்ணன் ஐம்பதினாயிரம் ரூபா வாங்கினவன். இன்று தருவதாகச் சொன்னவன். தந்தவுடன் தருகிறேன். நீ மாப்பிள்ளை பகுதிக்குத் தருவதாகச் சொல்" என்றார். அவரது பேச்சை நம்பிய ஆறுமுகம் மணிவண்ணனிடஞ் சென்று விசாரித்தான் ; "ஆறுமுகம், நீ எத்தனை வருடகாலமாக நாராயணசாமியின் வீட்டில் வேலை செய்கிறாய். அவன் எப்பொழுதென்றாலும் சொன்னபடி நடந்தவனா....? என்றான் மணி வண்ணன்".

“ஆறுமுகம் நிலைகுலைந்து போனார். அவரால் சிந்திக்கக்கூட முடியவில்லை; ‘ஆறுமுகம் நீ சொன்னது போல சீதனத்தைத் தந்து விட வேண்டும். சிறிதளவு குறைந்தாலும் கலியாணம் நடைபெறாது. பிறகு சபையில் மானங் கெடாதை” என்று மாப்பிள்ளையின் தகப்பன் சொன்னது நினைவிற்கு வந்தது”.

“ஆறுமுகம் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்று நடந்ததைச் சொல்லி அழுதான். அதற்கு அவரது நண்பர் சொன்னார்; “எனக்கு நாராயணசாமியின் மீது நம்பிக்கை இல்லை. நீ பல வருட காலம் சேவகம் செய்தமையால் அவர் தருவாரென நினைத்தேன். தற்செயலாகத் தராவிட்டால் நீ கஷ்டப்படுவாய், திருமணம் நடைபெறாது என்று நினைத்துப் பணம் கொஞ்சம் மாறி வைத்துள்ளேன். கொண்டு போய்க் கலியாணத்தை முடி” என்றார்”.

“திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஊரவர் நாராயசாமியைப் பரிகசித்துச் சிரித்தனர். ஆதனால் அன்பானவர்களே, நாராயணசாமியைப் போல வாழாதீர்கள். பேசிய தொகையைக் கொடுக்காது விட்டிருந்தால் அந்தப் பெண்ணின் வாழ்வு சீரழிந்திருக்கும். இடையன் தனது மந்தைகளுக்கு உணவுக்காக பெரும் மரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி வெட்டி அழிப்பான். அது போல இல்லாததைத் தருவதாக வாக்களிப்பவனின் புகழும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அழிந்து போய் விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்*
*உடையதொன் றில்லாமை யொட்டின் - படைபெற்று*
*அடைய அமர்த்தகண் பைந்தொடி! அஃதால்*
*இடையன் எறிந்த மரம்.*

இடையன் கிளை கிளையாக ஒடித்துத் தனது மந்தைகளுக்குப் போட்டு மரத்தை அழிப்பது போலத் தன்னிடத்தில் இல்லாததைத் தருவதாக வாக்களிப்பவரின் புகழும் அற்றுப் போகும்' **'இடையன் எறிந்த மரம்**' என்பது பழமொழி.

5 "அன்பானவர்களே, நாம் ஒருவரின் தகுதியை அறிந்து தான் தானம் பெறச் செல்லுதல் வேண்டும். ஒருவன் தானம் செய்ய விரும்புவான். தானம் பல வழிகளிற் செய்யப்படும். தனவந்தன் ஒருவனிடம் ஒரு கோயிலைக் கட்டக் கூடிய பணம் இருக்கும். அதை விட வருவாய் கொடுப்பதை விட அதிகமாக இருக்கும். அதனால் அவன் கொடுப்பான். அவன் கொடுக்கிறான் என்பதற்காக இன்னொருவனிடம் அதேயளவு பணத்தை எதிர்பார்க்கக்கூடாது. அப்படி எதிர்பார்த்தால் அவன் தானம் செய்வதை விரும்பமாட்டான். 'பசுவிற்குத் தண்ணீரை கூட இரந்து கேட்டு வைக்கக்கூடாது" என்று எமது பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. தானம் என்பது மனமகிழ்வுடன் கொடுப்பது. மனமகிழ்வுடன் கொடுப்பவனை வாழ்த்தி மகிழ்ந்து பெறுதல் வேண்டும். இல்லாவிட்டால் சாதாரண மனிதர்களால் தருமம் செய்ய முடியாது. எனவே உணவிற்காக ஒருவனின் வீட்டுக்குச் செல்வதானாலும் கூட அவனது தகுதியறிந்தே செல்ல வேண்டும்."

“வேலூரில் சிவசங்கரன் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரும் தனவந்தனல்ல. ஆனால் அவர் ஊரவர் பொது விசயங்களுக்கெனச் செல்லும் வேளைகளில் செல்பவர்களின் மனங்கோணாதளவில் கோரியதைக் கொடுப்பார். வேலூர் பிள்ளையார் கோயிலில் தீர்த்தக் கேணி இல்லை. ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து பிள்ளையாருக்கு ஒரு தீர்த்தக் கேணி வெட்டிக் கட்ட விரும்பினர். அதனால் ஊரில் நிதி சேகரித்தனர். நிதி சேகரிப்பவர்கள் சிவசங்கரனின் வீட்டுக்குச் சென்றனர். சென்றவர்களை அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். வந்தவர்களுள் ஒருவன் சொன்னான்; “ஐயா, எமது பிள்ளையா ருக்குத் தீர்த்தக்கேணி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆதனால் ஒரு தீர்த்தக் கேணி வெட்டிக் கட்ட விரும்புகிறோம்”

“மிகவும் நல்ல பணி. நான் என்னால் முடிந்த உதவி செய்கிறேன்” என்றார் சிவங்கரன்”

“எமது ஊரவர்கள் மிகவும் வறிவர்கள். தீர்த்தக்கேணி கட்ட எட்டு இலட்ச ரூபா தேவை என்று பொறியியலாளர் சொல்கிறார். தாங்கள் ஒரு ஐந்து இலட்சம் ரூபா தரல் வேண்டும்” என்றான் வந்தவன்”

“சிவசங்கரன் சொன்னார்; “எனக்கு ஐந்து பிள்ளைகள். தாய் தந்தையர்களின் பொறுப்பும் உள்ளது. அதனால் என்னால் உதவி செய்ய முடியவில்லை” என்று கூறிவிட்டு எழுந்து சென்று

விட்டார். தன்னால் கொடுக்க முடியாததை கொடுக்க முடியாதென்று சொல்பவரின் புகழில் குறைவேற்படாது. எனவே நாம் ஒரு செயலைத் தொடங்கு முன் அது சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றக் கூடியவர்களோடு கலந்துரையாடி முடிவெடுத்தல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மறாஅ தவனும் பலரொன் றிரந்தால்***
***பெறாஅ அன்பேதுறுதல் எண்ணிப் - பெறா அன்***
***கரந்துள்ள தூஉம் மறைக்கும் அதனால்***
***இரந்தூட்குப் பன்மையோ தீது.***

இரந்து உண்ணுவதற்குக் கூடப்பலருடன் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் கொடுக்க முடியாதவன் தருமம் செய்வதை நிறுத்தி விடுவான்; **'இரந் தூட்குப் பன்மையோ தீது'** என்பது பழமொழி.

6 "அன்பானவர்களே, வாழ்க்கை இரு தன்மைகளை உடையது. ஒன்று இல்லற வாழ்க்கை, அடுத்தது துறவற வாழ்க்கை. ஒன்றிலிருந்த இன்னொன்றை மேற்கொள்ள முடியாது. இரண்டில் ஒன்றையே மேற்கொள்ளல் வேண்டும். இல்வாழ்க்கை வாழ்வோர் தன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று தரப்பினரையும் நல்வழி நின்று காத்து அவர்களின் நலன்களைப் பேணுதல் வேண்டும். இவர்கள் துறவிகள், ஏழைகள், ஆதரவு அற்றவர்கள், தன் குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் போன்றோரையும் தன்னையும் பேணவேண்டும். இல்வாழ்வான் அறவழியில் பொருள் தேடி அதை அறவழியில் செலவு செய்து

நன்மக்களைப் பெற்று, அவர்களை நல்வழிப்படுத்திச் சமூகத்திற்கு முன்மாதிரியானவனாகவும், உதவுபவனாகவும் வாழ வேண்டும்."

"துறவறத்தை மேற்கொள்வோர் சிறந்த ஒழுக்கமுள்ள வர்களாகவும், பற்றுக்களைத் துறந்தவர்களாகவும் வாழ வேண்டும். பிறப்பு, பிறவாமை என்ற இரு நிலைகளையும் உணர்ந்து பிறப்பில்லா நிலையே மேலானது என்று துணிந்து அதை மேற்கொள்ள வேண்டும். துறவு பூண்டவர்களின் பெருமையை அளவிட்டுக் கூறமுடியாது. துறவிகள் மக்களின் ஆத்ம மேம்பாட்டிற்காக உழைத்து நாட்டை முன்னேற்றுதல் வேண்டும். துறவிகளின் வாழ்க்கை தூய்மையானதாக இருத்தல் வேண்டும். அவர்களின் வாய்ச் சொற்கள் மந்திரங்களைப் போல நிலைத்து நிற்கும்"

"இத்தகைய இரு தரப்பட்ட வாழ்க்கையில் ஒன்றையேனும் கடைப்பிடிக்காது வாழ்பவர்களின் வாழ்க்கை பயனற்றதாகும். இவர்கள் பழத்தை விட்டு விட்டுத் தோலை உண்பவர்களாவர்".

"நாராயணசாமி குடும்பத்தனாக இல்வாழ்க்கை வாழ்ந்து வந்தான். ஆனால் அவன் இல்வாழ்க்கைக்குரிய இலக்கணங்கள் எதையும் பின்பற்றியதில்லை. தருவேன் என்ற பொருளையும், கடனாகப் பெற்ற பொருட்களையும் கொடுக்க மாட்டான். மாளையம், திவசம், விருந்துணவு, தானம் எதுவும் செய்ய மாட்டான். பிறரிடம் இரந்து உண்பான்."

“அது போல வேலூரில் சண்முகம் என்றொரு துறவி இருந்தார். அவர் துறவி போல நடித்து மக்களிடம் பொருட்களைக் கவர்வார். தனது ஆச்சிரமத்திற்கு வரும் கன்னிப் பெண்களுடன் சரசமாடுவார். பில்லி , சூனியம் எடுப்பதற்காகப் பொருள்கள் வாங்குவார். இதனால் சினமுற்ற வேலூர் மக்கள் அவரது ஆச்சிரமத்தைத் தீயிட்டுக் கொளுத்தி அவரை ஊரை விட்டுத் துரத்தினர்”.

“நாராயண சாமிக்கும் அதே கதி ஏற்பட்டது. மக்களை எத்தனை காலத்திற்கு ஏமாற்றலாம். சினங் கொண்ட மக்கள் நாராயணசாமியை எழுந்து நடக்க முடியாதவாறு தாக்கினர். அதனால் அன்பானவர்களே, நாராயண சாமியைப் போலவும் சண்முகத்தைப் போலவும் நடந்து கெள்ளாதீர்கள். இரண்டு வகைப்பட்ட வாழ்வுகளில் ஒன்றை அர்த்தத்துடன் வாழுங்கள். அப்படி வாழா விட்டால் இருபக்கமும் சுமையைத் தொங்கவிட்டுத் தூக்கிச் செல்லும் காவடித் தண்டைச் சுமையில்லாது சுமந்தவர்களாவீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்***
***நல்வாழ்க்கை போக நடுநின்று - எல்லாம்***
***ஒருதலையாச் சென்று துணியா தவரே***
***இருதலையும் காக்கழித் தார்.***

இருவகைப்பட்ட வாழ்க்கையில் ஒன்றைச் சிறப்புடன் வாழாதவர்கள் பயனற்ற வாழ்வு வாழ்பவர்களாவர். இப்படியான

வர்கள் காவடித் தண்டைச் சுமையின்றிச் சுமப்பவராவர். **'இருதலையும் காக் கழித்தார்'** என்பது பழமொழி.

7 "அன்பானவர்களே, உங்கள் குடும்பத்தில் அல்லது உங்கள் நண்பர்களுக்கிடையில் ஏதாவது முரண்பாடேற்பட்டால் நீங்களே நேரில் சந்தித்துப் பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது தான் எப்பொழுதும் நன்மை தரும். உங்களோடு நெருங்கிப் பழகிய உங்களின் குடும்பத்தவர்களுடன் நீங்கள் அச்சமின்றிக் கதைக்கலாம். தேவையானால் மன்னிப்புக்கூடக் கேட்கலாம். இது கேவலமானதல்ல. இதுபோல நண்பர்களிடையேயும் முரண்பாடு உண்டானால் நடந்து கொள்ளலாம். உரிமை காரணமாக நண்பர்கள் செய்யும் செயலைத் தாம் செய்வதாகவே கருதி ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஏற்றுக் கொள்ளா விடல் அவரோடு பழகிய நட்பும் பயனற்றதாகி விடும். குடும்பத்திலோ அல்லது நண்பர்களிடையேயோ முரண்பாடு ஏற்பட்டுச் சமாதானத்திற்காக இன்னொரு வரை அனுப்பினால், அவர் வேண்டுமென்றோ, அல்லது பொருள் விளங்காமலோ கதைக்கும் கதைகளால் தீராத பகை உண்டாக்கும். தரகராகச் செல்பவர் தனது நன்மைக்காகவும் செயல்களிலே ஈடுபடுவார். இதனால் நீங்கள் யாருடனும் முரண்பாடில்லாமல் நடந்து கொள்ளுங்கள். முரண்பாடேற்பட்டால் உங்கள் தற்பெருமையை விட்டு விட்டு நேரில் சந்தித்துப் பேசிப் பிரச்சினைகைளத் தீர்த்துக் கொள்ளுங்கள்."

“நாதனும் வேலனும் நண்பர்கள். நாதன் மல்லிகாவைத் தனது பெற்றோரின் சம்மதமின்றிக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். சீதனமாக நாதனுக்குப் பெண் வீட்டார் எதுவும் கொடுக்காததால் அவர்களது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. இதனால் நாதன் மல்லிகாவுடன் முரண்பட்டான். அதனால் அவள் தனது இனத்தவரின் வீட்டுக்குச் சென்று விட்டாள். வேலன் மல்லிகாவை விரும்பினவன். அவள் நாதனைக் காதலித்து அவனுடன் சென்றமையினால் அவர்களை நிரந்தரமாகப் பிரிக்கச் சதி செய்தான். நாதனுடன் உறவு வைக்காதே என்று மல்லிகாவுக்கும், மல்லிகாவுடன் உறவு கலக்காதே என்று நாதனுக்கும் கூறியதோடு அவர்கள் கூறாதவற்றையெல்லாம் கூறி அவர்களது கோபத்தை அதிகரிக்கச் செய்தான். அதனால் அவர்கள் நீதிமன்றத்திற்கு விவாகரத்துக் கோரிச் சென்றனர்.”

“இதை நன்குணர்ந்த அந்த ஊரின் அறிஞரான சதானந்தன், இருவரையும் அழைத்துப் பேசினார். இருவரும் தாம் அப்படிக்கூறவில்லை என்றனர். உண்மை நிலையைச் சதானந்தன் விளக்கிக் கூறினார். வேலன் தான் காதலித்த மல்லிகா தன்னைத் திருமணம் செய்யாமையால் உண்டான கோபத்தினாலேயே அவர்களைப் பழிவாங்க நினைத்ததாகக் கூறினார். அதனால் அவர்கள் ஒற்றுமையானதுடன் வேலனின் உறவையும் துண்டித்தனர். தம்மோடு மிகவும் அன்பாகப் பழகுபவர்கள் போல் நடித்து அவர்களோடு முரண்பட்டவர்களிடம் சென்று மிகவும் நட்புடையவர்கள் போலப் பேசிப் பழகி, அவர்களைப்

பகையாளர்களாக மாற்றுபவர்கள் மிகவும் கெட்டவர்கள். அவர்கள் இருதலைக் கொ்ளிகளாவர்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று*
*திரிவின்றுத் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்*
*ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே*
*இருதலைக் கொள்ளியென் பார்.*

இருவரது பகையும் வளர்த்து, இருவருக்கும் கேடு விளைவிப்பதால் '**இருதலைக் கொள்ளி**' ' எனச் சொல்லப்பட்டது. அதுவே பழமொழி.

8 “அன்பானவர்களே, அச்சம் இல்லாது வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். காரணமின்றிப் பயப்படுபவர்கள் எல்லாவற்றிற்கும் பயப்படுவார்கள். பேய்க்குப் பயம், பிசாசுக்குப் பயம், அவையிலே பேசப்பயம், ஒரு தொழிலைத் தொடங்கப் பயம். இப்படிப்பயந்து கொண்டே வாழ்பவன் பயத்தாலே யே எதிரியிடம் தானாக அகப்பட்டு விடுவான். இல்லாவிட்டால் பயத்தினால் இருதயம் வெடித்து இறந்து விடுவான். நோய்கள் எல்லாவற்றிலும் கொடியது அச்சம் என்ற நோய். தலை சுற்றினால் இரத்த அழுத்தம் என்றும், வயிற்றில் நோ இருந்தால் அது புற்று நோயாக இருக்கலாமென்றும் பயந்தவர்கள் நம்புவார்கள்”. “பயந்தவன் ஆயிரக்கணக்கான நூல்களைக் கற்றாலும் அதனால் பயனடைய மாட்டான். துணிவுள்ளவன் ஒரு நூலைக் கற்றிருந்தாலும் அவன் செயல் வீரனாக இருப்பான். பயம் காரணமாகச் செயலில் இறங்காது அஞ்சியபடி இருப்பவன் உயிரோடு வாழ்ந்தாலும் அவன் இறந்தவனுக்கு

ஒப்பானவனேயாவான். அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாமல் வாழ்பவனும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவனாவான். அதனால் அன்பானவர்களே, துணிவுடன் வாழப் பழகிக் கொள்ளுங்கள். துணிவு உங்கள் உயிரைக் காக்கும். எதற்கும் அஞ்சுபவனைக் கொண்டு சென்று பாதுகாப்பு மிக்க கோட்டைக்குள் வைத்திருந்தாலும் அவன் தன்னை எதிரிகள் தாக்கி அழித்து விடுவார்கள் என்று எண்ணிப் பயந்து கொண்டே இருப்பான்."

"நாகபுரியைச் சேர்ந்த புலவரான இளம்பருதி தனது வறுமையைப் போக்குவதற்காக வேலூர் அரண்மனைக்கு வந்தார். அவர் வந்த வேளையில் நாகபுரி நாட்டு மன்னன், திடீரென வேலூர் மீது படையெடுத்தான். வேலூர் மன்னன், இளம்பரிதியைப் பாதுகாப்பான கோட்டைக்குள்த் தங்க வைத்து அவருக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும்படி கட்டளையிட்டு விட்டுப் போருக்குச் சென்று விட்டான். பாதுகாப்பான கோட்டையைச் சுற்றி போர் வீரர்கள் பாதுகாத்து நின்றனர்".

"புலவருக்கு உணவு கொண்டு வந்த வீரன் சொன்னான்; "புலவரே எமது மன்னனை வெல்ல யாராலும் முடியாது. இரண்டொரு நாளில் போர் முடிந்து விடும். அதன் பின் நீர் எமது நாட்டின் புலவராகி விடுவீர்"

"இளம்பரிதிக்கு அதைக் கேட்கப் பயமாக இருந்தது. தற்செயலாக வேலூர் மன்னன் தோற்றால் தன்னை நாகபுரி

மன்னன்  கொன்று விடுவான் என்று நினைத்தார். பின் நாகபுரி மன்னன் வென்றால் தான் ஒற்றன் என்று வேலூர் மன்னன் நினைத்துத் தன்னைக் கொன்று விடுவான் என்றும் நினைத்தார். பாதுகாப்பான இந்தக் கோட்டையை நாகபுரி மன்னன் தாக்கினால் தன்னையும் வேலூர் படை வீரனென்று நினைத்து விடுவானோ என்றும் அஞ்சினான்.”

“மறுநாள் உணவு கொண்டு வந்தவன், எமது மன்னர் வென்று விட்டார். நாகபுரி கைப்பற்றப்பட்டு விட்டது. நாகபுரி ஒற்றர்கள் பலர் நாட்டில் இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. அதனால் தேடுதல் வேட்டை நடைபெறுகிறது. நாளை அரசசபை கூடும்  போதுமன்னன் தன்னைப் புகழ்ந்து காவியம் பாடும்படி கூறவிருக்கிறார். நீர் திறமை மிக்க புலவராக இருந்தால் நல்லதொரு காவியம் பாடும்” என்றான்.”

“நாட்டில்  ஒற்றர்கள் இருக்கிறார்கள்” என்று அவன் கூறிய நேரத்திலிருந்து இளம்பருதி தன்னையும் மன்னன் ஒற்றனாகக் கருதுவானோ’ எனச் சிந்தித்துக் கொண்டிருந்தார்”.

“மறுநாள் காலை அரசன் புலவரை அழைத்துப் பெரும் பொருள் கொடுத்து ஒரு  காவியம் பாடும்படி கேட்டுக் கொண்டான். நீர் பாதுகாப்பாகக் கோட்டைக்குள் இருந்து காவியம் பாடி முடித்து விட்டுச் செல்லும்” என்றான்”.

“மறுநாள் உணவு கொண்டு வந்தவன்; ‘நாகபுரி மன்னன் தோற்றமையால் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று விட்டான். அவனைக் கைது செய்யப் பெரும் படையை மன்னர் அனுப்பியிருக்கிறார்” என்றான். அதைக் கேட்ட புலவருக்குப் பயம் உண்டானது. தப்பிச் சென்ற நாகபுரி மன்னன் வந்து கோட்டையைத் தாக்கினால் தான் இறந்து விடுவேன் எனக் கருதிப் பயப்பட்டார். அவர் காரணமின்றிப் பயப்படுவதைச் சந்தேகித்த ஊழியன், மன்னனுக்குச் சொன்னான். மன்னன் புலவரைக் கைது செய்து சிறையில் அடைத்து விசாரித்தான். பயம் தான் மனிதனுக்கு இயமன். அதனால் பயமில்லாமல் வாழப் பழகுங்கள்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*இஞ்சி அடைத்துவைத் தேமாந் திருப்பினும்*
*அஞ்சி அகப்படுவார் ஆற்றாதார் - அஞ்சி*
*இருள்புக் கிருப்பினும் வெய்யே வெரூஉம்புள்*
***இருளின் இருந்தும் வெளி.***

மனதில் பயம் உள்ளவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் எளிதன்று. இருளில் மறைந்திருந்தாலும் பகைவர் தன்னைக் கண்டு விடுவர் என்று எந்நேரமும் அஞ்சியபடியே இருப்பர். **‘இருளில் இருந்தும் வெளி’** என்பது பழமொழி.

9 “அன்பானவர்களே, கல்வியறிவு மிக்க பெரியவர்கள் பல அறிஞர்கள் கூடியுள்ள சபையிலே பேசுவார்கள். பேசும் போது கேட்போரைக் கவரக்கூடியதாகவும், கேட்காதவருக்கும் கேட்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டக்கூடியதாகவும் அமைவதே சிறந்த பேச்சாகும். அத்துடன் பேசும் போது சபையின் நிலையை அறிந்து பேச வேண்டும். இது சிறந்த கல்வியறிவுடையவர்களின் நிலை. சிலர் இப்படியான அறிஞர்கள் கூடியுள்ள சபைகளில் மௌனமாக இருந்து விட்டு, புத்தியில்லாதவர்களும் கற்காதவர்களும் உள்ள இடங்களில் அவர்களுக்குத் தமது கல்வியைப் பற்றியும் தமது பேச்சாற்றலைப் பற்றியும் மேன்மையாகக் கூறுவர். இதைப் புல்லறிவு என்று பெரியோர் கூறுவர். புல்லறிவு என்பது, நான் அறிவுள்ளவன், கற்றவன், மேலானவன் என்று தன்னைத் தானே மதித்துக் கொள்ளல். இத்தன்மையானது பகைவரின் வீரத்திற்குப் பயந்த ஒருவன் தனது வீட்டில் உள்ள சட்டி, பானை போன்றவற்றிற்கு இலக்கு வைத்து அம்பால் எய்து அவற்றைத் தகர்த்து விட்டுத் தனது வீரம் பற்றித் தனது மனைவிக்கு புகழ்வதைப் போன்றது”. “அதனால் அன்பானவர்களே, புல்லறிவாளர்கள் போல அறிவில்லாதவர்கள் மத்தியல் உங்களைப் பற்றி நீங்களே உயர்வாகச் சொல்லிப் பெருமை அடையாதீர்கள். அறிஞர்கள் கூடியிருக்கும் சபையிலே உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள். அதனால் உங்களது புகழ் உயரும். அறிஞர்கள் பாராட்டுவார்கள். மக்களும் அரசனும் போற்றுவர். அதற்காக மேன்மையுடைய கல்வியைக் கல்லுங்கள். தற்பெருமை கொள்ளாது வாழுங்கள்”

"புலவர் இளம்பருதி பயந்தவர், கல்வியறிவில்லாதவர், தன்னைப் பெரிதாக மதிப்பவர் என்பதை அறிந்த வேலூர் மன்னன் அவரது கோழைத்தனத்தை உணர்ந்து அவருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பினான். பொன்னையும், பொருளையும் மூட்டையாகக் கட்டிச சுமந்தபடி ஆடம்பரமான உடையணிந்து இளம்பருதி நாகபுரிக்கு வந்தார். வரும் வழியில் அவரது நண்பர்கள் அவரைக் கண்டனர். அவர்களைக் கண்டதும் அவர் கூறினார்; "வேலூர் அரண்மனைக் கோட்டையை நாகபுரிப் படைகள் தாக்கும் போது நான் கோட்டைக்குள் இருந்தேன். வேலூர் படைகளுடன் சேர்ந்து போரிட்டு நாகபுரிப் படையைத் துரத்த உதவினேன். போர் முடிவடைந்ததும் மன்னன் தன்னைப் புகழ்ந்து ஒரு காவியம் பாடச் சொன்னான். அதைப் பாடி அரசனிடம் கொடுத்துள்ளேன். இப்பொழுது எனது மனைவி , மக்கள், பெற்றோரைச் சந்தித்து இவற்றைக் கூறிவிட்டுச் செல்லப் போகிறேன்" என்றான்".

"அவரது நண்பர்கள் அவரைப் புகழ்ந்தனர். மாலைகள் அணிவித்து அவரைக் கௌரவித்தனர். மாலைகளோடு நண்பர்கள் புடைசூழ வீட்டுக்கு வந்த இளம்பருதியை மனைவியும் பிள்ளைகளும் வரவேற்றனர். முடிச்சுகளாகக் கட்டப்பட்டிருந்த பொருட்களை இளம்பருதி அவிழ்த்துக் கொட்டினார். அவரது மனைவியும், பெற்றோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை."

“இளம்பருதி சொன்னார்;” மன்னன் என்னைச் சிறந்த போர் வீரனாகவும், கவிஞனாகவும் ஏற்றுவிட்டான். எனது அம்பையும், வில்லையும் எடுத்து வா” என்றான் மனைவி எடுத்து வந்து கொடுக்க, அவனது நண்பர்கள் வீட்டிலிருந்த பானை, சட்டிகளைக் கொண்டு வந்து தூரத்தில் வைத்தனர். அவற்றைக் குறிபார்த்து அம்பை விட்டார் இளம்பருதி. அம்புகுறி தவறாது தாக்கிப் பானை, சட்டிகளை உடைத்தது. கூடியிருந்தவர்கள் இளம்பருதியைப் புகழ்ந்தனர். “அதனால் அன்பானவர்களே, இளம்பருதியைப் போல நடந்து கொள்ளாது தன்மானமுள்ள வீரர்களாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளையும், புல்லறிவாளர்களாக வளர்க்காதீர்கள்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி நன்றுணராப்***
***புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல் - புல்லார்***
***புடைத்தறுகண் அஞ்சுவான் இல்லுள்வில் லேற்றி***
***இடைக்கலத்து எய்து விடல்***

நல்ல கல்வியறிவு உள்ளோர் மத்தியில் பேசாது இருந்து விட்டுப் புல்லறிவாளர்கள் மத்தியில் தன்னை உயர்வாகப் பேசுவது, போர் வீரனொருவன் தனது ‘வீட்டில் மனைவியோடு வீரம் பேசுவதை ஒக்கும். இவர்கள் வீட்டிலுள்ள சட்டி பானைகளைக் குறியாக வைத்து அம்பெய்வர். **‘இல்லுள் வில்லேற்றி இடைக்கலத்து எய்து விடல்**” என்பது பழமொழி.

10 “அன்பானவர்களே, முயற்சியுடையவர்கள் ஒரு போதும் தோற்றதில்லை. இவர்களுக்கு எந்தத் துன்பம் வந்தாலும் அஞ்ச மாட்டார்கள். முயற்சியைக் கைவிடமாட்டார்கள். உயிர் போகும் வரை சலிக்காது போராடி மடிவார்களே தவிரத் தோற்றுப் போக மாட்டார்கள்”.

தமது குடும்பப் பெருமயை உயர்த்தும் கடமைகளைச் செய்ய ஒரு போதும் தவற மாட்டேன் என்று முயல்கின்ற பெருமையை விட உயர்ந்த பெருமை இவ்வுலகில் எதுவும் இல்லை. சிறந்த முயற்சி, உயர்ந்த அறிவு, உரிய உதவி, பெரியோர் ஆசி, என்பவற்றோடு இடைவிடாது செய்கின்ற செயல்களால் ஒருவனது இலட்சியம் நிறைவேறும். இப்படியானவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்யும்”. “சோழ மன்னனான பராந்தகச் சோழனின் மகன் கரிகால் வளவன் என்ற மன்னன் போரிடும் போது எதிரிகள் சூழவுள்ள இடங்களைத் தீயிட்டுக் கொழுத்தினார். அத்தீக்குள் அகப்பட்ட கரிகால் வளவனின் கால் தீயால் எரிந்து விட்டது. அதைப் பொருட்படுத்தாது தப்பியோடிய அவன் இரும்புடைத் தகையார் என்பவரைத் துணையாகக் கொண்டு பெரும்படை திரட்டித் தனது பகைவர்களையெல்லாம் அழித்துச் சேர,சோழ, பாண்டிய நாடுகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து நல்லாட்சி புரிந்தான். காலில் ஏற்பட்ட ஊனம் அவனது திட்டங்களுக்குத் தடையாக இருக்கவில்லை”.

“அன்பானவர்களே, உங்களுக்குப் பல குறைபாடுகள் உண்டு. அவை உடற் குறைபாடாக இருக்கலாம், இல்லாவிட்டால் பொருள் குறைபாடாக இருக்கலாம். இந்த இரண்டு குறைபாடுகளையும் நீக்குவது முயற்சி. எனவே முயற்சி செய்யுங்கள். கட்டாயம் முன்னேறுவீர்கள்.”

“எமது ஊரில் வாழ்கின்ற ஆதவனைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவனது பெற்றோர் விபத்தில் சிக்கி இறக்கும் போது அவனுக்கு வயது ஆறு. அவன் இனத்தவர்களிடமும் நண்பர்களிடமும் உதவிக்குச் சென்ற போது அவர்கள் உணவும், உடையும் கொடுத்தனர். அவற்றில் திருப்திப்படாத ஆதவன் உழைக்க முயன்றான். அவனை நம்பி யாரும் பணம் கொடுக்க முன்வரவில்லை. அதனால் அவன் அவ்வூர் சிவன் கோயிலில் இருந்தான். கோயிலுக்கு வருவோர் உடைக்கும் தேங்காய்களைப் பொறுக்கிக் குருக்களுக்குக் கொடுப்பான். அதை எண்ணையாக்க உதவுவான். குருக்கள் உடைக்கும் தேங்காய்களுக்கு ஒரு விலை போட்டு அவனுக்குக் கொடுத்தார். அவன் அதைப் பக்குவப்படுத்தி எண்ணெய் ஆக்கி விற்று வந்தான். அதில் முன்னேறி ஊரில் தேங்காய் வாங்கி எண்ணெய் ஊற்றி விற்று வந்தான். இன்று அவனிடம் தேங்காயெண்ணை ஊற்றும் இயந்திரத் தொழிற்சாலைகள் பத்து உண்டு. அவன் எண்ணெயைப் பிற நாடுகளுக்குக் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்கிறான். அதற்காக அவன் மூன்று கப்பல்களை வாங்கியுள்ளான். ஆதலால் அன்பானவர்களே, எத்தொழிலையும்

முயற்சியுடன் செய்தால் முன்னேறலாம். அதற்கு உடற் குறைபாடோ அல்லது பொருட் குறைபாடோ தடையாக இருக்காது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*சுடப்பட்டு உயிருய்ந்த சோழன் மகனும்*
*பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால்*
*செயிரறு செங்கோல் செலீஇயினான்; இல்லை*
*உயிருடையார் எய்தா வினை.*

முயற்சியுடையவன் தனது உயிரைக் காத்துக் கொண்டால் அவன் செய்வதற்கரிய செயல்களையெல்லாம் செய்து முடிப்பான். ‘**இல்லை உயிருடையார் எய்தாவினை**’ என்பது பழமொழி.

11 “அன்பானவர்களே, ஒரு செயலைச் செய்யும்படி நீங்கள் இன்னொருவரிடம் ஒப்படைக்கும் போது மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நன்கு ஆலோசித்த பின்பே ஒப்படைதல் வேண்டும். சிலர் அச்செயலின் பயன் முழுவதையும் தாமே எடுத்துக் கொள்ளும் இயல்புடையவர்கள். அத்தகையவர்களைச் செயலில் ஈடுபடுத்தினால் செயல் நன்றாக நடைபெறும். ஆனால் அதனால் எந்தப் பயனும் முதலீட்டாளனுக்கு வந்து சேராது.”

“ஒருவன் ஒழுக்கமுள்ளவனாகவும், பழிக்கு அஞ்சுபவ னாகவும், பிறரது பொருளைத் தன் பொருளைப் பேணுபவனாகவும், தன் நலமற்றவனாகவும் இருக்கிறானா என்பதை நன்கு ஆராய்ந்த பின்பே அவனைச் செயலிலீடுபடுத்த வேண்டும். அரிய நூல்கள் பலவற்றைக் கற்று குற்றங்கள் இல்லாமல் இருப்பவர்களையும்

ஆராயாதும், கண்காணிக்காதும் விட்டால் அவர்களுக்கும் பொருளில் ஆசை உண்டாகும். ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பின்னர் குற்றங்களை ஆராய்ந்து, அதன் பின்னர் அவனது குடும்பம், அவனது சுற்றம் இனங்களை ஆராய்ந்த பின்பே ஒரு செயலை ஒருவனிடம் ஒப்படைத்தல் வேண்டும். சுற்றத்தார், குடும்பத்தினரின் குணம் சமையல் பாத்திரத்தில் தொட்டால் கரி ஒட்டிக் கொள்வதைப் போல அவனில் ஒட்டி இருக்கும். அதனால் மிக அவதானத்துடன் இருந்து செயலைச் செய்ய வல்லவனைத் தெரிந்து கொள்ளுங்கள்”

“வேலூரில் கந்தராஜன் என்றொரு தனவந்தன் இருந்தான். அவன் ஊரில் உள்ளவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பவன். மாதாமாதம் ஊரில் சென்று வட்டிக்காசை வசூலிப்பான். அதற்கென சிவபாலன் என்றொருவன் இருந்தான். அவன் தினமும் ஊருக்குள் சென்று வட்டிப் பணத்தைச் சேகரித்துக் கொண்டு வந்து கந்தராஜனிடம் கொடுப்பான். கந்தராஜன் ஊருக்குள்ச் செல்லும் போது கயல்விழி என்ற ஒரு விபச்சாரப் பெண்ணை விரும்பி அங்கு தினமும் சென்று வந்தான்.”

“அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் காரணமாக விரும்பும் விலை மகளான கயல்விழி செலுத்தும் அன்பு உண்மையானது என்று கருதி அவள் மீது அவன் உயிரையே வைத்திருந்தான். அவள் தனது இன்னொரு வாடிக்கையாளனான நிமலன் என்பவனை வேலைக்குச் சேர்க்கும்படி வற்புறுத்தினாள்.

நிமலன் யார், அவன் எப்படியானவன் என்று அறியாது சிவபாலனை வேலையால் நிறுத்தி விட்டு நிமலனை நியமித்தான். நிமலன் ஊருக்குள்ச் சென்று வட்டிப் பணத்தைச் சேகரிப்பான். முதல் கொடுப்பவர்களிடமும் வாங்குவான். அதில் ஒரு பகுதியைத் தான் எடுத்துக் கொண்டு மிகுதியில் ஒரு பகுதியைக் கயல்விழிக்குக் கொடுத்து விட்டு மிகுதியைக் கந்தராசனிடம் கொடுத்துவிட்டுப் பலர் பணம் தராது ஏமாற்றுகிறார்கள் என்பான்".

"கயல்விழியில் உள்ள மோக மிகுதியால் தொழில் செய்வதை மறந்த கந்தராஜனை ஒருநாள் ஊரவன் ஒருவன் சந்தித்து உண்மை நிலையைக் கூறினான். அதை நம்ப மறுத்த கந்தராஜன் ஊருக்குள்ச் சென்று விசாரித்த போது ஊரவர் அனேகரிடம் முதலைப் பெற்ற விடயம் கந்தராஜனுக்குத் தெரிய வந்தது. அவன் ஆத்திரத்தோடு வந்து கயல்விழியை ஏசியபோது அவள் சொன்னாள்; "நிமலனை எனக்குத் தெரியாது. எனது மாமனர் அவனுக்கு ஒரு வேலை பெற்றுக் கொடுக்கும்படி கூறினார். அதனால் அதை உங்களிடஞ் சொன்னேன். நீங்கள் ஆராயாது கொடுத்து விட்டீர்கள். அது தவறு தானே…" என்றாள். கந்தராஜனால் அவளுக்குப் பதில் கூற முடியவில்லை".

" அதனால் அன்பானவர்களே, யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக அவரில் உள்ள நம்பிக்கையில் ஆராயாது கருமமாற்றாதீர்கள். அப்படி ஆராயாது கடமையாற்றினால் நீங்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உண்டாகும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*கட்டுடைத் தாகக் கருமம் செயவைப்பின்*
*பட்டுண்டாங் கோடும் பரியாரை வையற்க*
*தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை; இல்லையே*
*அட்டாரை ஒட்டாக் கலம்*

ஒரு செயலைச் செய்ய ஒருவனை நியமிக்கும் போது அவனை நன்கு ஆராய வேண்டும். இல்லாவிட்டால் அச் செயலால் வரும் பயனை அவனே எடுத்துக் கொண்டு போய் விடுவான்; '**அட்டாரை ஒட்டாக் கலம்**' என்பது பழமொழி.

12 "அன்பானவர்களே, பெரியோர்களை மதித்துப் பூசித்து வணங்கி வாழ்பவர்களை எந்தவிதமான துன்பங்களும் நெருங்காது. பெரும் பெரும் வல்லமை உள்ளவர்கள் அழிக்க நினைத்தாலும் பெரியவர்களது ஆசியும், கடவுளின் அருளும் அவர்களுக்குத் துன்பம் ஏற்படவிடமாட்டாது. துணிவில்லாதவர்கள், உண்மையான நட்பைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களைத் துணையாகக் கொள்ளக்கூடாது. அப்படித் துணையாகக் கொண்டால் பொறுத்த நேரத்தில் தமது உயிருக்கு அஞ்சி அவர்கள் விட்டுப் பிரிந்து விடுவார்கள். நண்பர்கள் கைவிட்டாலும் நல்ல செயல்களைச் செய்பவனைக் கடவுள் கைவிடமாட்டார். ஊழ் என்பது அனுபவிக்காத வினை. நாம் செய்யும் செயல்களுக்கான பயனை எடுத்த பிறவியில் அனுபவித்து முடிக்காவிட்டால், அது அடுத்தடுத்த பிறவிகளிலும் தொடர்ந்து வந்து சம்பந்தப்பட்டவர்களை வாட்டி வதைக்கும். இல்லாவிட்டல் போகங்களைக் கொடுத்து இன்பத்துக்குள்ளாக்கும்".

“கௌரவர்கள், பாண்டவர்களைத் தந்திரமான முறையில் கொல்வதற்காக ஓர் அரக்கு மாளிகையைக் கட்டி அவர்களை அங்கே அழைத்துச் சென்று பார்வையிட வைத்து விட்டு அவ் அரக்கு மாளிகையைக் கொளுத்தினர். மெழுகாலான அந்த மாளிகை தீப்பற்றி எரிந்தது. காப்பாற்ற யாரும் இல்லை . பாண்டவர்கள் செய்த தருமம் அவர்களைக் காப்பாற்றியது. அதனால் எப்பொழுதும் தான தர்மம் செய்வதில் விருப்பமுடையவர்களாக இருங்கள். அத்துடன் வரும் துன்பங்களை முன்பே அறிந்து, இனித்துன்பம் வராதபடி காக்கின்ற தன்மை உடைய பெரியவர்களை நட்பாக்கிக் கொள்ளுங்கள்.”

“வேலாயுதபிள்ளைக்குக் கடுஞ் சுகவீனம் திடீரென வந்து விட்டது. அவர் ஒரு விவசாயி. அந்த ஊரில் வாழும் வணிகன் ஒருவனின் தோட்ட நிலத்தைக் குத்தகைக்குப் பெற்றுப் பயிர் செய்து வந்தார். அவர் தோட்ட நிலத்திற்குக் குத்தகை கொடுப்பதோடு வணிகனின் வீட்டு வேலைகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். அவருக்கு நான்கு பிள்ளைகள். திடீரென அவர் சுகவீனமுற்றதால் குடும்பத்தினர் பயந்து விட்டனர். அவரது நண்பர்கள் வசதியானவர்கள் அல்லர். அவரது வைத்தியச் செலவுக்கு இரண்டு இலட்சம் ரூபா தேவைப்பட்டது. இனத்தவர்கள் நண்பர்கள் தம்மாலியன்றளவு பணத்தைக் கொடுத்தனர். வேலாயுதபிள்ளையின் மனைவி வணிகனிடஞ் சென்று பணங்கேட்டாள். வணிகன் அவர்கள் குடியிருக்கும்

காணியைப் பொறுப்பாக வாங்கிக்கொண்டு இரண்டு இலட்சம் ரூபா பணம் கொடுத்தார்".

"வேலாயுதபிள்ளைக்கு நோய் அதிகமாகி விட்டது. பணம் வாங்கி இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. வணிகன் பணத்திற்கு நெருக்கிக் கொண்டிருந்தான். பணம் கொடுப்பதற்குத் தவணைகள் பல கேட்டும் வேலாயுதபிள்ளையால் பணத்தைக் கொடுக்கமுடியவில்லை. வணிகன் அவரது வீட்டையும் காணியையும் விற்பதற்கு நாள்க் குறித்தான். வேலாயுத பிள்ளையால் எதுவுஞ் செய்ய முடியவில்லை. ஊர்ச் சிவன் கோயிலுக்கு வந்து தனது கஷ்டம் கரைச்சல்களைச் சொல்லி அழுதார். பின் கோயிலில் விற்பனை செய்யப்பட்ட ஓர் அதிட்ட லாபச் சீட்டை வாங்கிக் கொண்டு சிவனை நினைத்துப் பிரார்த்தித்து விட்டு வீட்டுக்கு வந்தார்."

"நாட்கள் சில சென்றன. வீடும் காணியும் விற்பனை செய்யும் நாள் வந்தது. அவர் தான் வாங்கிய அதிட்ட லாபச் சீட்டைப் பற்றி மறந்து விட்டார். அன்று கோயிலில் அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பவன் வேலாயுதபிள்ளையின் வீடு தேடி வந்து சொன்னான்; "அண்ணை, உனக்கு முதல் பரிசு விழுந்திருக்கு, பரிசுத்தொகையான ஐம்பது இலட்ச ரூபாவை வங்கியில் போய் எடு".

'வேலாயுதபிள்ளை திகைத்துப் போனார். சிவன் கோயிலுக்குச்சென்று அழுதழுது வணங்கினார். அன்பானவர்களே.

யாரின் உதவி இல்லாவிட்டாலும் விதி வலியதாக இருந்தால் உயிர் கூடப் போகாது. விதி வலியதாக இருக்க வேண்டுமானால் ஒழுக்கமாக வாழ்ந்து நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும். அதனால் ஒழுக்கமாக வாழுந்து நல்ல செயல்களைச் செய்யுங்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***குரைத்துக் கொளப்பட்டார் கோளிழுக்குப் பட்டுப்***
***புரைத்தெழுந்து போகினும் போவார் - அரக்கில்லுள்***
***பொய்யற்ற ஐவரும் போயினார் இல்லையே***
***உய்வதற்கு உய்யா இடம்.***

இனத்தவர்கள், நண்பர்கள் , சுற்றத்தவர்கள் கைவிட்டாலும் நல்ல ஊழ் இருந்தால் அவருக்கு எந்தவிதமான துன்பங்களும் வராது. '**இல்லையே உய்வதற்கு உய்யா இடம்**' என்பது பழமொழி.

13 "அன்பானவர்களே, கடவுள் படைத்த பொருட்களில் பயன்படாத பொருட்கள் எதுவுமில்லை. எல்லாம் ஏதோ ஒரு வகையில் உயிர்களுக்குப் பயன்படுகின்றன. ஒருவர் தனக்கு இன்னொருவனைத் துணையாகக் கொள்ளுதல் நன்மையையே பயக்கும். அறிவுள்ளதானாலும் சரி அறிவற்றதானாலும் சரி நாம் எதையோ ஒன்றைத் தனித்திருக்கும் போது துணைக்கு வைத்திருத்தல் வேண்டும்".

"ஒரு பிராமணன் காட்டு வழியாகத் தனியே அயல் ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவன் தனக்குத் துணையாக வரும்படி தனது நண்பர்களைக் கேட்டான். அவர்கள்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாட்டுக்கள் சொல்லி மறுத்து விட்டனர். இதை அறிந்த அவனது தாயார் சொன்னார்; “மகனே தனிவழியே காட்டில் செல்வது மிகவும் ஆபத்தானது. அதனால் நீ இந்த நண்டை அழைத்துச் செல்” என்றாள்”.

“அந்தப் பிராமணன் தாயின் சொற்படி, தாய் கொடுத்த நண்டைத் தன்னுடன் எடுத்துச் சென்றான். நீண்ட தூரம் நடந்தமையால் அவன் களைப்புற்று ஒரு மரநிழலில் படுத்தான். சிறிது நேரத்தில் அவன் நித்திரையாகி விட்டான். அப்பொழுது ஒரு நாகம் அவனைத் தீண்டுவதற்காக வந்தது. அந்த நாகத்தை நண்டு தன் கொடுக்கால் கடித்துத் துண்டாக்கியது. களைப்பு நீங்கி எழுந்த பிராமணன் தனக்கருகில் நாகம் இறந்து கிடகக் கண்டான். தன் தாயின் சொற்படி நண்டை அழைத்து வந்தமையால் தனது உயிர் காக்கப்பட்டது என்று உணர்ந்து கொண்டான். ஆகவே அன்பான மக்களே, நீங்கள் எதற்கும் உதவாது என்று எதையும் கழித்து வைக்காதீர்கள். அத்துடன் தனிவழியே செல்லாதீர்கள். தனித்தும் இருக்காதீர்கள்.”

“வேலாயுதம் வேலூரில் இருந்து புலியூருக்குக் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அவனைக் கண்ட மாதவன் கேட்டான்; “தனியே எங்கே செல்கிறாய்? என்று, மாதவன் சரியான குடிகாரன். அவனை ஊரில் யாரும் மதிப்பதில்லை. அவன் வேலாயுதத்தைக் கேட்கும் போது நிறைவெறியில் இருந்தான்; “அண்ணை இந்தக் காட்டு வழியில் திருடர்கள் அதிகம். அதனால்

நான் உங்களுடன் வருகிறேன்" என்று வேலாயுதத்திற்குப் பின்னால் சென்றான்".

"வேலாயுதம் அவனைத் தன்னுடன் வரவேண்டாம் என்று பலமுறை கூறிய போதும் அவன் கேளாது அவரின் பின் சென்றான். ஊரில் அவன் வீண் வம்புகளுக்குப் போபவன். எல்லோருடனும் குடித்து விட்டுச் சண்டை போடுபவன். அதனால் மாதவன் தன்னுடன் வருவது தனக்கு கேடு என்று நினைத்தவாறு வேலாயுதம் சென்று கொண்டிருந்தார்".

"நடுக்காட்டில் நாலைந்து பேர் அவர்களை வழிமறித்தனர். அவர்களில் ஒருவன் சொன்னான்; "இவன் பயங்கரக் குடிகாரன். இவனிடம் எதுவும் இருக்காது. மற்றயவனைச் சோதியுங்கள்". என்று நாலைந்து பேரும் வேலாயுதத்தை ஒரு மரத்தோடு கட்டி விட்டு அவர் கொண்டு வந்த மூட்டை முடிச்சுக்களைச் சோதனை செய்தனர். பின் அவரது வேட்டியை அவிழ்த்தனர். அதில் ஒரு முடிச்சு இருந்தது. அந்த முடிச்சை அவிழ்த்த போது விலை மதிக்க முடியாத ஒரு பெரிய இரத்தினக் கல் இருந்தது."

"அக்கல் இன்னொருவருக்கு விற்பனை செய்வதற்காக வியாபாரி ஒருவன் தந்தான். இதைக் கொண்டு சென்று கொடுத்தால் எனக்குக் கூலி தருவார்கள். இல்லாவிட்டால் என்னிடம் பணம் வசூலிப்பார்கள். நான் வறியவன். தயவு செய்து இரத்தினக்கல்லைத் தாருங்கள்" என்று இரந்தான் வேலாயுதம். அவர்கள் அதைக்

கேட்காது வேலாயுதம் கொண்டு வந்த முடிச்சுக்களையும் எடுத்துக் கொண்டு சென்றனர்”.

“அவர்கள் சென்ற பின் மாதவன் சொன்னான்; “அண்ணை பயப்படாதேங்கோ, என்னுடன் கதைத்தவன் என்னோடு கள்ளருந்தும் செல்லப்பன். வாருங்கள் சென்று காவல்துறையில் முறையிடுவோம்” என்று அழைத்துச் சென்று காவல்துறையில் முறையிட்டான். மறுநாள் காவல்துறையினர் அவர்களைக் கைது செய்தனர். வழக்கமாக அப்பாதையால் சென்று வருவோரிடம் கொள்ளையிட்ட பலபொருட்கள் அவர்களிடம் இருந்தன. ஆகவே யாரையும் எதற்கும் உதவாதவர்கள் என்று எண்ணாதீர்கள். எத்தகைய குணங்களை உடைய மனிதனானாலும் சமயத்திற்கு அவனால் உதவி கிடைக்கும் என்பதை மறவாதீர்கள்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நன்றே ஒருவர்த் துணையுடைமை பாப்பிடுக்கண்***
***நண்டேயும் பார்ப்பான்கண் தீர்த்தலான் - விண்டோயும்***
***குன்றகல நன்னாட! கூறுங்கால் இல்லையே***
***ஒன்றுக் குதவாத ஒன்று.***

பிராமணனது உயிரை நண்டு காத்தது போல, எத்தகைய மனிதரும் சமயத்தில் உதவுவார்கள். **‘இல்லையே, ஒன்றுக்குக் குதவாத ஒன்று’** என்பது பழமொழி

14 “அன்பானவர்களே, உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆண்டவன் மாவலிச் சக்கரவர்த்தி. அவன், தான் தான் அறிவாளி; தான் தான் பலசாலி; தான் தான் யாவும் தெரிந்தவன் என்ற செருக்கோடு அரசாண்டு வந்தான். எல்லாம் அறிந்தவன் என்று எண்ணி வாழ்பவனுக்கு அறிவிக்க முயல்பவன் அறிவில்லாதவன். அறிகின்றதன்மை இல்லாத அவன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் பேதமை உள்ளவன்”.

“மாவலிச் சக்கரவர்த்தி ஒரு பெரிய யாகம் செய்தான். யாகம் நடைபெறும் போது யார் எதைக் கேட்டாலும் கொடுப்பேன் என்று அறிவித்தான். அவனது கொடுமைகளைத் தாங்க முடியாது மக்கள் அவதிப்பட்டனர். மக்களைக் காப்பதற்காக வாமணர் வடிவமெடுத்து யாகத்திற்கு வந்த மகாவிஷ்ணு, தனது காலால் மூன்றடி மண் அளந்து தரும்படி மாவலியைக் கேட்டார். மாவலியின் குருவான சுக்கிராச்சாரி யார் பின்வரப்போவதை உணர்ந்து வாமணனுக்கு நிலங்கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்”.

“சுக்கிராச்சாரியாரின் பேச்சைக் கேளாதா மாபலி செருக்கோடு மூன்றடி மண்ணை அளந்தெடுக்கும்படி கூறினார். உடனே வாமணர் வானுயர வளர்ந்து முதலடியால் பூமியையும், இரண்டாம் அடியால் அண்டங்கள் அனைத்தையம் அளந்துவிட்டு மூன்றாவது அடி வைக்க இடமில்லாததால் மாபலிச் சக்கரவர்த்தியின் தலையில் காலை வைத்து அவனை நசுக்கிக்

கொன்றார். மாவலியைப் போல் குற்றமுடைய ஒரு செயலைச் செய்பவர்கள் தமக்குத் தாமே பெரும் துன்பத்தைச் செய்தவர்களாவர்”.

“மாதவன் பெருங்குடிகாரன் என்பது ஊர்முழுவதும் தெரியும். வேலூரில் வாழ்ந்த துரைசிங்கம் என்பவன் அடுத்த ஊரைச் சேர்ந்த மதிவதனனிடம் ஓர் இலட்ச ரூபா கடன் வாங்கியிருந்தான். நெடுநாளாகியும் கடனைத் திருப்பிக் கொடுக்காமையால் மதிவதனன் காவல் துறையினரிடம் முறையிட்டிருந்தான். காவல்துறையினர் துரைசிங்கத்தைக் கைது செய்த போது துரை சிங்கம் ஒரு வார காலத்துக்குப் பணத்தைக் கட்டிவிடுவதாகக் கூறினான். அதற்குக் காவல்துறையினர். பிணையாளி ஒருவரை அழைத்து வரும்படி கூறினார்.”

“துரைசிங்கம் ஊருக்கு வந்து மாதவனுக்குக் கள்ளை வாங்கிக் கொடுத்துக் காவல்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான். மதிவதனன் கடைக்குச் சென்றபோது கள்ளு விற்பனை செய்பவன் மாதவனை அழைத்து; ‘துரைசிங்கம் பெரும் சிக்கலில் அகப்பட்டுள்ளான். அதனால் உன்னைப் பிணையாளியாக வைக்க ஏற்பாடு செய்கிறான். அவதானமாக இரு’” என்று சொன்னான்.

“மாதவன் அதைக் கேட்கவில்லை. தான் பிணையாளியாகக் கையொப்பமிட்டால் தொடர்ந்து தனக்குத் துரைசிங்கம் கள்ளு வாங்கித் தருவானென நினைத்து ஒப்பமிட்டான். மறுவாரம் காவல்துறையினர் மாதவனைப் பிடித்து

அடைத்தனர். அதனால் அவனது குடும்பத்தினருக்குப் பெருஞ் செலவேற்பட்டது. எனவே தற்பெருமை அடையாதீர்கள். கண்டவர்களுக்கும் உதவி செய்யாதீர்கள். குற்றமுள்ள செயல்களில் ஈடுபடாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆஅம் எனக்கெளி தென்றுலகம் ஆண்டவன்***
***மேஎந்த துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்***
***தோஒ முடைய தொடங்குவார்க்கு, இல்லையே***
***தாஅம் தரவாரா நோய்.***

குற்றமுள்ள செயல்களில் ஈடுபடுவோர் தமக்குத் தாமே துன்பங்கள் பலவற்றைத் தேடிக் கொள்ளும் அறியாமை உடையவர்கள். **'இல்லையே தாம் தர வாரா நோய்'** என்பது பழமொழி.

15 "அன்பானவர்களே, ஆசைகளுக்காளாகி முறையற்ற செயல்களைச் செய்து குடி மக்களைத் துன்புறுத்தும் அரசன் கொலைத் தொழிலைச் செய்பவனை விடக் கொடியவனாவான். செங்கோல் ஏந்தி ஆட்சி செய்யும் அரசன் முறையற்ற வழிகளில் பொருள் பறிப்பது, கையில் ஆயுதங்கள் ஏந்தி நின்று வழிப்பறிக் கள்வன் பயணிகளிடம் பொருள் கொடு என்று பயமுறுத்துவது போன்றது".

"இந்தவகையில் அரசரைப் போலச் சில குடும்பத்தவர்களும் ஆசை வசப்பட்டுத் தனது குடும்பத்தாரை ஏமாற்றிப் பொருள் பறித்துத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். அரசனைப்

போலவே குடும்பங்களின் தலைவர்களும் நீதியும், நியாயமும் ஒழுக்கமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்".

"யானையானது கறி வகைகளைத் தொட்டு உணவு வகைகளை உண்ணத் தொடங்கினால், மூடி மறைத்து வைக்கப் பாத்திரங்கள் எதுவும் கிடையாது. அதனால் அன்பான குடும்பத் தலைவர்களே, நீங்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும் தர்மமான சிந்தனைகள் உள்ளவர்களாகவும் வாழ்ந்தால் தான் உங்கள் பிள்ளைகளும் அதைப் பார்த்து நடப்பார்கள்."

"தருமனுக்கு ஐந்து பிள்ளைகள். பெற்றோரும் அவனுடனன் இருந்தனர். மனைவி தருமனைத் தெய்வமாக நினைப்பவள். அவன் எந்தத் தவறும் செய்யாது வாழும் உத்தமன் என்று நினைத்து வாழ்பவள். ஆனால் தருமன் ஒழுக்கமுள்ளவன் அல்ல. தான் உழைக்கும் பணம் முழுவதையும் கொண்டு வந்து தனது மனைவியான அகல்யாவிடம் கொடுத்து விட்டு, அவள் எங்கே அந்தப் பணத்தை வைக்கிறாள் என்பதைப் பார்ப்பான். பின் முழுப்பணத்தையும் எடுத்துச் சென்று சூதாடி விடுவான். பணம், பொருள் காணமற் போனது பற்றி அகல்யா துன்பப்படுவாள். தனது கணவன் நேர்மையானவன் என்று நம்பி அவள், தனது பிள்ளைகளையும் மாமன் , மாமியையும் அங்கு வருவோரையும் சந்தேகிப்பாள். இருந்த போதும் அவள் அதைத் தனது கணவனுக்கு மட்டும் சொல்லுவாள். சம்பந்தப்பட்டவர்களைக் கேட்க மாட்டாள்."

"அடிக்கடி இப்படிக் களவு நடைபெறுவதால் அவளுக்குத் துக்கம் ஏற்பட்டது. அன்று தருமன் கொண்டு வந்து கொடுத்த பணத்தைத் தனது சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்தாள். இரவு வரை அப்பணம் அவளது சேலை முடிச்சில் இருந்தது. பின் அவள் அதை அவிழ்த்து வேறு இடத்தில் வைத்த பின் அது காணாமற் போய்விட்டது. அதனால் அவளுக்கு முதன் முதலாகத் தனது கணவன் மீது சந்தேகம் உண்டானது. சில நாட்களின் பின் அகல்யா தனது கணவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தாள். அதன் பின் அவன் அவளிடம் பணம் கொடுப்பதில்லை. அவளது நகைகளையும் வீட்டுப்பொருட்களையும் வெருட்டி வாங்கத் தொடங்கினான். அதனால் அன்பானவர்களே, நீங்களே உங்கள் வீட்டில் திருடினால் நிலைமை என்னவாகும். அதனால் ஒழுக்கமாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தவனும்***
***செங்கோலன் அல்லாக்கால் செய்வதென் - பொங்கு***
***படுதிரைச் சேர்ப்ப! மற்று, இல்லையே, யானை***
***நொடுவுண்ணின் மூடுங் கலம்.***

அரசன் எப்போதும் செங்கோண்மை உடையவனாக இருத்தல் வேண்டும். அரசனே குற்றங்களைச் செய்தால் மக்களால் என்ன செய்ய முடியும்? **'இல்லையே, யானை நொடு வுண்ணின் மூடுங்கலம்'** என்பது பழமொழி.

16 “அன்பானவர்களே, ஒரு செயலின் வலிமையானது அவன் கற்ற கல்வியின் அளவைப் பொறுத்ததே. ஒரு செயலைச் செய்யும் போது என்னென்ன இடர்கள் வரும் என்று தனது அறிவால் உணர்ந்து, அது வருவதற்கு முன்னே காத்துக் கொள்வதும். துன்பம் வந்தால் அது வரும் என்று தெரிந்து மனம் தளராமல் தொடர்ந்து முயற்சித்து அத்துன்பங்களை எல்லாம் இன்பமாக்கும் தன்மையும் அறிவிற் சிறந்தவர்களுக்கே உண்டு. இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாமென்று தெரிந்து, அதைப் பற்றி அறிந்தவர்களுடன் ஆராய்ந்து, தாம் எடுத்த செயலை நல்ல முறையில் செய்து முடிப்பது அறிவுடையோரின் தன்மையாகும். இதனால் செயலில் வல்ல அறிவுள்ளவர்களை நாட்டை ஆளும் அரசன் கூட விரும்பி வந்து பாராட்டுவான்”.

“அதனால் அன்பானவர்களே. நன்றாகக் கல்லுங்கள். ஒரு மனிதன் தான் இறக்கும் வரை கல்வி கற்க வேண்டுமென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் முடித்தளவு கல்லுங்கள். அத்துடன் ஒரு செயலைச் செய்வதானால் கல்வியறிவுள்ளவனிடம் ஆலோசனை கேளுங்கள். அத்தொழிலில் அறிவு மிக்கவனிடம் செயலை ஒப்படையுங்கள். இது எருது உண்ட உப்பைப் போன்றது. எருது உணவைக் கூடுதலாக உண்டால், அது பலமுடையதாகி உரியவனுக்கு நன்றாக உழைக்கும். அது போலக் கற்றவனும் தான் கற்ற கல்வி அறிவுக்கேற்றளவு உழைப்பான்.”

" உறையூர் மன்னன் விமலசேகரன். உறையூருக்கு அருகே கடலூர் என்றொரு நாடுண்டு. அந்நாட்டின் மன்னன் தவநேசன். தவனேசனுக்கு உறையூரைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் நெடுநாளாக இருந்தது. உறையூர்த் தளபதி வீரசேனன் கடலூர் மன்னனுடன் தொடர்பு வைத்திருந்தான். கடலூரில் நடப்பவற்றை அறிதல் வேண்டும் என்பதற்காக விமலசேகரன், நக்கீரன் என்ற ஒற்றனை அழைத்துச் சொன்னான்; " நக்கீரா, எமது நாட்டைக் கைப்பற்றுவதற்காகக் கடலூர் மன்னன் தவநேசன் முயன்று வருகின்றான். தளபதியான வீரசேனனுக்கும் தவநேசனுக்கும் தவறான உறவுள்ளதாக எனக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒற்றன் என்பவன் யாரும் ஐயப்பட முடியாத உருவத்தோடும், அச்சமற்ற தன்மையோடும், எந்தச் சூழ்நிலையிலும் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தாமலும் இருப்பான். அத்துடன் அவன் அறிவு தரும் நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்திருப்பான். நீ அப்படியானவன். அதனால் கடலூருக்குச் சென்று நிலைமையை அவதானித்து வா" என்றார்".

"வளவன் என்ற பெயரில் வர்த்தகனாக வந்த நக்கீரனிடம் கடலூர் மக்கள் மிகவும் மலிந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்தனர். கடலூர் மன்னன் தவநேசன் வளவனை அரண்மனைக்கு அழைத்தான். கடலூருக்கும் உறையூருக்குமிடையே பல காலமாக வர்த்தகத் தொடர்பு உண்டு. வளவன் விலையுயர்ந்த ஆபரணங்களைப் பரிசாக மன்னனுக்குக் கொடுத்தான். மன்னன் கடலூர் வியாபாரம் முழுவதையும்

அவனிடம் கொடுத்து உறையூரைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அறிய விரும்பினான். தகுந்த சந்தர்ப்பம் வந்த போது நக்கீரன் மன்னனுக்குப் பல தகவல்களைச் சொன்னான். முக்கியமாக ஆரூரன் ஒற்றனாக வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னான். அதன்படி ஆரூரன் கைது செய்யப்பட்டு கடலூர் அரச சபைக்குக் கொண்டு வரப்பட்டான். அவனைச் சிரச் சேதஞ் செய்யுமாறு மன்னன் கட்டளையிட்டான். அப்பொழுது நக்கீரன் சொன்னான் ; "மன்னா, ஒற்றர்களைச் சிறையில் அடைக்கலாமே தவிர சிரச்சேதஞ் செய்யக்கூடாது. அதனால் நீங்காத பழியுண்டாகும். அத்துடன் அவனுடன் பலர் வந்திருப்பர். அதோடு உறையூரைப் பற்றிய தகவல்களையும் பெறலாம். அவனை எனது கண்காணிப்பில் சிறையிலிடுங்கள்" என்றான்".

"நக்கீரனின் சொல்லை முழுமையாக நம்பிய மன்னன் அவனைச் சிறையிலிட்டான். நாலைந்து தினங்கள் கழிய நக்கீரன் ஆரூரருடன் உறையூருக்குத் திரும்பி நடந்தவற்றையும், அங்கு சேகரிக்கப்பட்ட செய்திகளையும் கூறினான். மறுநாள் உறையூர் படைகள் கடலூரைக் கைப்பற்றினர். ஆகையால் உறையூர் மன்னனைப் போல செயலில் உறுதியுள்ள ஒற்றனிடம் செயலை ஒப்படையுங்கள். ஆரூரனைப் போன்றவர்களிடம் செயலை ஒப்படைத்தால் அதனால் பல தீமைகள் வருவதோடு உயிருக்கும் ஆபத்து உண்டாகும்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***உற்றான் உறா அன் எனல் வேண்டா ஒண்பொருளைக்***
***கற்றானை நோக்கியே கைவிடுக்க – கற்றான்***
***கிழவனுரை கேட்கும் கேளான் எனினும்***
***இழவன்று எருதுண்ட உப்பு.***

“கற்றவனிடம் செயலை ஒப்படைத்தல் வேண்டும். எருது அதிளவு உணவைத் (உப்பு) தின்றால், அது பலமுள்ளதாக மாறி உரிமையாளனுக்கு நன்றாக உழைக்கும். அது போலக் கற்றவனும் விசுவாசமாக உழைப்பான். **‘இழவன்று எருதுண்ட உப்பு**’ என்பது பழமொழி.

17 “அன்பானவர்களே, ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் வரும் பெருமையானது, அப்பிறப்புக்கும் மட்டுமல்லாமல் அவன் எடுக்கும் பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும். அது போலக் கல்லாதவனது அறியாமையும் பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வரும். ஒழுக்கம் தவறுவதால் இழிவுடையவராவதைக் காட்டிலும் கல்வியறிவு இன்மையால் வரும் இழிவு அழிவடையாதது. கற்காதவரிடத்தில் நாம் ஒரு இரகசியத்தைச் சொன்னால் அது பௌர்ணமி நிலவு போல உலகத்தவர்கள் அனைவருக்கும் அறிவிக்காமலே தெரியும். கல்லாதவர்கள் தகாத செயல்களைச் செய்வதில் வெட்கப்படமாட்டார்கள். தக்கது எது என்று தெரிந்து கொள்ள மாட்டார்கள். யார் மீது நம்பிக்கை வைப்பது, யார் மீது அன்பு கொள்வது என்பதை அறியாதவராகவே இருப்பார்கள். காக்க வேண்டியவற்றைக் காக்க மாட்டார்கள். இப்படியான

கல்லாதவர்களுடன் சேர்பவர்களும் துன்பத்தை அனுபவிப்பார்கள். அதனால் கல்லுங்கள் ; கற்றவர்களுடன் சேர்ந்திருங்கள்."

"சிவபாலன் மழைக்குக் கூடப் பாடசாலைக் கூரையின் கீழ் ஒதுங்கி நிற்காதவன். அவன் எந்த நாளும் தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்வான். குடித்து விட்டுப் பொது இடங்களிலும், கோயில்களிலும் கலாட்டா செய்வான். அவன் முரடன். அதனால் ஊரவர்கள் எவரும் அவனுக்குப் புத்திமதி கூறுவதில்லை. அவனைக் கண்டதும் ஒதுங்கிச் சென்று விடுவார்கள். அதனால் அவன் ஊரவர்கள் எல்லோரும் தனக்குப் பயந்து மரியாதையளிக்கிறார்கள் என்று எண்ணி வாழ்ந்து வந்தான். அவன், தனது தீய நண்பர்களையே சிறந்தவர்கள் என்று சொல்லிப் போற்றுவான். இழிந்த மனம் படைத்தோர் தம்மை விட இழிவாய் நடப்பவரக்ளைக் கண்டால் தாம் அவரை விட உயர்ந்தவர்கள் என்று எண்ணிப் பெருமைப் பட்டுக் கொள்வார்கள்."

"ஒரு நாள் கோயிலில் திருவிழா நடை பெற்றது. சுவாமி வீதிவலம் வரும் போது சிவபாலனும் அவனது நண்பர்களும் நன்றாகக் குடித்து விட்டுக் கலகஞ்செய்து கொண்டிருந்தனர். அவ்வூர் பெரியவரான அருணாசலம் என்பவர் சிவபாலனுக்கு அருகே சென்று சொன்னார் ; "தம்பீ, கோயிலில் குழப்பம் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது பாவம்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது சிவபாலன் அவருக்கு அடித்து விட்டுச் சொன்னான்". "கோயிலைக் கொள்ளையடிப்பதை விட இது பாவமானதல்ல."

"யாரும் கோயிற் சொத்தை இவ்வூரில் கொள்ளையடித்த தில்லை. ஊரில் பெரிய மனிதரான இவர் உனக்கு என்ன செய்ததற்காக அடித்தாய்? கல்லாதவனுக்குப் புத்திமதிகள் சொன்னால், சொன்னவனை அவன் இழிவாகக் கருதுவான். அவமதிக்கவும் செய்வான். அதனால் இவனைப் பிடித்துக் கட்டிவையுங்கள். காவல்துறையினரிடம் ஒப்படைப்போம்" என்று ஒருவன் சொல்ல, ஊரவர் அவனைப் பிடித்துக் கட்டிவைத்தனர். அதன் பின் காவல்துறையினர் வந்து அவனை அழைத்துச் சென்றனர்".

"அன்பானவர்களே, கீழ் மக்கள் ஒழுங்காக இருக்கிறார்களே யானால் அதற்குக் காரணம் அச்சமேயாகும். இப்படியானவர்கள் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்கு உதவுவார்களே தவிர மற்றவர்களுக்குத் தாம் உண்ட எச்சிற் கைகையைக் கூட உதற மாட்டார்கள். இவர்கள் தமக்குத் துன்பம் நேர்கின்ற போது தம்மைப் பிறருக்கு விற்று விடுவர். அதனால் நீங்கள் கீழ் மக்களுடன் சேராதீர்கள். அவர்களுக்கு மறந்தும் புத்திமதிகள் கூறாதீர்கள். அப்படியில்லாமல் கூறினால். நீங்கள் அவமதிக்கப்படுவதோடு மானத்தையும் இழப்பீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்***
***பொல்லாத தில்லை ஒருவற்கு – நல்லாய் !***
***இழுக்கத்தின் மிக்க இழிவில்லை ; இல்லை,***
***ஒழுக்கத்தின் மிக்க உயர்வு***

கல்லாதவர்களுக்குப் புத்திமதிகள் கூறினால், அவர்கள் புத்திமதி சொல்வோரை அவமதிப்பர். அதனால் பொல்லாங்கே மிகுதியாக வரும். **'இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; 'இல்லை ஒடுக்கத்தின் மிக்க உயர்வு'** என்பன பழமொழிகள்.

18 "அன்பானவர்களே, இவ்வுலகத்தில் நாம் வாழும் வாழ்க்கையை, நாம் பிறவி எடுப்பதற்கு முன் இறைவன் வகுத்து விட்டிருக்கின்றான் என்று நினைத்து முயற்சிகள் எதுவும் செய்யாமல் தினமும் பல முறை கோயிலுக்குச் சென்று வணங்குவதன் மூலம் துன்பங்கள் எதுவும் தீராது. முயற்சி செய்தல் வேண்டும். ஒழுக்கமான வாழ்வும் முயற்சியுமே ஒருவனுக்கு இன்பங்களை அள்ளி வழங்கும் என்பதை உறுதியாக நம்புங்கள். மனதில் எந்த அழுக்குகளும் இல்லாது கடவுளைப் பிரார்த்தித்தல் வேண்டும். விருப்பு , வெறுப்போ, கோரிக்கைகளோ இருக்கக்கூடாது. பெற்றோருக்குத் தமது குழந்தைகளுக்கு என்னென்ன எப்பெப்போ தேவை என்பது தெரியும். அது போலவே உலக மக்களின் பெற்றாரான இறைவனுக்கு மக்களுக்கு என்னென்ன தேவையென்பது தெரியும். தெய்வத்தை வணங்குங்கள். பின் முயற்சி செய்து தானும் உண்டு பிறருக்கும் கொடுத்து வாழுங்கள். அதன் மூலம் தான் உங்களுக்கு நல்வாழ்வு கிட்டும்."

"வேலூரிலே சங்கரன் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் கடவுளை வணங்குவார். பின் வீட்டுக்கு வந்து பேசாமல்

இருப்பார். மனைவி பொருட்களுக்குக் கஷ்டப்பட்டால் , அது ஊழ்வினையென்பார். ஊழ் வினையைக் கடவுளால் தான் தீர்த்து வைக்க முடியும்” என்று சொல்வார். அதைக் கேட்ட அவரின் மனைவி ; “நீங்கள் சொல்வது உண்மை தான். ஒவ்வொரு வரும் தத்தம் ஊழ் வினைகளை அனுபவித்தல் வேண்டும். அதனால் நாமும் அனுபவிக்கிறோம். நீங்கள் தினமும் சிவன் கோயிலுக்குச் சென்று வணங்குகிறீர்கள். சிவனிடம் எமக்குப் பொருள் தரும் படி கேளுங்கள்” என்றாள்”.

“அன்று முதல் சங்கரன் சிவனை மெய்யன்போடு வழிபட்டு தனக்குப் பொருள் தருமாறு வேண்டினார். ஒரு நாள் சிவன் அவர் முன் தோன்றி ; “என்ன வேண்டும்? “ என்று கேட்டார். எனக்கு நிறையப் பொருள் வேண்டும்” என்றார் சங்கரன். சிவன் அப்படியே ஆகட்டும்’ என்று கூறி மறைந்தார். காலங்கடந்தது. ஒருவருடமாகியும் பொருள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மனம் வருந்திய சங்கரன் மீண்டும் தவஞ்செய்தான். அப்பொழுது சிவன் அவன் முன் தோன்றினார். சிவனைக் கண்ட சங்கரன் தனக்குப் பொருள் கிடைக்கவில்லை என்று அழுதான். அதற்குச் சிவன் சொன்னார் ; “சங்கரா, உனக்குப் பொருள் தானாக வராது. நீ முயற்சித்தால் தான் நான் உதவுவேன். ஒரு மரம் நடக் கிடங்கு வெட்டு, புதையலைத் தருவேன். பயிரிடு விளைச்சலைத் தருகிறேன். கடைசி ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டாவது எடு” என்று கூறிவிட்டு மறைந்தார்”.

"அன்பானவர்களே, ஊழ் கொடியது. ஆனால் தெய்வ சிந்தனையுடன் முயற்சிப்பவன் ஊழை வெல்வான். பற்றுக்களோடு இறைவனை வணங்குபவன் ஊழை வெல்ல மாட்டான். அதனால் பற்றின்றி இறைவைனை வணங்குவதோடு முயற்சி செய்யுங்கள். தான தர்மம் செய்யுங்கள். பசு நிரையை மேய்ப்பவன் புல் வெளியில் பசுக்களைக் கொண்டு சென்று விட்டு விட்டுக் காவல் காக்கவேண்டும். இல்லாமல் தனது வேலையைப் பார்த்தால் பசுக்கள் வேறிடஞ் செல்லும், கொடிய மிருகங்கள் கொன்று தின்னும். அது போல எழுதும் போது ஓலையைப் பழுதாக்கினால் அது பாவனைக்கு உதவாது." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று***
***தொழுதிருந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல்***
***இழுகினா னாகாப்ப தில்லையே முன்னம்***
***எழுதினான் ஓலை பழுது.***

ஊழ்வினை காரணமாகத் துன்பங்கள் வந்தால் முயற்சியால் அதை விலக்கலாமே தவிர, இறைவனை வணங்குவதால் துன்பங்கள் போகாது. '**இழுகினா னாகாப்பது இல்லையே ; முன்னம் எழுதினான் ஓலை பழுது'** என்பது பழமொழி.

19 "அன்பானவர்களே, தாம் பிறருக்குக் கொடுத்துதவும் தன்மையினால் வறுமை ஏற்பட்ட போதும், உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள். தமது உயர்ந்த குணத்தை ஒரு போதும் கைவிட மாட்டார்கள். அத்துடன் பெருமை தராத செயல்களை அவர்கள் தவறியுஞ் செய்ய மாட்டார்கள். நல்லவர்களுக்கு உண்டாகும்

களங்கம். வானத்து நிலவில் காணப்படும் களங்கத்தைப் போல உலகத்தவர்களுக்குத் தெரியும். ஆதலால் அவர்கள் ஒரு போதும் பண்பில்லாத செயல்களைச் செய்து களங்கப்பட மாட்டார்கள்".

"பாம்பின் குட்டியானது தாய்ப் பாம்பையும், தனது சமூகத்தையும் விட்டுத் தனித்துக் காணப்பட்டாலும், யாரும் அக் குட்டிப் பாம்பைச் சாதாரணமாகக் கருதமாட்டார்கள். அது போல அரசன் ஒருவன் மக்களை நல்ல முறையில் ஆட்சி செய்து ஊழ்வினை காரணமாக நாட்டை இழந்தாலும், அவனின் பெருமையான குணத்திற்கோ, வீரத்திற்கோ இழுக்கு வரமாட்டாது. அவனை யாரும் குற்றஞ் சொல்லவும் மாட்டார்கள். இது போல மனிதர்களும் வாழுதல் வேண்டும்".

"ஒருவர் பல பட்டங்களைப் பெறலாம், பெரும் பணத்தைப் பெறலாம். பெரும் புகழைப் பெயலாம். ஆனால் நல்ல பண்புகளை இழக்கக் கூடாது. நல்லவர்கள் பணம், பொருள் , பதவி வந்த காலத்திலும் கர்வமோ, பெருமையோ கொள்ளார். அது போல அவற்றை இழந்த காலத்திலும் கவலை கொள்ள மாட்டார். ஒழுக்கமாக வாழ வேண்டுமென்று வாழ்வபவர்கள் அவாப்பட்டுப் பெருமை தராத செயல்களை ஒரு போதும் செய்ய மாட்டார்கள்".

"மிகவும் உயர்ந்த கொடை வள்ளலான கர்னன் போர்க் களத்தில் குற்றுயிராகக் கிடக்கிறான். அவனது உயிரைப் போகவிட தர்ம தேவதை விரும்பவில்லை. அதனால் கர்னன்

குற்றுயிராயிருந்து துன்பபப்படுவதை விரும்பாத கிருஷ்னன் கிழப்பிராமண வடிவில் வந்து இரந்த போது, எதுவும் இல்லாத நிலையில், எதுவும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் நிலை வந்து விட்டதே என்று தான் கர்னன் கவலைப்பட்டான். அதைச் சொல்லி வருந்தினான். பெரியவர்கள் தாம் இறக்கும் தறுவாயிலும் தமது கொள்கையை விட்டு விலக மாட்டார்கள்".

"நாவலடியில் பண்டிதர் கந்தையா என்றொரு ஆசிரியர் இருந்தார். அவர் தான் அவ்வூரில் உள்ளவர்களுக்கு கல்வி கற்பித்தவர். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். அவர்களில் இருவர் இன்னும் திருமணமாகாது இருக்கின்றனர். நாவலடியில் பெரும் பெரும் தனவந்தர்கள் பலர் வாழ்ந்த போதும் பண்டிதர் கந்தையாவிடம் தான் எந்தக் காரியத்தையும் செய்வதானாலும், முதன் முதலாகச் செய்வதானாலும் முதன் முதலாக நிதி கேட்பார்கள். அவர் தன்னாலியன்ற பணத்தைக் கொடுப்பார்."

"அன்று சிவன் கோயிலுக்குக் கோபுரங் கட்டவதற்காக ஆரம்ப நிதியைப் பெறக் கிராமப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுக்குத் தலைமை தாங்கி வந்த சிறுத்தொண்டன் சொன்னார் ; "ஐயா, நாம் சிவன் கோயிலுக்குக் கோபுரம் அமைக்க விரும்புகிறோம். அதற்காக ஊர்த் தனவந்தர்கள் முன் வந்துள்ளனர். நீங்கள் பெரியவர்; ஒழுக்க சீலர் ; தர்ம வான். நீங்கள் ஆரம்பித்து வைந்தால் கட்டட வேலைகள் துரித கதியில் முடிந்து

விடும். ஆகையால் ஆரம்ப நிதியையும் தந்து, புதன்கிழமை வந்து வேலையைத் தொடக்கி வையுங்கள என்றான்”

“பண்டிதர் கந்தையா சிறுதொகைப் பணத்தைக் கொடுத்தார். அன்பானவர்களே, பண்டிதர் கந்தையாவின் தகப்பன் ஏழு தலைமுறைக்குப் போதியளவு சொத்தைத் திரட்டி வைத்திருந்தார். அவரும் பண்டிதர் கந்தையாவும் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். ஊர் மக்களை அன்புடன் நேசித்தனர். இப்பொழுது செல்வம் குறைந்து விட்ட போதும் அவரது பண்புகள் மாறவில்லை. அதனால் ஊரவர்கள் அவரைப் பெரியவராகவே கருதி வந்தனர். அவர் ஏழ்மை நிலையை அடைந்த போதும் அவரை யாரும் குறைகூற மாட்டார்கள். அவரையே மேலானவராகக் கருதி வந்தனர். அதனால் பண்போடும் ஒழுக்கத்தோடும் வாழுங்கள். அப்படி வாழ்ந்து, தாழ்ந்தாலும் எல்லோரும் உங்களை மதிப்பர்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*சீர்த்தகு மன்னர் சிறந்ததனைத்தும் கெட்டாலும்*
*நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச் - சீர்த்த*
*கிளையின்றிப் போஓய்த் தனித்தாயக் கண்ணும்*
*இளைதென்று பாம்பிகழ்வார் இல்.*

உயர்ந்த குடியிற் பிறந்தோர் கேடுகள் வந்து தாழ்ந்து போனாலும் அவரை யாரும் இகழத் துணிய மாட்டார். **‘இளைதென்று பாம்பிகழ்வார் இல்’** என்பது பழமொழி.

20 “அன்பானவர்களே, தொழிலை இகழக்கூடாது. வருமானமில்லாது வாழ்க்கையில் துன்பப்படுபவர்கள் கிடைத்த தொழிலை, அது மிகச் சிறியதாக இருந்தாலும் வெட்கப்படாது ஏற்றுச் செய்தல் வேண்டும். பெரு மழை பெய்கிறது. ஒருவன் மழைக்கு ஒரு கோயிலிலே ஒதுங்குகிறான். அந்தக் கோயிற் குருக்கள் கோயிலுள் வந்து இருக்கும்படி கூறுகிறார். இரவாகியும் மழை விடவில்லை. அதனால் குருக்கள் உண்ண உணவும் கொடுக்கிறார். அவன் உண்டு விட்டுப் படுத்துறங்கி விடியற்காலையில் கோயிலை விட்டுச் செல்கிறான். நல்லதோர் இடத்திலே முதலில் ஒருவன் இருப்பதற்கு இடம் பெற்று விட்டானென்றால், அடுத்து அவன் படுப்பதற்கான இடத்தையும் அங்கேயே பெற்று விடுவான். இது இயற்கையின் நியதி. இது போலவே முதலில் கிடைக்கும் சிறிதளவான ஊதியம் பெறும் தொழிலில் சேர்ந்தவர்கள் பின் படிப்படியாக முன்னேறிப் பெரியவர்களாகி விடுவர்”.

“வேலூரில் ஆதவன், கண்ணன் என்று இரு இளைஞர் இருந்தனர். ஆதவன் நன்றாகப் படித்தவன். கண்ணன் சாதாரணமாகப் படித்தவன். இருவரும் வேலை தேடிப் பட்டணத்திற்கு வந்தனர். பட்டணத்தில் ஒரு வர்த்தக நிலையத்திற்குச் சென்றனர். அங்கு கூலி வேலை செய்ய இருவர் தேவைப்பட்டனர். ஆதவன் கூலி வேலை செய்வது தனக்கும் தான் கற்ற கல்விக்கும் மதிப்பில்லை என்று சென்று விட்டான். கண்ணன் கூலி வேலையில் சேர்ந்தான். முதலாளி மிகவும் கடுமையானவர். அவர் கடுமையான

வேலைகளைக் கண்ணனுக்குக் கொடுத்தார். கண்ணன் அதை ஏற்று மிகச் சிறப்பாகச் செய்து வந்தான். அதை அ வதானித்த முதலாளி தொழிலாளர்களின் மேற்பார்வையாளராகக் கண்ணனை நியமித்தார்".

"அங்கு இருநூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர். அவர்களைக் கொண்டு மிகவும் திறமையாகக் கண்ணன் வேலை செய்வித்தான். ஆறு மாத காலத்துள் அந்நிறுவனத்தின் வருமானம் இரட்டிப்பானது. அதனால் அந்த முதலாளி கண்ணனை மேலாளராக்கினார்".

"இரண்டு வருடங்களின் பின் அந்த வர்த்தக நிறுவனம் பல கிளைகளை நாடெங்கும் நிறுவியது. மேலும் இரண்டு வருடங்களின் பின் கண்ணன் முதலாளியிடம் வந்து சொன்னான் ; "ஐயா, நான் பெரிதாகப் படிக்கவில்லை. தங்களிடம் கூலியாகச் சேர்ந்து தொழிலைக் கற்று வந்தேன். அதனால் நான் தொழிலில் வல்லவனாகி விட்டேன். எனது திறமையைப் பாவித்து முன்னேற விரும்புகிறேன். அதனால் நான் தனியாகத் தொழில் செய்ய விரும்புகிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்" என்று கூறி அவரது பாதங்களைப் பணிந்தான்."

'முதலாளி திகைத்துப் போனார். கண்ணனின் திறமையால் தான் அவர் உயர்ந்தவர். அவன் தன்னை விட்டுச் சென்றால் தான் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுவேனென்றும்,

வாடிக்கையாளர்கள் எல்லோரும் அவனிடஞ்சென்று விடுவார்கள் என்றும் நினைத்துச் சொன்னார் ; "மகனே நீ மிகவும் கெட்டிக்காரன். தொழில் திறமை மிக்கவன். எனக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை. நான் அவளுக்கு மாப்பிள்ளை தேடிக்கொண்டிருக்கிறேன். உன்னோடு பலகாலம் நான் பழகியமையால் உனது குணம் முழுவதும் எனக்குத் தெரியும் . உன்னைப் போல ஒரு சிறந்த மாப்பிள்ளையை அடைய நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்" என்றார்".

"அடுத்த மாதம் அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது. அவனது திருமணத்திற்கு வந்த ஆதவன் தனக்கு ஒரு பொருந்தமான வேலை தரும்படி கண்ணனைக் கேட்டான். அன்பானவர்களே, மலையின் உச்சிக்குப் போக விருப்புபவன் படிப்படியாகத்தான் ஏறிச் செல்ல வேண்டும். ஒரு மாணவன் தரம் ஒன்றில் சேர்ந்துதான் படித்துப் பட்டதாரியாக வேண்டும். எனவே தொழில் சிறியது, பெரியது என்றோ மரியாதைக்குரிய தன்று என்றோ விலக்கக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சிறிதாய கூழ்பெற்றுச் செல்வரைச் சேர்ந்தார்***
***பெரியதாய கூழும் பெறுவர் - அரிதாம***
***இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால்***
***கிடப்புழியும் பெற்று விடும்.***

செய்யும் தொழில் சிறிதாக இருந்தாலும் இகழாது அதை முயற்சியுடன் செய்வோர் பெரிய பலனை அடைவர். **'இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெற்று விடும்'** என்பது பழமொழி.

21 “அன்பானவர்களே, ஒரு செயலின் வலிமையென்பது செய்பவனினின் மன வலிமையேயாகும். பணம், அறிவு, கருவிகள் யாவும் அவனது முயற்சிக்குப் பிறகு தான் உதவும். ஏற்றுக் கொண்ட தொழிலை மனத்திடத்துடன் காலந்தாழ்த்தாது முயற்சி செய்பவன், அதை வெற்றி கொள்வான். முயற்சிதான் அறிவாகும். முயற்சியுள்ளவன் எதையும் இலகுவில் அறிந்து விடுவான். மனதை அது போன போக்கில் விடாமல் தான் எடுத்துக் கொண்ட செயலில் நிலை நிறுத்தி அதைச் செய்து முடிப்பதற்கேற்ற வழிவகைகளைக் கண்டு பிடிப்பதே அறிவாகும்.”

“கண்ணனுக்குத் திருமணம் முடிந்ததும் முதலாளி பொறுப்புக்கள் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்து விட்டுச் சொன்னார் ; “மருமகனே, நீ தனியாகத் தொழில் தொடங்கப் போவதாகச் சொன்னதால் தான் நான் எனது மகளை உனக்குத் திருமணம் செய்து தந்தேன். இப்பொழுது தனியாக புதிய முயற்சியை நீங்கள் உங்கள் சொந்தப் பணத்தில் தொடங்கலாம். இறுதி வரையும் ஏற்ற கடமையைச் சலிக்காது செய்து வெற்றி காணும் தளராத முயற்சி உடைமையே அறிவாகும். அதனால் புதிய முயற்சிகளைத் தொடங்குங்கள்” என்றார்”.

“கண்ணன் தனக்குத் தெரியாத பல விடயங்களைக் கற்றான். புதிய தொழில்களை ஆரம்பிதான். அவன் தொழில் நுட்பங்களைக் கற்றமையால் அவனைத் தொழிலாளர்களால் ஏமாற்ற முடியவில்லை. விற்பனை பற்றியும், புதிய முதலீடுகள்

பற்றியும் அறிந்தமையால் அவன் விற்பனையிலும் புதிய முதலீடுகளிலும் அதிக இலாபம் பெற்றான்.”

“தான் அதிகம் படித்தவன் என்று கர்வப்பட்ட ஆதவன் கண்ணனிடம் கை நீட்டிப் பணத்தைப் பெறும் ஒர் ஊழியனாகவே வேலை செய்தான். அந்த ஊரில் எது நடந்தாலும் அதைப் பற்றிக் கண்ணனுடன் மக்கள் கலந்துரையாடினர். ஒரு முறை அந்த ஊரில் பெரியதொரு தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் விரும்பியது. அரசின் அதிகாரிகள் கண்ணனின் வீட்டுக்கு வந்து பெருமதிப்புடன் அவனை அழைத்துச் சென்று ஆலோசனை கேட்டனர். அமைச்சிற்குப் பொறுப்பாக இருந்த கட்டிடப் பொறியியலாளர் கண்ணன் படிப்பறிவில்லதவன் அவனுக்குக் கட்டிடங்களைப் பற்றி என்ன தெரியும் என்று கேட்டார். அதனால் அவர் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.”

“அதனால், அன்பானவர்களே, இளமையில் பெரிதாகக் கற்காது போனாலும் இனிக்கற்க முடியாதென்ற எண்ணத்தை விட்டு விட்டுத் தான் செய்யும் கருமத்தைப் பற்றி முழுமையாக அறிந்து செயற்படுங்கள். தான் செய்வதை நுட்பமாகச் செய்து முடிப்பதே அறிவாகும். அங்ஙனம் செயலைச் செய்து முடிப்பவன் வயதில் இளையவனேயானாலும், அவனை அறிவில் முதிர்ந்தவன் என்றே கொள்ளுதல் வேண்டும்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*கற்றதொன்று இன்றி விடினும் கருமத்தை*
*அற்ற முடிப்பான் அறிவுடையான் - உற்றியம்பும்*
*நீத்தநீர்ச் சேர்ப்ப! இளையோனே யாயினும்*
*மூத்தானே யாடு மகன்.*

தான் ஏற்றுக் கொண்ட செயலை முடித்துக் காட்டும் முயற்சி உடைமையே அறிவுடைமையாகும் ; **'இளையோனேயாயினும் மூத்தானே யாடு மகன்**' என்பது பழமொழி.

22 "அன்பானவர்களே, செயலில் வல்லமை உள்ளவர்களைத் தான் செயல்களுக்குத் தெரிவு செய்தல் வேண்டும். செய்யும் செயலைப் பற்றிய பூரண அறிவு, அச்செயல்களுக்கான கருவிகளின் தொழிற்பாடு, செயல் புரியும் போது ஏற்படும் தடைகளை நீக்கும் வழிகளைத் தெரிந்திருத்தல், பொறுமை, தொழிலாளர்களின் இன்பதுன்பங்களில் ஈடுபாடு ஆகியவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட வல்வனே தொழில் புரிவதற்கேற்றவனாவான். இந்தச் செயலை இத்தகைய முறையால் இவன் செய்து முடிப்பானென்று நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகே அந்தச் செயலை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டுமே தவிர வேறேதாவது காரணத்தால் சிறந்தவனென்று எண்ணிச் செயற்பட முடியாதவனிடம் செயலை ஒப்படைத்தல் கூடாது. வெட்டப் போகும் ஆட்டை அதன் சம்மதம் கேட்டு அதன் இறைச்சியை யாரும் உண்பார்களா? அது போல வேலை தெரியாதவர்களை அவர்களின் திறமையீனத்தை அவருக்குச் சொல்லி அவரிடம் செயலை ஒப்படைக்க முடியாதென்று யாரும் சொல்ல மாட்டார்கள். எனவே

திறமையில்லை என்று கூறிச் செயலைக் கொடுக்காது விடக்கூடாது. செயலில் திறமை உள்ளவர்களிடம் தொழிலைக் தொழிலைக் கொடுங்கள்.”

“கண்ணன் புதிதாக ஆரம்பித்த வர்த்தக நிலையத்திற்கு ஒரு முகாமையாளரை நியமகிக்க விரும்பினான். அதை அறிந்த ஆதவன் தனது தோழனாக கண்ணணிடஞ் சென்று அப்பதவியைத் தனக்குத் தருமாறு கேட்டான். தனது திறமைகள் அனைத்தையும் சொன்னான். தனக்கு அந்த வேலையைத் தந்தால் நல்லபடியாகவும், விசுவாசமாகவும் வேலை செய்வேன்” என்றான். கண்ணன் பதில் கூறாது சிரித்தான்”.

“ஆதவன் சென்ற பின் இன்னொரு மேற்பார்வையாளரை அழைத்துச் சொன்னான் ; “உனது கடமை உணர்வு, வேலை செய்யும் ஆற்றல், கருவிகளைக் கையாளும் தன்மை, பொறுப்புணர்வு, தளாரா முயற்சி ஆகியவை எனக்குத் திருப்தியாயிருக்கிறது. அதனால் உன்னை நான் எனது புதிய வர்த்தக நிலையத்தின் முகாமையாளராக நியமிக்கின்றேன். நாளை பதவி ஏற்றுச் சிறப்பாகத் தொழிலைச் செய்” என்றான்”.

“ ஒருவரின் தகுதியீனத்தைக் கூறி அவனுக்குக் கொடுக்க வேண்டிய செயலைக் கொடுக்காமல் விடக்கூடாது. அவன் அச் செயலுக்குத் தகுதியுடையவனா என இரகசியமாக ஆய்வு செய்து

தான் முடிவு எடுக்கப்படல் வேண்டும். எடுத்த முடிவை அவனுக்குச் சொல்லக்கூடாது.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நாட்டிக் கொளப்பட்டார் நன்மை இலராயின்***
***காட்டிக் களைதும் எனவேண்டா – ஒட்டி***
***இடம்பட்ட கண்ணாய்! இறக்குமை யாட்டை***
***உடம்படுத்து வௌவுண்டார் இல்.***

ஆட்டின் சம்மதத்தைக் கேட்டு, அவ்ஆட்டின் இறைச்சியை உண்பாரில்லை. ஒரு காரியத்தில் ஈடுபட்டவரை அவரது தகுதியின்மையைக் காட்டி அவரது சம்மதத்தைப் பெற்று நீக்கிவிடுவோம் என நினைகக்ககூடாது. **‘இறக்குமையாட்டை உடம்படுத்து வௌவுண்டார் இல்’** என்பது பழமொழி.

23 அன்பானவர்களே, ஒரு மனிதன் இழந்ததை மீளவும் அடைய முடியாது. அதனால் நாம் எமது சொத்துக்களை நாமே கவனமாகப் பாதுகாத்தல் வேண்டும். சிறந்தவராகிய சுற்றத்தவர் எனக்கருதி நம்பக்கூடாதவரிடத்திலே பெறுமதி மிக்கவற்றைக் கொடுத்தல் கூடாது. அதனால் அதை இழப்பதோடு அதை மீட்க முடியாத தன்மையும் வந்து சேர்ந்து விடும். நீரானது சேரும் நிலத்தின் தன்மையால், தன் இயல்பான தன்மையில் இருந்து வேறுபடும். அது போல மக்களது அறிவு சேர்வோரைப் பொறுத்து மாறுபாடு அடையும். பொருள் சேர்ந்தால் அது ஆசைகளுக்கு வித்திடும். நீங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைப்பதற்காக உங்கள் நண்பரிடம் கொடுக்கிறீர்கள். அவர் தனது தேவைக்கு அதை

எடுத்து விடுகிறார் உங்களுக்குத் தேவையேற்படும் போது கேட்டால் அவரிடம் பணம் இருக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்துத் தருகிறார். அதனால் உங்களுக்கு அப்பணத்தால் பயன் இல்லாமற் போய் விடும்.”

“வேலூரில் நாகராஜா என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவ்வூரவர்கள் தம்மிடமுள்ள பணத்தை அவரிடம் கொடுத்து வைப்பார்கள். கைலாயம் என்பவன் நாகராஜாவிடம் பல இலட்ச ரூபா பணத்தைக் கொடுத்து வைத்திருந்தான். அவன் நல்லை நாதன் என்பவரின் கமத்தைக் குத்தகைக்குச் செய்து வந்தான். நல்லைநாதனுக்கு வயது வந்த மகள் ஒருத்தி இருந்தாள். அவளது திருமணம் தடைப்பட்டு வந்தது. திடீரென்று ஒரு நாள் அவளுக்குத் திருமணம் முடிவானது. மாப்பிள்ளையிடம் வீடு, காணி, கமம் என்பன இருந்தமையால், அவர்கள் சீதனத்தைப் பணமாகக் கேட்டனர்”.

“அதனால் நல்லைநாதன் தனது கமத்தை விற்க விரும்பினர். அவர் குத்தகைக்குக் கமம் செய்த கைலாயத்தை அழைத்துத் தான் கமத்தை விற்பனை செய்யப்போவதாகக் கூறினார். அந்தக் கமத்தை கைலாயம் வாங்க விரும்பி நாகராசாவிடம் தான் கொடுத்து வைத்த பணத்தைக் கேட்டார். நாகராஜா ஒரு மாதத்தில் தருவதாகக் கூறினான். அதை நல்லைநாதன் ஏற்கவில்லை. மறு நாள் கமம் விற்பனையானது. அதை நாகராசா வாங்கியிருந்தார்.”

"அன்பானவர்களே, உங்களது பொருளை நீங்களே வைத்துக் காப்பாற்றுங்கள். நம்பிக்கைக்குரியவர்களென்று நீங்கள் கருதுபவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாகவும், தமது காரியங்களைப் பார்ப்பதற்காககத் தவணை சொல்பவர்களாகவும் இருப்பார்கள். எனவே உங்கள் பொருளை நீங்களே வைத்திருங்கள். சிலர் வட்டிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் , இயலாமை காரணமாகவும் கொடுத்து விட்டு அதை மீளப் பெறமுடியாமல் அவதிப்படுவர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மறந்தானும் தாமுடைய தாம்போற்றின் அல்லால்***
***சிறந்தார் தமரென்று தோற்றார்கை வையார் ;***
***கறங்குநீர்க் காலலைக்கும் கானலஞ் சேர்ப்ப!***
***இறந்தது பேர்த்தறிவார் இல்.***

தம்முடைய உடைமையைத் தாமே பாதுகாத்துப் பேணுதல் வேண்டும். நம்பிக்கையற்றவர்களிடம் கொடுத்துப் பேணினால் சில சமயம் அதை இழந்தும் விட நேரிடும். ; **'இறந்தது பேர்த்தறிவார் இல்'** என்பது பழமொழி.

24 "அன்பானவர்களே, மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம் மற்றைய உயிர்களுக்கு உதவுதலே. இல்லறத்திலிருந்து நல்ல மனையாளுடன் வாழ்வதென்பது, தன்னைத் தேடி இரக்க வருபவர்களுக்கு உதவுவதேயாகும். தன்னை நாடி வந்து இரப்போருக்கு உதவுபவன் வாழ்நாளில் பொருளுக்காகக் கஷ்டப்பட மாட்டான். அவனுக்குதவவென்று கடவுள் பலரைப் படைத்துள்ளார். அத்துடன் அவர் உதவி செய்வோர்க்கு

நேரடியாகவும் வந்து உதவுவார். இப்படியானவரின் இல்லத்தில் இலட்சுமி எவ்வேளையிலும் குடியிருப்பாள்".

"செல்வம் உள்ள காலத்தில் வறுமை எதுவென்றால், ஏழை எளியவர்களுக்கு உணவு இல்லை என்று சொல்வதேயாகும். வறுமையைப் போலத்துன்பந் தருவது உலகில் எதுவும் இல்லை. வறுமை ஒரு குடியை வந்தடைந்தால், அது உலகில் உள்ள துன்பங்கள் அனைத்தையும் கொண்டு வந்து சேர்த்து விடும். அதனால் வறியவர்களுக்கு உதவுங்கள். கொடை என்பது நல்ல ஊற்றுள்ள கிணறு ஆகும். கிணற்றில் நீரை எடுக்க எடுக்க அது உள்ள நிலைக்கு வருவது போல, ஒருவர் கொடுக்கக் கொடுக்க கொடுக்கும் பொருள் வந்து சேரும்."

"வேலூரிலே கணபதி என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னிடத்தில் வரும் செல்வங்கள் அனைத்தையும் கொடுத்து விடுவார். யாராவது ஒருவன் இரக்க வந்தால் இல்லை என்று சொல்லாது முழுமனதுடன் கொடுத்து விடுவார். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள், ஐந்து பெண்ணுள்ள அரசன் கூட ஆண்டியாவான் என்று பழமொழி ஒன்று உண்டு. ஆனால் கணபதி சொல்வார் ஐந்து பெண்ணுள்ள ஆண்டியும் அரசனாவான்" என்று"

'ஊரில் திருமணம் நடைபெற்றால் மணப்பெண்ணுக்குப் பரிசளிபார். ஒரு முறை ஊரில் திருவிழா நடைபெற்றது. வெளியூரில் இருந்து திருவிழாப் பார்ப்பதற்கு மூன்று பெரும் தனவந்தர்கள்

வந்தனர். ஒருவனுக்கு இரவில் அவனது வேலையாள் குடைபிடித்துக் கொண்டு வந்தான். இதைக் கண்ட கணபதியின் மூத்தமகள், தனது தோழிகளுக்கு அதைக் காட்டிச் சிரித்தாள். அந்த வர்த்தகன் தன்னை அவள் பார்த்துச் சிரித்த பின் அடிக்கடி அவளைப் பார்த்தான். அவளும் சிரித்தாள். அவளின் அழகில் மயங்கிய அந்த வர்த்தகன் அவளைத் திருமணம் செய்ய விரும்பினான். அவனும் அவனது நண்பர்கள் மூவரும் பெண்கேட்டு ஊர்ப் பெரியவர்களுடன் கணபதியின் வீட்டுக்கு வந்தனர். அந்த வர்த்தகர்கள் மூவரும் இணைபிரியாத நண்பர்கள். கணபதியின் மூத்த மகளுக்கு உதவியாக வந்த மற்ற இரு பெண்களையும் தாம் திருமணம் செய்தால் தமது நட்பு வலுப்படும் என்று நினைத்து அவர்கள் மூவரும் கணபதியின் மூன்று மகள்களையும் திருமணம் செய்தனர்".

"கணபதியிடம் அன்று ஒருவர் பொருள் கேட்டு வந்தார். அவரிடம் பொருள் எதுவும் இருக்கவில்லை. அப்பொழுது யாரோ ஒருவர் அவரது மூத்த மருமகன் கொடுத்து விட்டதாகச் சொல்லி பொருள் கொண்டு வந்து கொடுத்தார். அதைக் கணபதி இரந்தவருக்குக் கொடுத்தார். அன்பானவர்களே, கொடுத்தவனுக்குக் குறைவிராது. அவனிடம் பொருளில்லா விட்டாலும் இன்னொருவர் தேவை ஏற்பட்டதும் பொருள் கொடுப்பார். எனவே இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இரப்பவர்க்கு ஈயக் குறைபடும் என் றெண்ணிக்***

***கரப்பவர் கண்டறியார் கொல்லோ – பரப்பில்***

***துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப !***

***இறைத்தொறும் ஊறும் கிணறு.***

கொடுக்கக் கொடுக்கப் பொருள் மிகுந்து வரும். இறைக்க இறைக்க கிணறு ஊறுவது போலக் கொடுக்கக் கொடுக்கப் பொருள் பெருகும். **'இறைத்தொறும் ஊறும் கிணறு'** என்பது பழமொழி.

25 "அன்பானவர்களே, பொது நிறுவனங்களில் பொறுப்பான பதவி வகிப்போர் மக்களை அனுசரித்து நடத்தல் வேண்டும். மக்களுக்குச் சேவை செய்தலையே நோக்காகக் கொண்டவர்கள், சட்டம் இப்படிக் கூறுகின்றது என்று சொல்லிச் சட்டத்தை அனுசரித்து நடக்கலாகாது. பெரும் பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் சட்டமிருப்பின், அச்சட்டத்தை மாற்ற வேண்டுமே தவிர அச்சட்டத்தை மதிக்காத மனிதர்களை மாற்ற முற்படக்கூடாது. தலைமைப் பொறுப்பென்ற புகழ்மிக்க பதவி தன்னை விட்டு எப்போதும் நீங்காமல் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், தாம் பதவி வகுக்கும் பொறுப்புக்குரிய மக்களின் நலத்தைக் காக்க வேண்டும். அத்துடன் அவர்களது விருப்பத்தை அறிந்து செயற்படல் வேண்டும்."

"மணியூர் மன்னன் நாகமணியன் மக்களின் நலன்கள் எதுவும் பாதிக்கா வண்ணம் அவர்களது மனநிலை அறிந்து

நடப்பவன். இனிமையான சொற்களை எந்நேரமும் பேசுபவனாகவும், இரக்கம் மிக்கவனாகவும் வாழ்கின்ற அரசனின் செல்வம் எப்போதும் பெருகியபடியே இருக்கும்”.

“அவன் அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்காது புதிய வரிகளை அறிமுகஞ் செய்ய மாட்டான். படைத்தளபதிகளோடு கலந்துரையாடாமல் எந்த நாட்டுடனும் போர் செய்ய முற்படமாட்டான். பெருங்குற்றங்கள் செய்தவர்களை மக்களின் முன் நிறுத்தி அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கேட்பான். அதனால் அவனைத் தெய்வமாக அந்நாட்டு மக்கள் கருதி ப் போற்றி வணங்கி வந்தனர்.”

“ஒரு முறை மணியூரில் பருவமழை பொய்த்து விட்டது. விவசாயிகள் வயலை உழுது பண்படுத்தி விட்டு மழைக்காகக் காத்திருந்தனர். திடீரென்று மழை பெய்தது. விவசாயிகள் பெருமகிழ்வுடன் விதைப்பில் ஈடுபட்டனர். விதைத்த பின் மழை பெய்யவில்லை. அதனால் மக்கள் பெருங்கஷ்டப்பட்டனர். மன்னன் அமைச்சர்களையும், சோதிடர்களையும், விவசாயிகளையும் அழைத்தான். அமைச்சர்களும், சோதிடர்களும் இரண்டொரு நாளில் மழை பெய்யும் என்றனர். ஆனால் மக்களோ இரண்டொரு நாட்களின் பின் மழை பெய்யா விட்டால் பயிர்கள் கருகிவிடும். அதனால் குளத்து நீரைத் திறந்து விடும்படி கேட்டனர். அதை அமைச்சர்கள் ஏற்கவில்லை. பருவமழை பொய்த்து நெற் பயிர் கருகினால் மழை பெய்த பின் மீண்டும் விதைக்கலாம். குளத்தில்

உள்ள நீரைத்திறந்து விட்டால் மக்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிக்கக் கூட நீரில்லாது போய் விடும் என்றனர். மன்னன் சிவனைக் கண் மூடித்தொழுதான். மக்கள் மன்னா, நீரைத் திறந்து விடுங்கள்' என்று அழுதனர். கண் விழித்ததும் மன்னன் நீரைத் திறந்து விடும்படி கூறினான்".

"ஒருமாதத்தின் பின் தான் பெரு மழை பெய்தது. மன்னன் நீரைத் திறக்காது விட்டிருந்தால் மக்கள் மன்னன் மீது வெறுப்படைந்திருப்பர். மழைக் காலங்களில் மழை பெய்யுமுன் குளத்து நீரைத் திறந்துவிடக் கூடாது என்று நாகமணியின் தந்தை கட்டளை யிட்டிருந்தார். அதை நாகமணியன் இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்தான். இருப்பினும் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்காக அவன் சட்டத்தை மாற்றினான். அதனால் அன்பானவர்களே, நிறுவனங்கள், மன்றங்கள், கோயில்கள், குடும்பங்கள் என்பவற்றில் சட்டங்களைக் கையில் எடுத்துப் பாதிக்கப்பட்ட மக்களின் மனதுகளை மேலும் புண்படுத்தாதீர்கள். எது தேவையோ அதற்கு முன்னுரிமை கொடுங்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*மனங்கொண்டக் கண்ணும் மருவில செய்யார்*
*கனங்கொண்டு உரைத்தவை காக்கவே வேண்டும்*
*சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க*
*இனங்கழு வேற்றினார் இல்.*

மக்களிற் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமே தவிரச் சட்டம் இவ்வாறு கூறுகிறதெனக் கூறி

அவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டாம். '**இனாங் கழுவேற்றி னார் இல்**' என்பது பழமொழி.

26 "அன்பானவர்களே, எப்பொழுதும் மனமகிழ்வுடன் இருந்து இனிமையான சொற்களைப் பேசுங்கள். அந்த இனிமையான சொற்கள் உங்களுக்கு எல்லா நன்மைகளையும் தரும். இனிமையான சொற்கள் உங்களைத் தேவர்களாக்கி இறைவனின் அன்புக்காட்பட வைக்கும். அறநெறிகளை அறிந்த பெரியவர்கள் தவறிக்கூட வன்சொற்களைக் கூறமாட்டார்கள். உள்ளம் விரும்பி ஒருவருக்குப் பொருள் கொடுத்து உதவுவதைவிட, முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசுவதே உயர்வானது. இன் சொற்களைப் பேசுவபனுக்கு வறுமை என்பது வாழ்நாளில் வராது. பணிவுள்ளவராக இருங்கள், இன்சொற்களைப் பேசுங்கள். உங்களைத் தேடி உலகில் உள்ள இன்பங்கள் யாவும் ஓடி வரும். இன்சொல் பேசுவதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருங்கள்."

"வேலூரிலே நடராசா என்றொரு பெரும் வர்த்தகர் இருந்தார். அவர் பெரும் கொடைவள்ளல். இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது கொடுப்பவர். இரக்கப் போவோர்க்குப் புத்திமதிகள் கூறுவார் ; கண்டிப்பார் ; தகாத வார்த்தைகள் கூடப் பேசுவார் ; ஆனால் கொடுப்பார். அதே ஊரில் சிவநாதன் என்றொரு விவசாயி இருந்தார். அவர் பெரும் தனவந்தரல்ல. தன்னிடம் வருவோரை அன்புடன் ஆதரித்து இன்சொற்பேசி

ஆலோசனைகள் வழங்கித் தானும் உதவி, தனது நண்பர்களைக் கொண்டும் உதவிகள் செய்ய வைப்பார். இதனால் எந்நாளும் அவரது வீட்டில் மக்கள் இருப்பார்கள்".

"அந்த ஊர் மக்கள் ஊரில் உள்ள சிவன் கோயிலுக்குத் தீர்த்தக் கேணி ஒன்றைக் கட்ட விரும்பி நடராசா விடஞ் சென்றனர். நடராசா சொன்னார்; "சிவன் தீர்த்தமாடக் கிணறு ஒன்றுள்ளது ; ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலையில் குடிக்க நீர் இல்லை. மாணவர்கள் குடிநீருக்காக அலைந்து திரிகிறார்கள். முதலில் பாடசாலைக்குக் கிணறு வெட்ட நடவடிக்கை எடுங்கள்" என்றார்".

"வந்தவர்கள் எதுவும் பேசாமற் சென்று விட்டனர். அவர்கள் சிவநாதனின் வீட்டுக்குச் சென்றனர். அவர் சொன்னார் ; "நல்ல முயற்சி, நான் பணம் தருகிறேன். எனது நண்பனான சிவராஜனிடமும் பணம் பெற்றுத் தருகிறேன். வாருங்கள் வீடு வீடாகச் சென்று பணம் கேட்போம்" என்றார்".

"சிவநாதனும் மக்களும் ஊர் முழுவதும் சென்று நிதி திரட்டி ஒரு மாத காலத்துள் சிவன்கோயிலுக்குத் தீர்த்தக்கேணி வெட்டிக் கட்டிக் கொடுத்தனர். அந்த வருடத் திருவிழாவன்று சிவன் அந்தப் புதிய கேணியில் தீர்த்தமாடினார்".

“நடராசா தனது செலவில் பாடசாலைக்குக் கிணறு வெட்டிக் கொடுத்தார். சிவநாதன் நடராசாவின் வீட்டுக்குச் சென்று அவரைப் பாராட்டினார் ; “உங்களைப் போல வள்ளல் தன்மை உள்ளவர்கள் இந்த ஊரில் யாருமில்லை. ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் வேலையை நீங்கள் தனித்து நின்று செய்து விட்டீர்கள்” என்றார்.

“சிவநாதன் சொன்னார் ; “இந்த ஊரவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாத பேதைகளாகவே இருக்கிறார்கள். பாடசாலையில் நீரில்லாமல் தினமும் ஐந்நூறு பிள்ளைகள் தவிக்கிறார்கள். சிவனுக்குத் தீர்த்தக் கிணறுண்டு. முதலில் பாடசாலைக்கல்லவா கிணறு வெட்டுதல் வேண்டும். எல்லாம் அறிந்த உங்களுக்குக் கூட இது புரியவில்லையே” என்றார்.

“சிவநாதன் சிரித்து விட்டு வந்தார். உண்மையில் நடராசா சொன்னது சரி. அதை முறையாகச் சொல்லியிருந்தால் நடராசா மதிக்கப்பட்டிருப்பார் என்று நினைத்தவாறு வந்தார். அப்பொழுது அவ்வழியால் வந்த அந்த ஊரவரான கதிரேசன் சொன்னான் ; “ நடராசா தனது புகழுக்காகத் தானே முழுச் செலவையும் ஏற்றுக் கிணறு வெட்டிக் கட்டிக் கொடுத்திருக்கிறார். ஊராரையும் சேர்த்திருக்கலாம் தானே. புகழ் விரும்பிகள் இப்படித்தான் நடப்பார்கள்” என்றார்.”

“அதனால்அன்பானவர்களே, செயலைச் செய்யாவிட்டாலும் மற்றவர்களை மதித்து அன்பாகப் பேசுங்கள். நடராசா உண்மையில் புகழ்விரும்பியல்ல. ஆனால் அவரது திமிரான கதை அவர்மீது மக்களுக்கு வெறுப்பைக் கொடுக்கிறது. ஆதலால் அன்பாகப் பேசுங்கள். மற்றவர்களை மதியுங்கள். அப்பொழுது தான் மற்றவர்கள் உங்களை மதிப்பார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்***
***வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?***
***புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை***
***இன்சொல் இடர்ப்படுப்ப தில்.***

இனிமையாகவும், மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் பேசி வாழுங்கள். அது எல்லாச் சிறப்புக்களையும் தரும். **‘இன்சொல் இடர்ப்படுவதில்’** என்பது பழமொழி.

27 “அன்பானவர்களே, அறிவு மிகுந்தவர்கள் பேசும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. தான்முந்திக் கொண்டு கருத்துக்கூற வேண்டும் என்றும் நினைக்கக்கூடாது. அப்படிக் கூறவிரும்பினால் கூட்டத்தோடு கூட்டமாகப் பேசாது தனித் தனியாகப் பேச வேண்டும். இரண்டு மூன்று பேர் கருத்துக் கூறினால், அது கேட்பவர்களுக்கு விளங்காது. அத்துடன் குழப்பமேற்பட்டுத் தீராத பகையையும் உண்டாக்கிவிடும். அதனால் கூட்டங்களிற் பேசுவதாயின் ஒவ்வொருவராக எழுந்து தனது கருத்துக்களைக் கூறுதல் வேண்டும்.

அப்படியில்லாது இருவர் ஒரே சமயத்தில் பேசுவதென்பது ஒரு நாயைக் கொண்டு இருவர் வேட்டையாடுவதைப் போன்றதாகும். நாய் வேட்டையாடிக்கொண்டு வந்த பிராணியைப் பங்கு போடுவதில் பிரச்சினைகள் வருவது போலக் குறுக்கீடு செய்யும் இவருக்கிடையே பிரச்சினைகள் வரும்".

"வேலூரில் நடைபெற்ற முத்தமிழ் விழா ஒன்றில் பெரும் அறிஞர் என்று தன்னைத்தான் சொல்லிக் கொள்ளும் சிவஞானம் பேசிக்கொண்டிருந்தார். நல்ல நடையில் பேசத்தெரிந்தோர், சபையில் உள்ளவர்கள் எல்லோரும் தன் பேச்சைக் கேட்கிறார்களா என்று சபையைப் பார்த்து அறிந்தறிந்து தான் பேசுவார்கள். அப்படிப் பேசாதவர்கள் பேசும் போது சபையில் சலசலப்புகள் ஏற்படும். சிவஞானம் பேசும் போது திருக்குறள் சமணநூல் என்றார். உடனே சபையில் இருந்த பலர் ஒன்றாக எழுந்து, "திருக்குறள் சைவ சமய நூல். அதனால் சிவஞானம் தான் சொன்னதைப் பிழையென்று ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றனர்".

"இன்னொருவன் எழுந்து திருக்குறள் சமணநூல் தான். பிழை கூறமுடியாது. சிவஞானம் அதைப் பிழையென்று ஏற்கக்கூடாது என்றான். இதனால் குழப்பம் உண்டாகித் தமிழ் விழா குழம்பியது. ஆகையால் நாம் எப்பொழுதும் அவையில் பேசும் போது கவனமாக இருத்தல் வேண்டும். ஒரு கருத்தை அவையில் சொல்லத் துணிவு வேண்டும். அத்துடன் எந்தக் கருத்தைக் கூறினாலும் அக்கருத்தைச் சபையில் உள்ளவர்களின் மனதிற்

பதியுமாறு எடுத்துக்கூற வேண்டும். அப்படிப் பதியுமாறு கூறுபவர்கள் கற்றவர்கள் அனைவரையும் விடக்கற்றவர்களாவர். அத்துடன் சபையில் இருந்து கேட்போர் தமது கருத்தைச் சொல்வதாயின் இன்னொருவர் சொல்லும் போது சொல்லக்கூடாது. பேசுபவர் சொல்வதையும், அதை மறுத்துரைப்பவர் சொல்லுவதையும் நன்கு கேட்டு ஆராய்ந்த பின்புதான் பேச வேண்டும். குழப்பத்தை உண்டு பண்ணவென வந்தவர்கள் தான் கும்பலோடு கும்பலாக நின்று பேசுவார்கள். இவர்கள் அவைப் பண்பினை அறியாதவர்களாவர். எனவே அவையில் ஒருவரின் பேச்சை மறுத்துப் பேசுவதானால் ஒவ்வொருவராக மறுத்துப் பேசுங்கள்" என்றார் நமசியாவம் சுவாமிகள்.

***ஒருவர் உரைப்ப உரைத்தால் அதுகொண்டு***
***இருவரா வாரும் எதிர்மொழியல் பாலா***
***பெருவரை நாட! சிறிதேனும் இன்னாது***
***இருவர் உடனாடல் நாய்.***

அவையிலே ஒருவன் சொன்ன கருத்தை ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்டோர் மறுத்துப் பேசலாகாது. அது அவைப் பண்பும் அல்ல. **'இன்னாது இருவர் உடனாடல் நாய்'** என்பது பழமொழி.

28 "அன்பானவர்களே, நட்பைப் போல தொடர்பு கொள்வதற்கு பெருமையானது வேறெதுவும் இல்லை. அது போலத் தொழிலுக்குச் சிறந்தபாதுகாப்பாகவும் விளங்குவது நட்பாகும். அறிவுடையவர் –

களது நட்பு வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கும். அது மறுமையிலும் தொடர்ந்து வந்து நன்மைகளைத் தரும். நட்புக் கொள்ளும் போது நன்கு ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும் அவனிடம் உள்ள குறைகளையும், அவனைச் சேர்ந்தவர்களின் இயல்பையும் அறிந்த பின்பே நட்புக் கொள்ளல் வேண்டும். நண்பர்கள் பல வகைப்படுவர். ஆபத்து உண்டாகும் போது தமது உயிரினைக் கொடுத்தும் சிலர் காப்பாற்றுவார்கள். சிலர் தமக்குப் பயனுள்ள போது நட்பாக இருப்பார்கள். பயனில்லாத போது நீங்கிவிடுவார்கள். சிலர் நண்பர்களைப் போல நடித்துப் பகைவர்களுக்கு உதவியும் செய்வார்கள். அதனால் நட்புக் கொள்ளும் போது மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.”

“அன்பானவர்களே, கொடியவிலங்குகள் கூடப் பழகியவர்களை விட்டுப் பிரியக் கஷ்டப்படும். கொடுமையைச் செய்கின்றவரோடு என்றாலும் அன்பாகப் பழகி நட்பு வைத்தால் அது அன்புவைத்தவரைப் பிரியாது.”

“வேலூரில் வாழ்ந்த சதாசிவம் என்பவன் இரக்க சுபாவம் கொண்டவன். அவன் துன்பப்படுபவர்களுக்குத் தன்னாலான உதவிகள் செய்வான். அந்த ஊரில் வாழும் கந்தவனம் என்பவன் சதாசிவத்தின் நற்பண்புகளாற் கவரப்பட்டு அவரின் வீட்டுக்கு அடிக்கடி வருவான். தனது குடும்பம் விருத்திடைய ஆலோசனை கேட்பான். ஆனால் அவன் மது அருந்துபவன். மது அருந்தினால்

தனது வீட்டிற்கு வரக்கூடாது என்று சதாசிவம் அன்போடு சொல்வார். அதட்டிச் சொல்வார் ; எச்சரிப்பார். இருந்த போதும் அவன் மதுவருந்திய போதும் அங்கு வருவான். சதாசிவம் ஏசினால் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்பான். இனிக் குடிக்க மாட்டேன் என்பான். பின் குடித்து விட்டு வருவான்.”

“அன்று சதாசிவத்தின் மகளுக்குத் திருமண நிட்சயதார்த்தம் செய்யும் நாள். மாப்பிளை பகுதியினர் வந்து விட்டனர். அப்பொழுது கந்தவனம் நன்றாகக் குடித்து விட்டுச் சபையில் வந்தமர்ந்து சதாசிவத்தின் குடும்பத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தான். அது மாப்பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. அதை மாப்பிள்ளையின் தகப்பன் சதாசிவத்திற்கு கூறினார். மாப்பிள்ளை பகுதி சென்றதும் சதாசிவம், கந்தவனத்தை இனி தனது வீட்டுக்கு வரக்கூடாது என்று ஏசினார். அவரது மனைவியும் மகளும் சேர்ந்து ஏசினார்கள். ஆனால் மறுநாள் கந்தவனம் அவர்களது வீட்டிற்கு வந்தான். சதாசிவம் அவனை ஏசவில்லை; “பேயோடு தன்னும் அன்பாகப் பழகினால், அது பின் தொடரத்தான் செய்யும்” என்றார். ஆகையால் நண்பர்களாக ஏற்றுக் கொள்ளும் போது அவர்களது குணங்களை நன்கு ஆராயுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்*
*கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா - இலங்கருவி*
*தாஅய இழியும் மலைநாட! இன்னாதே*
*பேஎயோ டானும் பிரிவு.*

தகுதியுடையவர்களுடனேயே நட்புப்பூண வேண்டும். இல்லாவிட்டால் அது துன்பத்தைத்தரும். **'இன்னாதே பேயோடானும் பிரிவு'** என்பது பழமொழி.

29 "அன்பானவர்களே, பெரியவர்களை எப்போதும் மதித்துப் போற்றுங்கள். பெரியவர்களை மதித்துப் போற்றித் தமக்குச் சுற்றமாக ஆக்கிக் கொண்டால், கொண்டவனுக்குக் கேடுவரப் பெரியவர்கள் விடமாட்டார்கள். பெரியவர்களின் சுற்றம் எப்பொழுதும் துன்பங்களை விலக்கி இன்பங்களையே தரும் தன்மை கொண்டது. தக்க வழிகளை ஆராய்ந்து கூறித் துணையாக இருக்கும் பெரியவர்களை அரசன்தனது கண்களாகப் போற்றுவான். இத்தகைய பெரியவர்கள், தம் பொருட்கள் முழுவதையும் இழந்தவிடத்தும், தம்முடைய பெருந் தன்மையிலிருந்து குறைவுபடமாட்டார்கள். மேல்மாடங்க – களையுடைய பெரிய வீடானது அழிந்தவிடத்தும் அதிலுள்ள பொருட்கள் மீண்டும் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படும். அது போலப் பெரியவர்களிடத்துச் செல்வம் இல்லாது போனாலும் , அவர்களது பண்புகள் மதிக்கப்படும் அதனால் மக்கள் எல்லோரும் பண்புடைய பெரியவர்களாக வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும்."

"வேலூரிலே சிவசம்பு என்றொரு பெரியவர் இருந்தார். வயது முதிர்ந்தமையால் அவர் தனது தொழில்களைக் கைவிட்டு சேமிப்பில் இருந்த பணத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தார். பிள்ளைகள் பெரும் வசதிபடைத்தவர்கள் அல்லர். இருந்த போதும்

அவருக்கு எந்தவிதமான கஷ்டங்களும் ஏற்படாதவண்ணம் பாதுகாத்து வந்தனர்."

"வேலூரில் பெரும் தனவந்த வர்த்தகன் மணிவண்ணன். அவனிடம் பல கப்பல்கள் இருந்தன. ஆயிரக்கணக்கானோர் அவனிடம் வேலை செய்து வந்தனர். வேலூர் அரசனுக்கு வேண்டியளவு உதவிகளை மணிவண்ணன் செய்து வந்தான். வேலூர் அரசன் புதிதாக ஒரு சிவன் கோயிலைக் கட்டவிரும்பினான். அதற்கான அடிக்கல்லை பெரியதொரு பெரியவரைக் கொண்டு நாட்ட விரும்பினான். மக்கள் எல்லோரும் மன்னனின் நெருங்கிய நண்பனும், பெரும் தனவந்தனும், பெரும் கொடையாளியுமான மணிவண்ணனைக் கொண்டு தான் மன்னன் அடிக்கல்லை நாட்டுவானெனப் பேசிக் கொண்டனர். அடிக்கல் நாட்டும் நாளன்று சிவசம்புவை அரண்மனை ஊழியர்கள் பல்லக்கில் சுமந்து வந்தனர். சுபவேளையில் அவர் சிவன் கோயிலிற்கான அடிக்கல்லை நாட்டினார். மக்கள், பிரதானிகள், அமைச்சர்கள் எல்லோரும் திகைத்து நின்றனர். மன்னன் சொன்னான் ; "ஒரு பெரியவரைக் கொண்டு தான் நான் அடிக்கல்லை நாட்ட விரும்பினேன். இச்செய்தியை அறிந்த துரையூர், புலியூர், மாவடி மன்னர்கள் சிவசம்புதான் உங்கள் ஊரில் பெரியவர் என்றனர். ஊரில் உள்ள பிரமுகர்களும் அவர் தான் பெரியவர்" என்றனர். அதனால் அவரைக் கொண்டு அடிக்கல் நாட்டினேன்" என்றான்"

“ஆதலால் அன்பானவர்களே, பணக்காரனையும், அறிவுள்ளவர்களையும் பெரியவர்கள் என்று எண்ணாது அறம் உணர்ந்தவராய்,அறிவுள்ளவராய், எதிர் காலத்தை உணர்ந்தவராய், கண்டித்து அறிவுரைகூறத் தக்கவராயுள்ள மூத்தவரையே நீங்கள் பெரியவராகக் கொள்ளல் வேண்டும்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்*
*கூடம் மரத்திற்குத் துப்பாகும் - அஃதேபோல்*
*பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்*
*ஈடில் லதற்கில்லை பாடு.*

பெரியவர்கள் தம் வலிமையும் செழுமையும் குறைந்த போதும் பெருந்தன்மையுடன் உதவுவார்கள். சிறியோர் தமக்குப் பயன்படா விட்டால் உதவமாட்டார்கள் ; **“ஈடில்லதற்கில்லை பாடு’** என்பது பழமொழி.

30 “அன்பானவர்களே, கடமையை உணர்ந்து போற்றும் நற்குணமுடையோர், தீமை செய்பவர்களையும் பொறுத்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தவர்கள். சான்றோரின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் குணங்களின் சிறப்பேயாகும். அன்பு, நாணம், உதவும் பண்பு, இரக்கம், உண்மை ஆகிய ஐந்து குணங்களும் சான்றோரின் குணங்களாகும். தம்மை விடத் தாழ்ந்தவர்களிடத்திலும் கூடச் சான்றோர் தமது பிழைகளை ஒத்துக்கொள்வர். இத்தகைய சான்றோரும் தொடர்ந்தும் பெரும் பிழைகளைச் செய்யும் தீயவர்களைப் பொறுத்துக் கொள்ள

மாட்டார்கள். அதனால் தீமை செய்வோர் சான்றோரின் சான்றான்மையைத் தவறாக எண்ணித் தொடர்ந்த பிழை செய்தால் அவர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். வாழை மரம் ஒரு முறை தான் குலை ஈனும், பலமுறை ஈனாது. அது போன்றது தான் சான்றோரது குணம். எனவே பெரியவர்கள் பிழைகள் செய்வோரை மன்னிக்கிறார்கள் என்பதற்காகத் தொடர்ந்து பிழைகள் செய்யக்கூடாது.”

“வேலூரிலே சதாசிவம் என்றொரு சான்றோர் இருந்தார். அவரின் வீட்டிற்குக் கந்தவனம் என்ற குடிகாரன் அடிக்கடி சென்று வந்தான். அவன் ஊரில் திருடி அப்பணத்தில் குடித்து வந்தான். சதாசிவத்தின் மகளின் திருமண நிட்சயதார்த்த தினத்தன்று சதாசிவத்தின் வீட்டிற்குக் குடித்துவிட்டு வந்து வீண்கதைகள் பேசியமையால், சதாசிவம் தனது வீட்டிற்கு வரவேண்டாம் என்று கூறியும், அவன் வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு நாள் சிவன் கோயிலை உடைத்து அங்கிருந்த உண்டியலைத் திருடி விட்டான். ஊர்ப்பிரமுகர்கள் அவனைப் பிடித்து வந்து சதாசிவத்திடம் கொடுத்தனர். சதாசிவத்திடம் கொடுத்தால் தன்னை அவர் ஏசிவிட்டு இனிமேல் இப்படி நடவாதே என்று எச்சரித்து விடுவார் என்று நினைத்தான் கந்தவனம். ஆனால் சதாசிவம் அவனைக் கண்டதும் சொன்னார் ; “ இவனைக் கொண்டு சென்று காவல் துறையில் ஒப்படையுங்கள். அவர்களைக் கொண்டு கடுமையாகத் தண்டித்தால் தான் இவனைப் போன்றவர்கள் திருந்துவார்கள். நான் இவனது குடும்ப நிலையைப் பார்த்து மன்னித்து மன்னித்து

விட இவன் அளவுக்கதிகமாகக் குற்றங்களைச் செய்கிறான். வாழை ஒரு முறை தான் குலை ஈனும். அதுபோலத் தான் சான்றோரும் நடந்து கொள்ளல் வேண்டும். இவனை மன்னித்து மன்னித்து விடுவதால் ஊரவர்கள் என்னைக் குறை கூறுகிறார்கள். அத்துடன் இவனுக்குத் தண்டனை என்றால் என்னவென்று தெரிதல் வேண்டும்" என்றார்".

"ஆகையால் அன்பானவர்களே, பெரியவர்கள் என்றாலும், அவர்களின் பொறுமைக்கு அளவுண்டு. அதனால் மதிப்புடன் நடந்து கொள்ளப் பழகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**முன்னும் ஒரு கால்பிழைப்பானை ஆற்றவும்**
**பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ? – இன்னிசை**
**யாழின்வண் டார்க்கும் புனலூர! ஈனுமோ,**
**வாழை இருகால் குலை?**

சான்றோர் பிறர் செய்யும் பிழைகளைப் பொறுப்பார்கள்.எனினும், அவர்களது பொறுமைக்கும் அளவுண்டு. அதனால் தொடர்ந்து சான்றோர் வெறுக்கும்படியாகத் தீமைகளைச் செய்யக்கூடாது. **"ஈனுமோ, வாழை இருகால் குலை'** என்பது பழமொழி.

31 ‘‘அன்பானவர்களே, ஆடைகள் தான் மனிதனை முழுமைப்படுத்துகிறது. ஒவ்வொருவரும் தாம் கற்ற கல்விக்கும், அறிவிற்கும், தன்னிடமுள்ள பணத்திற்கும் தகுந்த ஆடைகளை அணிதல் வேண்டும். ஆடைகள் மனிதனுக்கு மதிப்பை மட்டுமல்ல புகழையும் கொடுக்கும். ஒருவனது பெருமையை, அறிவை, பணத்தை வெளிப்படுத்துவது அவன் அணியும் ஆடைகளே. அது போல அவன் அணியும் ஆடைகள் அவனைக் கீழ்மையும் படுத்தும். படிக்காதவன் பண்டிதனைப் போல ஆடையுடுத்திச் சென்றால் சில சமயம் கற்றவர்கள் அவனோடு பழகும் போது அவனது அறிவை நினைத்து நகைப்பர். பண்டிதன் ஒருவன் பாமரன் போல ஆடை அணிந்து சென்றால் கற்றவர்கள் அவனை மதிக்க மாட்டார்கள். அத்துடன் மக்கள் அவனைச் சாதாரணமானவன் என்று எண்ணிப் பேசாது இருந்துவிடுவர்.”

‘நாகபுரி மன்னன் மார்த்தாண்டன் வேலூர் மன்னனின் உற்ற நண்பன். மார்த்தாண்டன் தனது அறுபதாவது பிறந்த தினத்தை வெகுவிமரியையாகக் கொண்டாட விரும்பி, வேலூர் மன்னனுக்கும் அங்குள்ள அறிஞர்களுக்கும் அழைப்பிதழ்களை அனுப்பி வைத்தான். வேலூர் மக்கள் நாகபுரிச் சந்தைகளுக்கும் கோயில்களுக்கும் களியாட்ட விழாக்களுக்கும் செல்வது போல நாகபுரி மக்களும் வேலூர் விழாக்களுக்கு வந்து போவர்.”

“வேலூரில் சிதம்பரம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரியதாய்ப் படிக்கவில்லை. அத்துடன் பெரிய பணக்காரருமல்ல.

வேலூரில் சண்முகம் என்றொரு பெரும் அறிஞர் இருந்தார். மிகவும் வசதியான அவர், தான தர்மம் செய்வார் ; இரப்பவர்களுக்குச் செல்வம் கொடுப்பார். ஆனால் அவர் பெருமையில்லாதவர். சாதாரண மனிதர்களைப் போலவே உடை அணிவார்".

"நாகபுரி மன்னனின் பிறந்த தினவிழாவுக்கு சிதம்பரம் பட்டுப்பீதாம்பரம் அணிந்து பெரியதொரு தனவந்தரைப் போலச் சென்றார். சண்முகம் சாதாரண மனிதரைப் போலச் சென்றார். நாகபுரிக்குச் சென்றதும் பெரும் பிரமுகர்களும், போர் வீரர்களும் சிதம்பரத்தை ஓடோடி வந்து வரவேற்று அவரைப் பிரமுகர்கள் தங்கவெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் சண்முகத்தைப் பார்த்து ; "ஐயா, பெரியவரே, இன்று மடத்தில் மன்னரின் பிறந்த நாளுக்காக ஏழை எளியவர்களுக்கு விசேட உணவு வழங்கப்படுகிறது. சாப்பிட்டீர்களா..? சாப்பிடாவிட்டால் போய்ச் சாப்பிடுங்கள்" என்றனர். தன்னுடன் வந்து, படுத்துறங்க ஓர் இடம் தானும் இல்லாத சிதம்பரத்திற்குப் பிரபுகளுக்கான வரவேற்புக் கிடைத்தது. எனக்கு அவமதிப்புக் கிடைத்தது. அதற்குக் காரணம் எனது உடைதான்" என்று நினைத்தார் சண்முகம்"

"ஆகையால் அன்பானவர்களே, பெரும் பெரும் விழாக்களுக்கும், சடங்குகளுக்கும் செல்லும் போது உங்களது தகுதிக்கேற்ற உடைகளை அணிந்தால் தான் நீங்கள் மதிக்கப்படுவீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அகத்தால் அழிவு பெரிதாயக் கண்ணும்***
***புறத்தாற் பொலிவுறல் வேண்டும் - எனைத்தும்***
***படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை***
***உண்டி வினவுவார் இல்.***

அறிஞர்கள் வறுமை வந்த போதும் தம்மை தாழ்த்திக் கொள்ளக் கூடாது **“உடுத்தாரை, உண்டி விளைவார் இல்**’ என்பது பழமொழி.

32 “அன்பானவர்களே, ஒருவர் செய்த உதவியை உயிர் உள்ளவரை மறவாதிருங்கள். நீங்கள் ஒருவருக்கு எந்த உதவியும் செய்யாத போது உங்கள் நிலையைக் கண்டு இரங்கி கைமாறு கருதாது ஒருவர் செய்த உதவியானது விண்ணுலகையும், மண்ணுலகையும் கொடுத்தாலும் போதாது. அது போல உங்களுக்கு ஒரு பொருள் தேவைப்படும் காலத்தில் அப்பொருளை ஒருவன் கொடுக்கிறான். அப்பொருள் பெறுமதி குறைந்த பொருளானாலும், அதன் தன்மையை நினைத்துப் பார்த்தால் அப்பொருள் இம்மண்ணுலகை விடப் பெரியதாகும். அதனால் கைம்மாறு கருதாமல் உதவி செய்யுங்கள். பிறர் செய்த சிறு உதவியையும் பெரிதாக எண்ணி நன்றியுடையவர்களாக இருங்கள்”

‘வேலூரில் வாழ்ந்த சண்முகம் பெருங்கொடை வள்ளல். அவர்தான் பெரும் தனவந்தன் என்றோ, பெரும் கொடை வள்ளல் என்றோ வாய் திறந்து சொன்னதில்லை. அத்துடன் அன்று கொடுப்பதை அன்றே மறந்து விடுவார். சண்முகத்தை நாகபுரிப் பிரமுகர்கள் மடத்தில் சென்று உணவு உண்ணச் சொன்னதையும்,

சிதம்பரத்தை அதே பிரமுகர்கள் பெரும் மதிப்பளித்து வரவேற்பதையும் கண்ட மருதமுத்து என்பவன் ஆறுமுகம் என்பவனுக்குச் சொன்னான் ; "பார்த்தியளே சிதம்பரத்திற்கு வந்த மதிப்பை. சண்முகம் ஐயா பெரிய தனவந்தர். பிச்சைக் காரனைப் போல உடை உடுத்து வந்தால் பிச்சைக்காரனாக மதிக்கப்பட்டார். சிதம்பரம் பிச்சைக்காரன். பிரபுவைப்போல உடை உடுத்தி வந்தார். மதிக்கப்பட்டார். சண்முகத்திற்கு நல்ல உடை உடுத்த மனம் வராது . தகப்பன் பெரிய வர்த்தகன். கலப்படம் செய்து வரும் இலாபத்தில் தான் இவர் தான தர்மம் செய்கிறார" என்றான்".

"உனக்கு நாக்கு அழுகிப்போம். ஊரில் சிதம்பரத்தை யாராவது மதிக்கிறார்களா? அறியாத ஊருக்குப் போகும் போது அவரவரின் தகுதிக்கேற்ற உடை அணிந்தால் தான் மதிப்பார்கள். சொந்த ஊரில் அவரவரின் குணத்தைத்தான் மதிப்பார்கள். உனது மகன் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த போது, உனக்கு எவ்வளவு உதவிகள் செய்தவர். அது மட்டுமா புயற்காற்றின் போது உனது வீடு சேதமுற்ற போது உன்னைக் கூட்டிச் சென்று தனது வீட்டில் வைத்திருந்ததோடு சேதமடைந்த வீட்டையும் திருத்தித் தந்தவர். அந்த மனிசனைப் பற்றி இப்படிப் பேசுகிறாயே உனக்கு வெட்கமாயில்லை. உனது உற்றார் உறவினர்கள் தெரியாதது போல இருக்க அவர் வலிய வந்து உனக்கு உதவி செய்தவர். அவரைப்பற்றி நீ தவறாகக் கதைப்பது உணவு தந்தவரின் வீட்டைத் தீயிட்டுக் கொழுத்துவதைப் போன்றது. என்னோடு கதைப்பதைப் போல இன்னொருவரோடு கதைக்காதே.

அவர்கள் சென்று சொன்னால், சண்முகம் வருத்தப்படுவார். அதை விட நீ மேலும் இதைப் பற்றிக் கதைத்தாயேயானால் கடவுள் தரும் சோற்றை உனக்குத் தரமாட்டார்." என்றான் மருதமுத்து".

"அதனால் அன்பானவர்களே, உதவி பெரியதோ, சிறியதோ என்று பாராமல் உதவி செய்தவரை உலகம் உள்ளவரை மதிக்கப் பழகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பண்டினர் என்று தமரையும் தம்மையும்***
***கொண்ட வகையால் குறைசீர நோக்கியக்கால்***
***விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பின் அஃதால்***
***உண்டவில் தீயிடு மாறு.***

ஒருவர் உதவிய நன்றியை மறந்து புறங்கூறுவது மிகவும் இழிவானது ; கொடுமை மிக்கது ; வெறுக்கத்தக்கது. **'உண்டவில் தீயிடுமாறு'** என்பது பழமொழி.

33 "அன்பானவர்களே, ஒருபோதும் உங்களை நம்பியவர்களு -க்குத் துரோகம் செய்யாதீர்கள். ஒருவன் ஒரு செயலைச் செய்ய உறுதியான மனம் வேண்டும். உறுதியான மனமுள்ளவர்கள் வீரர்கள். அவர்களால் தான் ஒழுக்கமாக இருந்து காரியங்களைச் செய்ய முடியும். ஒரு செயலின் தன்மை, செய்பவரின் மனவுறுதியில் உள்ளதே தவிர வேறெதிலும் இல்லை. மனவுறுதி இல்லாதவர்கள் சொல்லும் சொல்லை நம்பி எக்காரியத்திலும் ஈடுபடக் கூடாது, உண்மையான விசுவாசிகள் போல நடந்து பகைவர்களுக்கு ஆதரவளிப்பவர்களின் தன்மை விரைவில் வெளிப்பட்டு விடும்.

ஆகவே நம்பிக்கை உள்ளவராக இருங்கள். மற்றவர்களுக்குக் கனவிற் கூடத் துன்பம் செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். அப்படி நினைத்தால், நினைப்பவர்களுக்குத் தான் கேடு உண்டாகும். தெளிவான வலிமையைப் பெற்ற இரண்டு காளை மாடுகள், ஒரு குளத்தில் அருகருகே நின்று தண்ணீர் குடிக்க மாட்டா. அது போல தனது அரசனுக்குத் துன்பம் வந்தால் தன்னுயிரைக் கொடுக்கக் கூடிய போர் வீரன், அரசனுக்குப் பகையானவர்களோடு சேரமாட்டான்."

"நல்லைநாதபுர மன்னனின் குதிரைப் படைத்தளபதி கோவலன். சுத்தமான வீரன். அரசனின் மீது விசுவாசம் உள்ளவன். அவன் மீது அரசன் மிக்க நம்பிக்கை வைத்திருந்தான். இது முதலமைச்சரான சேதுபதிக்குப் பிடிப்பதில்லை. அதனால் இருவரையும் பிரிக்க எண்ணினார். முதலில் கோவலனை அணுகி அவனுக்குப் பதவி ஆசையை ஊட்டினார். அவன் அதற்கு எடுபடவில்லை. அரசனிடஞ் சென்று சொன்னார் ; "அரசே நமது தளபதியைக் கொஞ்சம் கண்காணியுங்கள். அவன் அடிக்கடி மணியூர் சென்று வருகிறான். மணியூரில் அவனது இனத்தவர்கள் இருக்கிறார்கள் தான். இருப்பினும் நாட்டின் பெரிய பதவியில் உள்ளவன் அயல் நாட்டிற்குச்சென்று வந்தால் சில சமயம் பதவி ஆசையால் அந்த நாட்டரசனுடன் சேர்ந்து எமது நாட்டைத் தாக்கவும் கூடும்" என்றார்.

"நல்லைநாதபுர மன்னன் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்தத்தில்லை. இருப்பினும் முதலமைச்சர் காணரமின்றி எதையும்

சொல்ல மாட்டார். கோவலன் சுத்த வீரன். வீரர்கள் பதவியாசை கொள்ள மாட்டார்கள். எனினும் இது பற்றி ஆராய வேண்டும்” என்று முடிவு செய்தான். நாட்கள் சில நகர்ந்தன”.

“அன்று இரவு இனந்தெரியாதவர்களால் கோவலன் மணியூருக்குச் சென்று திரும்பும் போது வழிமறிக்கப்பட்டான். வழி மறித்தவர்கள் ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்த போர் வீரர்கள் என்று கோவலன் உணர்ந்து கொண்டான். அதனால் அவர்களுடன் போரிட்டான். இருபதிற்கு மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்ட பின் கோவலன் கைது செய்யப்பட்டான். அவ்வீரர்களுக்குத் தலைமை தாங்கி வந்தவன் சொன்னான் ; “நீ மாவீரன். அதனால் தளபதியாக இருக்கத் தகுதியற்றவன். நீ அரசனானால் பக்கத்து நாடுகளையெல்லாம் கைப்பற்றிப் பேரரசனாகலாம். நாம் மணிப்புரி வீரர்கள். எமது அரசர் தான் உன்னைக் கைது செய்யும்படி கூறினார். அவருடன் நாகநாதபுர முதலமைச்சரும் சேர்ந்துள்ளார்” என்றான்”.

“கோவலன் பலமாகச் சிரித்தான் ; “நான் வீரன். நம்பியவர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். மணியூர் மன்னர் வீரமானவராக இருந்தால் நம் மன்னருடன் போரிட்டு வெல்வதைவிட்டுக் கோழைகள் போல ஏன் நடந்து கொள்கிறார்? எமது மன்னர் கொடுங்கோலராயிருந்து மக்களுக்குத் துன்பஞ் செய்தால் புரட்சி செய்யலாம். ஆனால் எமது மன்னர் மக்களைத் தன் உயிராக எண்ணி ஆட்சி செய்கிறார். அப்படியானவரை வெல்ல யாராலும் முடியாது. முடிந்தால் எனது கைவிலங்கை அகற்றி

விட்டுப் பாருங்கள்” என்றான். அப்பொழுது காட்டுக்குள்ப் பெரும் சலசலப்பு உண்டானது. அதனால் மணியூர் வீரர்கள் ஓடிவிட்டனர். சிறிது நேரத்தில் நாகநாதபுர வீரர்கள் அங்கு வந்தனர்.”

“மறு நாள் முதலமைச்சர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். நாகநாதபுர மன்னன் உண்மையை அறியத் தனது வீரர்களைக் கொண்டு கோவலனைக் கைது செய்வித்தான். அதன் மூலம் முதலமைச்சரின் தீய செயல்களையும் கோவலனின் நாட்டுப் பற்றையும் உணர்ந்து கொண்டான். ஆகையால் அன்பானவர்களே, வீரர்களாக மிளிர மன உறுதியை ஏற்பட்டுத்திக் கொள்ளுங்கள் . மனவுறுதி உள்ளவன் மனம் மாற மாட்டான்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உற்றால் இறைவற்கு உடம்பு கொடுக்கிற்பான்***
***மற்றவற்கு ஒன்னாரோடு ஒன்றுமோ! – தெற்ற***
***முரண்கொண்டு மாறாய உண்ணுமோ? உண்ணா***
***இரண்டேறு ஒருதுறையுள் நீர்.***

தன் மன்னனிடம் பாசமும், தன் தாய் நாட்டின் மீது பற்றும் உள்ள வீரன், மன்னனுக்கும் நாட்டிற்கும் துரோகம் செய்ய மாட்டான். ‘**உண்ணா இரண்டேறு ஒரு துறையுள் நீர்**’என்பது பழமொழி.

34 “அன்பானவர்களே, இரக்கத்தின் மிகுதியால் நாம் உதவி செய்தாலும், தீயவர்கள் அதை உணராது நன்மை செய்தவர்களுக்

குத் தீமையே செய்வார்கள். நட்பின் உயர்வைக் கருத்திற் கொள்ளாது பயன்கிடைத்த பின் உதவி செய்தவர்களுக்குத் துன்பஞ் செய்பவர் பலர் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். உயிர்க ளைக் கவரும் இயமனானவன் விதித்த ஆயுள் நாளை எண்ணிக் கணக்கிட்டுக் காத்திருந்து, உயிர்களைக் கவர்ந்து செல்வான். அது போலவே கண்ணில் இருக்கும் கருமணியைப் போல அன்பு காட்டிப் பழகிய போலி நண்பர்கள், தமக்கு ஆக வேண்டிய பயன் நம்மால் முடிந்ததும் நம்மைப் பகைவராக்கிக்கொள்வர். இப்படியான வர்களால் எப்பொழுதும் தீமையே வரும். அதனால் இத்தகைய நண்பர்களை விலக்கி வையுங்கள்."

"கடம்பவனம் என்ற காட்டிலே கஜமுகன் என்ற யானையின் தலைமையில் ஊன் உண்ணாத மிருகங்கள் வசித்து வந்தன. அதனால் ஊண் உண்ணும் மிருகங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் இரையைப் பெற்று வந்தன. நரிக்கு உணவு கிடைப்பது அரிதாக இருந்தது. எனினும் மிகவும் சிரமப்பட்டு வாழ்ந்து வந்தது. ஒரு நாள் நரி காட்டில் உள்ள கிணறொன்றில் விழுந்து விட்டது. நெடுநேரமாக அது ஊளையிட்டு அழுதும் யாரும் வரவில்லை. சிறிது நேரத்தில் இதன் நண்பனான சிங்கம் வந்து கிணற்றை எட்டிப் பார்த்தது. அதைக் கண்ட நரி தன்னை காப்பாற்றுமாறு இரந்தது. உணவு தேடவே சோம்பற்படும் சிங்கம் "நான் நண்பர்களை அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டது. அது அதன் பின் வரவில்லை. அதனால் துயரங்கொண்ட நரி பலமாக அழுதது".

"இரண்டு நாட்களாக அது அழுது கொண்டிருந்தது. அப்பொழுது அந்த வழியால் வந்த மான் ஒன்று கிணற்றை எட்டிப் பார்த்தது. கிணற்றின் மேல் இருந்த பெரிய தொரு கல்லில் நரி இருந்து அழுது கொண்டிருந்தது. அதைக் கண்டதும் மானுக்கு இரக்கம் வந்தது. நரி, மானைக் கண்டதும் அழுதழுது சொன்னது ; "அன்பான மானே, நான் இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் கிணற்றில் தவறி விழுந்து விட்டேன். எனது நண்பனான சிங்கம் எனது அவல நிலையைக் கண்டும் உதவி செய்யவில்லை. நான் சிங்கத்திற்குப் பல உதவிகள் செய்துள்ளேன். ஆனால் உங்களுக்குப் பெரும் துன்பங்கள் தான் செய்தேன். அதைக் கருத்திற் கொள்ளாது, எனக்கு உதவி செய், நான் என் உயிருள்ள வரை மறக்க மாட்டேன" என்றது"

"நரி இருந்த நிலையைக் கண்ட மானின் மனதில் இரக்கம் பிறந்தது. எனினும் தலைவனான யானை சொன்ன வார்ததைகள் நினைவுக்கு வந்தன ; "அன்பான எனது நண்பர்களே, தீயவர்கள் ஆபத்தில் மாட்டிக் கொண்டாலும் இரக்கப்பட்டு உதவி செய்யாதீர்கள். அவர்கள் தந்திரமாக எம்மைப் பிடித்து உண்ணவும் தாம் ஆபத்தில் மாட்டிக் கொண்டது போல நடிப்பார்கள். அத்துடன் தமது எண்ணம் நிறைவேறிய பின் பழிபாவங்களுக்கு அஞ்சாது உதவி செய்பவர்களுக்கே தீமை செய்வார்கள். தீயவர்களுக்குச் செய்யும் உதவி ஆபத்தையும் தரும். எமக்கு ஆபத்தாகவும் முடியும்" என்று யானை சொன்னவற்றை நினைத்துப் பார்த்த பின்பும் மானுக்கு

இரக்கமே வந்தது. அதனால் கிணற்றின் துலாவில் இருந்த கயிற்றைப் பிடித்து அதைக் கிணற்றினுள் விட்டது. நரி அக்கயிற்றை வாயால் கௌவிப் பிடிக்க, மான் இழுத்து நரியை வெளியே எடுத்தது. நரி மிகுந்த சந்தோசத்துடன் நன்றி சொன்னது. தூரத்தில் சிங்கம் வருவதை அவதானித்த மான் விரைவாக ஒடியது".

"சிங்கத்தைக் கண்ட நரி ஊழையிட்டுச் சிங்கத்தை அழைத்துச் சொன்னது ;" "அதோ பாருங்கள் அரசே, ஒரு கொழுத்த மான் ஓடுகிறது. கலைத்துப் பிடித்து நீங்கள் உண்டு விட்டு எனக்கும் இறைச்சி தாருங்கள். நான் மூன்று நாட்களாகப் பட்டினி" என்று நரி சொன்னது மானுக்குக் கேட்டது. அது விரைவாக ஓடித் தனது இருப்பிடத்தை அடைந்தது. தான் நரியைக் காப்பாற்றியதை அது யானைக்குச் சொல்லவில்லை. யானை சொன்னது சரி என்று நினைத்தது. ஆகையால் அன்பானவர்களே, ஆபத்திற்கென்றாலும் தீயவர்களுக்குத் தனித்து நின்று உதவக் கூடாது" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்***
***எண்ணும் துணையிற் பிறராகி நிற்பரால்***
***எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்***
***உண்ணுந் துணைக்காக்கும் கூற்று.***

தீயவர்களுடன் பழகக்கூடாது. தீயவர்கள் தமது காரியம் முடிந்ததும் உதவியவருக்கே துரோகஞ் செய்வர் ; **'உண்ணுந் துணைகாக்கும் கூற்று'** என்பது பழமொழி.

35 “அன்பானவர்களே, ஒருவர் எல்லாச் செயலிலும் வல்வராக இருக்க முடியாது. நாம் ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால் அன்புள்ளவர்களாகவும், பொறுமை உள்ளவர்களாகவும், மற்றவர்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். நான் முதலாளி, மற்றவர்கள் என்னிடம் சம்பளம் பெற்றுத் தொழிலைச் செய்து சீவியம் நடத்துபவர்கள் என்று நினைத்தால், நாம் தொடங்கிய செயல் இடை நடுவில் பாதிக்கப்படுவதோடு, நஷ்டமும், அவமானமும், துன்பங்களும் வந்து சேரும். அதனால் ஒரு செயலைத் தாமே திறமையுடன் செய்து முடித்துக் கொள்ளுவதற்கு ஆற்றல் இல்லாதவர்கள், ஆற்றல் உடையவர்களைக் கொண்டு செயல்களைச் செய்து முடிக்கலாம். அப்படிச் செய்விக்கும் போது நாம் செய்பவர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகுதல் வேண்டும். இல்லாவிட்டால் செயலில் திறமையுள்ளவர்கள் இன்னொருவரை நாடிச்சென்று விடுவார்கள். இச்செயல் இரந்து உண்ணும் ஓடாகிய உண்கலத்தை உடைப்பவனின் செயலைப் போன்றது”

“வேலூரில் வாழ்ந்த சேனாதிராஜா என்பவர் நெசவாலை ஒன்றை வைத்துத் துணி வகைகள் செய்ய விரும்பினார். அவருக்கு நெசவு இயந்திரங்களைப் பற்றி எதுவும் தெரியாது. பெருந் தனவந்தனான அவர் கூலிக்கு ஆட்களை அமர்த்தி த் தொழிற்சாலையை நடத்தி வந்தார். அதனால் அவருக்குப் பெரும் இலாபம் கிடைத்தது. பெரும்பணக்காரன் என்பதால் அவர்

தொழிலாளர்களுடன் கடுமையாக நடந்து கொள்வார். இரக்கம் காட்ட மாட்டார். தான் நினைத்தது தான் சரி என்று சொல்வார். இதனால் அத்தொழிற்சாலையில் அடிக்கடி வேலை நிறுத்தம் நடைபெறும். அவ்வேளைகளில் அவர் தொழிலாளர்களிடம் வந்து "என்னிடம் பெருந்தொகையாகப் பணம் உள்ளது. நீங்கள் வேலைக்கு வராவிட்டல் நான் வேலை தெரிந்த வேறு ஆட்களைக் கொண்டு செய்விப்பேன்" என்பார".

"ஆரூரன் இயந்திரத்தை இயக்கும் தொழில்நுட்ப அதிகாரி. அவனது மனைவிக்கு அன்று கடுஞ்சுகவீனம் ஏற்பட்டதால், அவன் அன்று வேலைக்குச் செல்ல வில்லை. தனது மனைவியின் சுகவீனம் பற்றிச் சேனாதிராஜாவுக்கு அறிவித்தான். மூன்று நாட்கள் கழிய அவன் வேலைக்கு வந்த போது அவனது இடத்திற்கு இன்னொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆரூரன் எதுவும் பேசாமல் சென்று விட்டான். அவனின் திறமையைக் கேள்விப்பட்ட இன்னொரு நெசவுசாலை உரிமையாளரான செல்லத்துரை அவனுக்கு கூடியவேதனத்துடன் வேலை கொடுத்தார்."

"புதிதாக வந்தவனுக்கு வேலைகள் தெரியாது. அவன் இயந்திரத்தை இயக்கும் போது அது செயலிழந்து விட்டது. பல நாட்கள் முயன்றும் அந்த இயந்திரத்தைத் திருத்த அவனால் முடியவில்லை. இயந்திரத்தைத் திருத்தக் கூடிய திறமை உள்ளவர்கள் எவரும் சேனாதிராஜாவின் குணம் அறிந்தமையால் இயற்திரத்தைத் திருத்திக் கொடுக்க மறுத்தனர். சேனாதிராஜா

ஆரூரனிடஞ் சென்று ; "உனக்கு முன்பை விடவும் செல்லத்துரை தரும் வேதனத்தை விடவும் அதிகமாகத் தருகிறேன் வந்து வேலை செய்" என்று கேட்டும் ஆரூரன் வரவில்லை. அதனால் அவர் பல மாதங்கள் அத் தொழிற்சாலையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகையால் அன்பானவர்களே, உங்களிடம் ஊதியம் பெற்று தொழில் செய்பவனுக்கும் மனம் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட, நீங்கள் கொடுக்கும் அன்பைத்தான் தொழிலார்கள் விரும்புவார்கள். அத்துடன் தொழில் தெரிந்தவன் எங்கும் பிழைப்பான். அவனை விரும்பி வேலை கொடுக்கப் பலர் காத்திருப்பார்கள்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்***<br>
***தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்டு – ஏமாப்ப***<br>
***முன்னோட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே***<br>
***உண்ஓட் டகலுடைப் பார்.***

திறமையில்லாத ஒருவன், பிறர் துணை செய்தாலும் ஒரு காரியத்தை முடிக்கும் சக்தியற்றவனாகவே இருப்பான். இரந்துண்பவன் தான் இரந்துண்ணும் பாத்திரத்தை உடைப்பது போல இவன் தன் காரியத்தைத் தானே கெடுத்துக் கொள்வான். **'உண் ஓட்டு அகல் உடைப்பார்**' என்பது பழமொழி.

36 "அன்பானவர்களே, சுற்றத்தவர்களானாலும் பயனற்றவர்களானால் அவர்களோடு உறவு வைக்காதீர்கள். ஆனால் அவர்களுக்குத் தேவையேற்படும் போது உதவிகளைச் செய்யுங்கள்.

உதவி செய்யக்கூடிய தகுதிகளிலிருந்தும் கொடுத்துதவுவதால் தமது பொருள் குறைந்து விடுமென்றோ அல்லது தமது உதவியின் மூலம் உதவி பெறுபவன் உயர்ந்து விடுவானென்றோ நினைத்து உதவாதவர்களின் உறவினால் பயன் எதுவும் உண்டாகாது. பிரதியுபகாரத்தை எதிர்பாராது உதவுபவன் தான் மனிதருள்த் தேவன். தன்னை நாடி வந்து சேர்ந்தவரின் துன்பத்தைத் தனது துன்பம் போலக் கருதுதல் வேண்டும். அப்படியல்லாது தமக்கு அவர்களால் துன்பம் வந்து விட்டது என்று நினைப்பவர்கள், உதவி செய்யாததற்காக வருந்துவது வெறும் உமியைக் குற்றி, கை வலிக்கிறது என்று சொல்வது போலாகும்".

"சேனாதிராஜாவின் மனைவியின் சகோதரன் மணியம் . மணியம் விவசாயம் செய்பவன். அதனால் வரும் வருமானம் அவனது குடும்பச் செலவுகளுக்குப் போதாது. அவனது மகன் செந்தூரன் கிராமப் பாடசாலையில் கல்வி கற்று உயர் கல்வி கற்பதற்காகப் பட்டணத்தில் உள்ள பல்கலைக்கழகமொன்றிற்குத் தெரிவாகியிருந்தான். தனது தந்தையின் நிலையை அறிந்த அவன் உயர் கல்வி கற்காது தான் கற்ற கல்வியுடன் தொழில் செய்ய விரும்பினான். ஆனால் மணியம் அதை விரும்பவில்லை. அவர் சேனாதிராஜாவிடம் சென்று தனது நிலையைக் கூறித் தனது மகனின் கல்விச் செலவிற்கு உதவி செய்யும்படி கேட்டார். சேனாதிராஜா கஞ்சன். அத்துடன் எவருக்கும் உதவி செய்யாதவன். செத்தூரன் படித்துப் பெரும் உத்தியோகத்தனானால் தன்னைவிட மணியத்தின் குடும்பம் உயர்ந்து விடுமென நினைத்துச்

சொன்னான்;, "மணியம், நான்கு வருடங்கள் படிக்க வேண்டும். அதன் பின்பே தொழில்தேட வேண்டும். இப்பவே அவன் நன்றாகப் படித்துள்ளான். அதைக் கொண்டு முன்னேறப்பார்" என்று கூறினான்".

'சேனாதிராஜாவைப் பற்றி மணியத்திற்குத் தெரியும். இருந்த போதும் மகனின் கல்விக்காக உதவுவான் என்ற நம்பிக்கையில் சென்று கேட்டான். அவன் இல்லை என்று சொல்லாமல் சொன்னது மணியதிற்குப் பெரும் மனவருத்தத்தைக் கொடுத்தது. வீட்டுக்கு வந்த மணியிடம் துயரத்துடன் உண்ணாது இருந்தான். அவரது துயரத்தை உணர்ந்த மகன் சொன்னான் ; "அப்பா, தான தர்மம் செய்பவர் ஒருவர் இல்லையென்று சொன்னால், துன்பப்படத்தான் வேண்டும். உங்களது துயரம் உமியை உரலிலிட்டுக் குற்றி விட்டு அரிசி இல்லையே என்றும், குற்றிய தால் கை வலிக்கிறது என்றும் சொல்வதைப் போன்றது" என்றான். அதனால் அன்பானவர்களே, உதவி செய்யாதவன் என்று தெரிந்த பின்பு அவனிடம் சென்று உதவி கேட்காதீர்கள். தவறிக் கேட்டும் அவன் உதவி செய்யவில்லை என்று துன்பப்படாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க்கு உற்றது***
***எமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னாம்***
***இமைத்தருவி பொன்வரன்று ஈர்ங்குன்ற நாட!***
***உமிக்குற்றுக் கைவருந்து மாறு.***

சுற்றத்தாருக்குத் துன்பம் வந்த போது உதவி செய்யாதவன் பயனற்றவன். அவன் உதவி செய்வானென நினைத்து அவனிடஞ் சென்று உதவிகோருவது உமி குற்றிக் கை வலிக்கிறது என்று சொல்வது போன்றது **'உமிக் குற்றுக்கை வருந்துமாறு'** என்பது பழமொழி.

37 "அன்பானவர்களே, சிவனும் உமையும் போல உயிரும் உடலும் இரண்டறக் கலந்து ஒன்றாகித் தன்னுடன் நட்புக் கொண்டவரோடு பழகுவது தான் சிறந்த நட்பாகும். அத்தகைய நண்பர்கள் உரிமையோடு செய்யும் செயலை அது இழிவான தென்றாலும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வதே நட்பின் சிறப்பாகும். உரிமை காரணமாக நண்பர் செய்யும் செயலைத் தாம் செய்ததாகக் கருதுவதும் நட்பின் சிறப்பாகும். உரிமை மிக்க நண்பர் ஒருவர் தம்கைக் கேளாமல் அன்போடு ஒரு செயலைச் செய்தால், அந்த அன்பைப் போற்றி, அச்செயலைத் தாமே செய்தது போல ஏற்று மகிழ்வது உயரிய நண்பரது பண்பாகும். தற்செயலாக அச்செயல் தீங்கு விளைவித்தாலும், அது அவர் மீது கொண்ட நட்பின் உயர்வு என்று எண்ணுவது தான் உயர்ந்த நண்பனின் குணமாகும். இதற்காக அந் நண்பரை வெறுப்பதோ, அல்லது வார்த்தைகளால் குறை சொல்வதோ நல்ல பண்பாகாது. எனவே நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் தீமை செய்தாலும் அது உங்கள் நன்மைக்கே என்று புரிந்து கொள்ளுங்கள்."

“வேலூரிலே தணிகாசலம் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் அவ்வூரில் வாழும் ஏகாம்பரம் என்பவரைத் தனது உயிருக்குக் உயிராக நேசித்தார். இருவரும் பிரிவின்றி அன்புடன் நெடுங்காலமாகப் பழகி வந்தனர். தணிகாசலம் பெரும் பணக்காரர். ஏகாம்பரம் பரம ஏழை. இருப்பினும் சாதியில் உயர்ந்தவர். சைவ அனுட்டானங்கள் அனைத்தையும் தவறாது பின்பற்றுபவர். தணிகாசலம் சாதியில் கொஞ்சம் குறைவானவர். சைவ அனுட்டானங்களைப் பெரிதாகப் பின்பற்றாதவர். ஏகாம்பரத்திற்கு ஆறு பெண் பிள்ளைகள். நட்பின் காரணமாகத் தணிகாசலம் பொருட்களைக் கொண்டு சென்று கொடுப்பார். ஏகாம்பரம் வேண்டாமென்றாலும் விடமாட்டார். கொடுத்து விட்டுத் தான் செல்வார். தணிகாசலத்திற்கு இரண்டு ஆண் பிள்ளைகள். ஒருவன் பேர் பெற்ற மருத்துவன். அடுத்தவன் தந்தையோடு சேர்ந்து வியாபாரஞ் செய்பவன்.”

“ஏகாம்பரத்தின் மனைவியின் சகோதரன் அருணாசலம். மிகவும் வசதியானவன். அவனுக்கு நான்கு ஆண்பிள்ளைகளும் ஒரு மகளும் இருந்தனர். அருணாசலத்துடன் தணிகாசலம் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தான். அதனால் அவர்கள் நட்புள்ளவர்களாக இருந்தனர். ஒரு நாள் சிவன் கோயிலில் பிரதோஷ விரதத்திற்காக அருணாசலம் தனது மனைவியோடு வந்திருந்தான். அப்பொழுது தணிகாசலத்திற்கு ஓர் எண்ணம் தோன்றியது. ஏகாம்பரத்தின் மூத்த மகள் கலையரசிக்குத் திருமண வயது வந்து விட்டது. அவரிடம் பொருளில்லா விட்டாலும் உரிமை

காரணமாக அவர் தணிகாசலத்தின் உறவை விடமாட்டார் என்ற நம்பிக்கையில் அருணாசலத்தையும் , மனைவியையும் கேட்டார் ; “உங்கள் சகோதரியின் மகனுக்கு உங்கள் மகளைத் திருமணம் செய்தால் என்ன..?” அப்படித் திடீரென பலர் முன்னிலையில் தணிகாசலம் கேட்பாரென எதிர்பாராத அருணாச்சலம் கோபத்துடன் சொன்னார் ; “ இது பிள்ளைகளின் விஷயம். அவர்களை தான் கேட்க வேண்டும். ஏன் ஏகாம்பரம் கேட்கமாட்டாரோ..? உனக்கு விருப்பமென்றால் உனது மூத்த மகனைச் செய்து கொடன்” என்றார்”.

“அதைக் கேட்டு தணிகாசலம் அதிர்ந்து போனார். விரும்பமில்லாவிட்டால் சமாளிப்பதை விட்டுவிட்டு இப்படிச் சொல்லலாமா..? என நினைத்தவாறு சொன்னார் ; “ எனது பிள்ளைகள் எனது சொல்லைக் கேட்கும். ஏகாம்பரம் விரும்பினால் நான் செய்து கொடுப்பன்” என்றார்”.

“இந்தப் பதிலை அருணாசலம் எதிர்பார்க்கவில்லை. இருந்த போதும் விட்டுக் கொடுக்காமல் சொன்னார்; “ நீ பத்துப் பதினைந்து வருடமாய்ச் சிநேகிதமாக இருக்கிறாய். அவர் உன் மீது பெரும் மதிப்பு வைத்துள்ளார். அதற்காகச் செய்வார்” என்றார். அருணாசலம்”.

“மறுநாள் கோயிலில் நடைபெற்ற சம்பவத்தையும் கேள்விப்பட்டு ஏகாம்பரம் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்து சொன்னார்; “நண்பா, அன்பின் அடிப்படையில் நீண்ட நாள் நட்புக்

கொண்டவர் தமக்குக் கேடு செய்தாலும் அது நன்மையாகவே முடியும். நீ எனக்குக் கேடு செய்ய மாட்டாய். நீ விரும்பினால் எனது மகளை மருமகளாக்கிக் கொள்” என்றார். தணிகாசலம் அதை எதிர்பார்க்கவில்லை. எனக்கு விரும்பம் ஆனால் நீ விரும்புவாயோ என யோசித்தேன். அதனால் தான் நான் கேட்கவில்லை” என்றார். அன்பானவர்களே, உண்மையான நட்புக்குச் சாதி, சமயம், பணம், கௌரவம் என்பன முக்கிய மானவை அல்ல.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்***
***கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே***
***விட்டாங்கு அகலா முழுமெய்யும் கொள்பவே***
***நட்டாரை ஒட்டி யுழி.***

சிறந்த நண்பர்கள் தம்மைப் பிரித்துப் பார்க்கும் இயல்பினை உடையவராக இருக்க மாட்டர்கள் ; **‘உமையாள் ஒருபாலாக் கட்டங்கம் வெல்கொடி கொண்டானுங் கொண்டானே**” என்பது பழமொழி.

38 அன்பானவர்களே, இரகசியங்களைப் பாதுகாத்தல் வேண்டும். அதைச் சொல்லக்கூடாதவர்களுக்குச் சொன்னால், அதனால் பெரும் பெரும் தீமைகள் உருவாகும். நண்பர்களிடையே இரகசியம் இருக்கக்கூடாது. ஆனால் எல்லோரும் நல்ல நண்பர்கள் அல்ல. சிலர் வலியச் சென்று தாம் அறிந்தவற்றைச் சொல்வார்கள். சிலர் வாய் தடுமாறிச்சொல்வார்கள். குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலும் சரி இரகசியத்தைக் கூறும் போது அவர்கள் அவ்

இரகசித்தைப் பாதுகாத்துத் தீங்கில்லாமற் காப்பார்களா என்று தெரிந்த பின்பே கூறுதல் வேண்டும். மானைக் கொன்று இறைச்சியை உண்ண நினைத்தவன் அது தப்பிச் சென்ற பின்பு எண்ணம் நிறைவேறாது கவலைப்படுவது போல ஒருவரின் தகுதியை அறிந்த பின்பே இரகசியத்தைச் சொல்லுதல் வேண்டும்."

'வேலூர் மன்னனின் இரகசியத் தகவல்கள் துறையூர் மன்னனுக்கு உடனுக்குடன் தெரிந்து வந்தது. அதனால் வேலூர் மன்னனுக்கு ஆபத்துக்கள் தேடி வந்தன. வேலூர் மன்னனின் நம்பிக்கைக்குரிய ஒற்றன் நக்கீரன். அவன் மீதும் மன்னர் சந்தேகப்பட்டார். அன்று அரச சபை கூடிய போது மன்னர் தனது இரகசியங்கள் வெளிப்படுவதாகக் கூறிக் கவலைப்பட்டார். சபை முடிவுற்றதும் முக்கியமானவர்களைத் தனித்தனியே அழைத்து "இப்போது அரச சபையில் கூடிக் கதைக்க முடியாதுள்ளது. அதனால் தனித்தனியே எனக்கு வேண்டியவர்களை அழைத்துக் கதைக்கப் போகிறேன்" என்று கூறி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை சொன்னார்; "ஒருவனிடம் துறையூருக்குப் படை எடுக்கப் போகிறேன் என்றும், இன்னொருவருக்கு அரசிளங் குமாரிக்குத் துறையூர் இளவரசனைத் திருமணஞ் செய்து கொடுக்கப் போகிறேன்" என்றும் சொன்னார்".

பத்து நாட்கள் கழிந்த பின் துறையூர் மன்னன் பெண்கேட்டு வேலூருக்கு வந்தான். துறையூர் இளவரசன் வீரம் குறைந்தவன். எதிரிகளுக்குப் பயந்தவன். அதனால் வேலூர் மன்னன் துறையூர்

மன்னனைச் சமாளித்து அனுப்பிவிட்டு அவைப் புலவரைப் பிடித்துப் பாதாளச் சிறையில் அடைக்கச் சொன்னான். அன்பானவர்களே, இரகசியங்களைச் சொல்லக்கூடாதவர்களுக்குச் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் பெரும் தீமைகள் உண்டாகும். எப்பொழுதும் நாம் இரகசியங்களைப் பாதுகாத்தல் வேண்டும். பாதுகாக்கக்கூடியவனுக்கே சொல்லவும் வேண்டும்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***அன்பறிந்த பின்னல்லால் யார்யார்க்கும் தம்மறையே***
***முன்பிறர்க் கோடி மொழியற்க – தின்குறுவான்***
***கொல்வாங்குக் கொன்றபின் அல்லது உயக் கொண்டு,***
***புல்வாய் வழிப்படுவார் இல்.***

தகுதியறிந்த பின்பே இரகசியத்தைச் சொல்லுதல் வேண்டும். **'உயக்கொண்டு புல்வாய் வழிப்படுவார் இல்**" என்பது பழமொழி.

39 "அன்பானவர்களே, பலவீனம் தான் ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும். பலவீனர்களது உறவு துன்பங்கள் பலவற்றை உருவாக்கிப் பின் தன்னையும் அழித்து விடும் தன்மை வாய்ந்தது. எனவே தகுதியற்றவர்களைக் கருமமாற்றும் போது சேர்த்துக் கொள்ளாதீர்கள். தகுதியற்றவரைச் செயல்வீரனென நினைப்பது நெருப்பின் அருகே வைக்கோலைக் குவித்து வைப்பதை ஒக்கும். அதனால் செயலில் திறமையுள்ளவர்களையே உற்ற துணையாகக் கொண்டு கருமமாற்றத் துணிதல் வேண்டும். தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்கள், அரசனுக்கு ஒளி தரும்

கண்களைப் போன்றவர்கள். அதாவது அத்தகையவர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். இல்லா விட்டால் குளிக்கப் போய்ச் சேறு பூசுவதை ஒக்கும்.”

“துறையூர் இளவரசன் பலவீனமானவன். வேலூர் அரசன் பலம் மிக்கவன். நுட்பமான மூளையுடையவன். வேலூர் இளவரசியைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால் தனது மகன் பலமுடையவனாகி விடுவான் எனத் துறையூர் மன்னன் நினைத்தான். அதற்கான சந்தர்ப்பத்தை உண்டாக்குவதற்காகத் தான் துறையூர் சபைக்கு வந்த வேலூர் அரச சபைப் புலவருக்குப் பொன்னும் மணியும் கொடுத்துத் தனது ஆசையை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக்கொண்டான். நக்கீரன் மூலம் உண்மை நிலையை அறிந்த வேலூர் மன்னன் திட்டமிட்டுத் தான் அரசசபைக் கூட்டம் முடிந்த பின் முக்கிய மாணவர்களைத் தனித்தனியே அழைத்து ஒவ்வொரு விடயமாகச் சொன்னான்”.

“இதையறியாத புலவர் வேலூர் மன்னன் தனது மகளைத் துறையூர் இளவரசனுக்குத் திருமணஞ் செய்து வைக்க விரும்புகிறார் என்பதைக் கூறி அதிக பொருள் பெற்றார். மற்றவர்கள் தனித்தனியே அரசன் கூறியதில் ஏதோ பெருங்காரணம் இருக்கிறதென்று நினைத்துத் தமக்கு அவன் கூறியவற்றை மற்றவர்களுக்குச் சொல்லவில்லை. இவற்றை உணரும் ஆற்றலில்லாத புலவர் பொருளாசையால் உடனே சென்று

துறையூர் மன்னருக்குச் சொல்ல , அவன் பெரு மகிழ்வுடன் பெண் கேட்டு வந்தான். தகுதியில்லாதவர்களை, தகுதியானவர்களாக நினைத்துக் கருமமாற்ற அமர்த்தினால் தீமைகள் தான் வரும். இந்த நிலை குளிக்க நினைத்து வண்டிமையினைப் பூசி விகாரமடையும் நிலையைப் போன்றது. அதனால் தான் புலவர் சிறையில் அடைக்கப்பட்டார். புலியூர் மன்னன், துறையூர் மன்னனின் பகைவன். அதனால் வேலூர் மன்னன் புலியூர் மன்னனைத் தூண்டித் துறையூர் மன்னனையும் இளவரசனையும் கொன்று நாட்டைக் கைப்பற்றுமாறு கூறினான். எனவே, அன்பானவர்களே தகுந்தவர்களைச் சேர்ந்து வளமுடன் வாழப் பழகுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தோற்றம் பெரிய நசையினார் அந்நசை***
***ஆற்றா தவரை அடைந்தொழுகல் - ஆற்றுள்***
***கயல்புரை உண்கண் கனங்குழாய்! அஃதால்***
***உயவுநெய் யுட்குளிக்கும் ஆறு***

குளிக்கப் போய்ச் சேறு பூசுதல் போல என்பதற்கு ஒப்பான பழமொழி இது. குளிக்க நினைத்து வண்டி மையினைப் பூசி விகாரமடைபவரை போலத் தகுதியில்லாதவர்களுடன் சேர்ந்தோர் அவமானப்படுவர்.‘ **உயவு நெய்யுட் குளிக்குமாறு**’ என்பது பழமொழி.

**40** அன்பானவர்களே, உருவப் பொலிவு எவரையும் கவரும். வீட்டில் இருக்கும் பெண்கள் எப்பொழுதும் அலங்காரஞ் செய்தவர்களாகவே இருத்தல் வேண்டும். உருவப் பொலிவில்லாத பெண் அலங்காரஞ் செய்வதன் மூலம் பொலிவினையும்,

அழகையும் பெறலாம். திருமணமான பெண்கள் கூடக் குளித்து அலங்காரஞ் செய்து அழகாக இருத்தல் வேண்டும். நெற்றியில் நீறணிந்து திலகமிட்டு, கூந்தலில் பூச்சூடி இருத்தல் வேண்டும். அது போலவே ஆண்களும் பொலிவு மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். விலை மாதர் எப்பொழுதும் தம்மை அலங்கரிப்பதால் தான் சலனபுத்தியுள்ளவர்கள் அலங்காரத்தை உண்மையென நம்பித் தமது பொருட்களை இழக்கின்றனர்".

"மதுகைடவர், திருமாலுடன் போர் செய்யும் போது அவரைச் சுற்றி வளைத்தனர். அப்போது திருமால் பேரொளியாக அவர்களின் முன் நின்றார். ஒப்பற்ற அந்த வடிவழகில் மதுகைடவர்கள் மதி மயங்கினர். அதனால் உருவப் பொலிவு ஒருவனுக்கு வெற்றியைத் தேடித் தரும்."

'கவிதா சுமாரான அழகி. படித்தவள். எந்நேரமும் தன்னை விதம் விதமாக அலங்கரிப்பாள். அவளுக்கு அலங்காரப் பொருட்கள் வாங்கவே அவரது தந்தைக்கு வசதியில்லை. ஒரு நாள் பெரியதொரு நிறுவனத்தில் காசாளர் வேலைக்கு ஆள்த் தேவையென அறிவித்திருந்தார்கள். நூற்றுக்கணக்கானோர் நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தனர். நேர்முகப் பரீட்சைக்கு வந்த அத்தனை பேரின் கண்களும் அடிக்கடி கவிதாவின் எழிலைப் பார்த்து ரசித்தன. அவள் நேர்முகப் பரீட்சைக்காக உள்ளே சென்றாள். மேலாளர் அவளின் கவர்ச்சியில் மயங்கினார். அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று

அவருக்குத் தோன்றியது. அதனால் அவர் அவளுக்கு அந்த வேலையைக் கொடுத்தார். சில மாதங்களின் பின் அவர் அவளைத் திருமணம் செய்து கொண்டார். அவள் அந்த நிறுவனத்திற்கு உரிமையாளரானாள். புராணத்தை எடுத்து நாம் ஆராய்ந்தாலும் அதில் திருமால் அழகிய மோகினி வடிவம் எடுத்து நின்ற போது அசுரர்களுடன் சிவனும் அந்த அழகை மோகித்தார். எனவே எந்நாளும் எப்பொழுதும் நீங்கள் உங்கள் உருவ அழகைக் கவனித்தல் வேண்டும். உருவம் கவர்ச்சியாக இல்லாதவிடத்தும் அலங்காரம் உருவத்தைக் கவர்ச்சிப்படுத்தும்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***வாட்டிற லானை வளைந்தார்கள் அஞ்ஞான்று***
***வீட்டிய சென்றார் விளங்கொளி – காட்டப்***
***பொருவறு தன்மைகண்டு அஃதொழிந்தார்; அஃதால்***
***உருவு திருவூட்டு மாறு.***

உருவத்தோற்றம் எவ்வேளையிலும் கவர்ச்சி உடையதாக இருத்தல் வேண்டும். அதனால் நன்மைகள் பலவும் உண்டாகும். **'உருவு திருவூட்டு மாறு'** என்பது பழமொழி.